# பொருளியல் நோக்கு

ஆகஸ்ட்
1993

## அரசும் அரசியலும்

## இன்றைய இலத்தீன் அமெரிக்கா விலிருந்து ஒரு நோக்கு

அலஜன்டாரோ பென்டானோ

## வங்கித் தொழிலின் வருங்காலம்

அடல்பஸ் ஜே. டோபி

மற்றும்

## உலக அபிவிருத்தி அறிக்கை 1993

மக்கள் வங்கி வெளியீடு

# முன்னோட்டம்

குறிப்பாக முன்னைய சோவியத் யூனியனிலும் கிழக்கைரோப்பிய நாடுகளிலும் நிலவிவந்த சோஷலிஸத்தின் வீழ்ச்சியினையடுத்து, கடந்த சில வருடங்களில், "அரசு எதிர் சிவில் சமூகம்" என்ற விவாதம் புதியதொரு முனைப்பினைப் பெற்றுக் கொண்டுள்ளது. சிவில் சமூகத்தின் முக்கியத்துவம் குறித்துப் பேசுவது இப்பொழுது புத்திஜீவிகளின் ஒரு புதிய மோஸ்தராக உருவெடுத்துள்ளது. அரசுக்கும் சிவில் சமூகத்துக்கும் இடையிலான பிரிவு இப்பொழுது பொதுவாக கறுப்பாகவும் வெள்ளையாகவும் - அதாவது, நன்மைக்கும் தீமைக்கும் எதிரான ஒரு போராட்டமாக - சித்திரித்துக் காட்டப்பட்டு வருகின்றது. அரசியல், சமுதாயம், பொருளாதாரம் மற்றும் சமூகம் என்பன எதிர்நோக்கி வரும் நெருக்கடிகள் அனைத்துக்கும் அரசின் மீதே பழி சுமத்தப்பட்டு வருகின்றது. அதேவேளையில், இந்த நெருக்கடிகள் அனைத்துக்குமான சர்வரோக நிவாரணியாக "சிவில் சமூகத்தைப் பலப்படுத்துதல்" என்ற விடயம் முன்னணிக்கப்பட்டு வருகின்றது.

சிவில் சமூகத்தின் முக்கியத்துவம், ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதிலும், நிலைநிறுத்தச் செய்வதிலும் அது வகித்து வரும் பங்கு மற்றும் அரசுக்கு இடையில் ஒரு சமநிலையை எடுத்துவரும் அதன் ஆற்றல் என்பவற்றை எவரும் மறுத்துவிட முடியாது. ஆனால், சிவில் சமூகத்தையும் மற்றும் அதன் கூறுகளையும் (அவை அரசு சாரா அமைப்புக்களாக இருந்தாலும் சரி அல்லது சமூக இயக்கங்களாக இருந்தாலும் சரி) ஜனநாயகத்துக்கும் சமூக நீதிக்குமான போராட்டத்தின் முன்னணிப் படையணியாக கருதி வரும் புத்திஜீவிகளின் இன்றையப் பித்து சரியானதென்பது இதன் பொருளல்ல. வெறித்தனம் பிறபோக்கு மற்றும் ஏகாதிபத்தியவாத சார்பு நிலை என்பன அரசின் ஏகபோகமாக மட்டும் இருந்து வரவில்லை. சிவில் சமூகத்திலும் அவை நிலவி வருகின்றன. உண்மையிலேயே இந்தத் தன்மையைக் கொண்ட சில போக்குகள் சிவில் சமூகத்திலிருந்தே தோற்றம் பெறுகின்றன. இதனை இலங்கையினதும் ஏனைய பல நாடுகளினதும் சரித்திரம் மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

பொருளாதாரத்திலும் அபிவிருத்தி நிகழ்வுப் போக்கிலும் அரசாங்கம்/அரசு வகித்து வரும் பங்கு குறித்த கடுமையான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. கைத்தொழில்மயமாக்கல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றின் பாதையில் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க கண்டங்களைச் சேர்ந்த நாடுகளைப் பொறுத்தவரையில் இந்த விடயம் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. உண்மையில் நிலவிவரும் சோஷலிஸம் உலகளாவிய ரீதியில் கண்ட தோல்வி, வளர்முக உலகுக்கான மாதிரியொன்றாகவும், உபாயமொன்றாகவும், அரச முதலாளித்துவமும், அரச சோஷலிஸமும் இருந்து வந்த நிலையை முடிவுக்குக் கொண்டு வந்தது. எனினும், கிழக்காசியாவின் புதிதாகத் தொழில் வளர்ச்சி கண்ட நாடுகளின் (குறிப்பாக தென் கொரியா மற்றும் தாய்வான் போன்ற நாடுகளின்) அனுபவம், பொருளாதாரத்திலும் அபிவிருத்தி நிகழ்வுப்போக்கிலும் அரசு/அரசாங்கம் இன்னமும் முன்னணிப் பங்கொன்றினை வகித்து வர வேண்டியுள்ளது என்பதனை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. "பெருமளவுக்கு மத்தியமயப்படுத்தப்பட்ட அரசாங்க வழிகாட்டுதலின் கீழ் செயற்பட்டு வரும் தனியார் தொழில் முயற்சிகளிலேயே கொரியப் பொருளாதாரம் பெருமளவுக்குத் தங்கியுள்ளது. கொரியாவைப் பொறுத்தவரையில், பரந்த அடிப்படையிலான விதிமுறைகளை வகுத்து, சந்தைச் சக்திகளுக்கூடாக மறைமுகமாக பொருளாதாரத்தின் மீது செல்வாக்குச் செலுத்துவதிலும் பார்க்க அரசாங்கத்தின் பங்கு, கணிசமான அளவுக்கு நேரடியானதாகவே இருந்து வருகின்றது. உண்மையிலேயே அரசாங்கம் ஒரு பங்கேற்கும் அமைப்பாக இருந்து வருவதுடன், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அனேகமாக அனைத்து வர்த்தகத் தீர்மானங்களிலும் தீர்மானகரமான ஒரு பங்கினை வகித்து வருகின்றது" என உலக வங்கியைச் சேர்ந்த பார்வேஸ்ஹஸன் எழுதியுள்ளார். எனவே, "கிழக்காசிய வேங்கைகள்" தொடக்கப் புள்ளிகளாக கவனத்தில் எடுக்கப்படுமேயானால், "அரசு நடத்திச் செல்லும் திறந்த சந்தைப் பொருளாதாரம்" என்ற முடிவு தவிர்க்க முடியாததாகின்றது. இந்தப் பின்னணியில், வளர்முக உலகின் ஏனைய நாடுகளின் முன்னிலையில் இந்தப் பொருளாதார மாதிரியே வைக்கப்படுகின்றது.

"பொருளியல் நோக்கின்" ஆகஸ்ட் இதழின் சிறப்புக் கட்டுரை நிகாராகுவாவைச் சேர்ந்த அல ஜன்டாரோ பென்டானா எழுதிய "தாராளவாதம், அரசு, கட்சிகள் மற்றும் சமூக இயக்கங்கள் - இலத்தீன் அமெரிக்க இடதுசாரி இயக்கத்துக்கான ஒரு நோக்கு" என்பதாகும். இக்கட்டுரை "அரசு எதிர் சிவில் சமூகம்" விவாதத்திலிருந்து தோன்றும் சில அம்சங்களையும், பிரச்சினைகளையும் கவனத்திலெடுக்கின்றது. "ஜனநாயகமயமாக்குதல் ஸ்திரமின்மையை எடுத்துவருவதற்கு இணையானதாகும்" என்ற விதத்தில் தற்பொழுது பரவலாக நிலவிவரும் அபிப்பிராயத்தினை அவர் எதிர்க்கின்றார். அபிவிருத்தி நிகழ்வுப்போக்கில் தனக்குரிய பங்கினை வகிக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கும் உறுதியான அரசொன்றினை அவர் ஆதரித்துப் பேசுகின்றார். "எமது நாடுகள், இன்றைய நிலையில் இருந்து வரும் கட்டத்தில், ஜனநாயகம் அரசினைப் பலவீனப்படுத்தும் ஒரு விடயமாக இருக்க முடியாது" என அவர் மிகச் சரியாகவே சுட்டிக் காட்டுகிறார்.

தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பெருமளவுக்கு அக்கறையைத் தூண்டிவிட்டுள்ள ஒரு விடயத்தை அடுத்த சிறப்புக் கட்டுரை கவனத்திலெடுக்கின்றது. அடொல்பஸ் ஜே. டோபி எழுதியுள்ள "வங்கித்துறையின் வருங்காலம்" என்ற கட்டுரை, பெருமளவுக்குப் பொருளாதாரக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, போட்டியினை அதிகரிக்கச் செய்துள்ள பல நாடுகளின் வங்கித்துறை இன்று எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை ஓரளவுக்கு எடுத்து விளக்குகின்றது.

இந்த இதழில், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் சமீபத்திய அறிக்கையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளையும் தந்துள்ளோம்.

மலர் 19 இதழ் 5 ஆகஸ்ட் 1993

# பொருளியல் நோக்கு

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 2.
இலங்கை.

## உள்ளே

| | | |
|---|---|---|
| அடலப்ஸ் ஜே. டோபி | 6 | வங்கித் தொழிலின் வருங்காலம் |
| | 17 | ஐ நா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் |
| ஹன்ஸ் கே. ஹோயர் | 30 | சமூக மாற்ற நிகழ்வுப்போக்குக்கான கருத்துக்கள் |

### விசேஷ அறிக்கை

### தாராளவாதம், அரசு, கட்சிகள் மற்றும் சமூக இயக்கங்கள்

| | | |
|---|---|---|
| எஸ். எம். கருணாரத்ன | 14 | நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி - சில உத்திகள் |
| அலஜன்டாரோ பெனடானோ | 2 | தாராளவாதம், அரசு, கட்சிகள் மற்றும் சமூக இயக்கங்கள் |

அடுத்த இதழில்

- 1990 களுக்கான சர்வதேச அபிவிருத்தி உபாயங்கள்
- இலங்கையில் நகரத்துறையில் ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்கள்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவு-களையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் முழு ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதி-பலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும்., அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்-களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

# தாராளவாதம், அரசு, கட்சிகள் மற்றும் சமூக இயக்கங்கள்

## இலத்தீன் அமெரிக்க இடதுசாரி இயக்கத்திலிருந்து ஒரு நோக்கு

அலெஜென்டாரோ பென்டானா

தாராளமயமாக்கல் நிகழ்வுப் போக்கின் ஒருங்கிணைந்த ஒரு பாகமான "அரசு அமிழ்ந்து செல்லல்" என்ற அம்சத்தின் பின்விளைவுகள் ஒட்டுமொத்தமாக அரசியலிலும் சிவில் சமூகத்திலும் பேரளவிலான · ஒரு தாக்கத்தை எடுத்து வருகின்றன. அநேகமாக இன்று வடபுல உலகமும், அதேபோல தென்புல உலகமும் எதிர்நோக்கியிருக்கும் சவால், நடவடிக்கைக்காக பெருமளவில் எழுப்பப்பட்டு வரும் சமூகக் கோரிக்கைகளை நிறைவு செய்யக்கூடிய அரசின் செயல்திறனை மீளப் பெற்றுக்கொள்வதாகவே இருக்கும். "ஜனநாயக மய மாக்கல் என்பது, அதனுடன் இணைந்த வகையில் அரசினை இல்லாமல் செய்யும் ஒரு நிகழ்வுப்போக்கினை எடுத்து வரக்கூடியது" என்ற கருத்தினை நாங்கள் ஒரே அடியாக நிராகரித்துவிட வேண்டும். அரசியல் தாராளமயமாக்கல் என்பதனை, அது இயல்பிலேயே அரசின் பங்கினைக் குறைத்துவிடும் என்ற எண்ணத்தில் நாம் முன்னெடுத்துச் செல்ல முடியாது.

ஏற்கனவே இருந்து வந்துள்ள – இப்பொழுதும் கூட நிலைத்துவரும் – பாரிய, செயல்திறனற்ற, ஊழல் மலிந்த பொதுத்துறை அமைப்புக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எத்தகைய தர்க்க ரீதியான விவாதங்களையும் முன்வைக்க முடியாது. அரசினைப் பலப்படுத்தும் பொருட்டு, அரசின் அளவினைக் குறைப்பது நியாயமான ஒரு நடவடிக்கையாகவே இருக்கும். அத்தகைய ஒரு நிலையில், அரசு ஊளைச் சதையற்றதாகவும், அதேவேளையில் சக்தி வாய்ந்ததாகவும் உருவாகி, அதற்குரிய அத்தியாவசிய அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். எமது நாடுகளில், இன்றைய கால கட்டத்தில், ஜனநாயகம் அரசினை பலம் குன்றச் செய்யும் ஓர் அம்சமாக இருக்க முடியாதென்பதே இதற்கான காரணமாகும்.

அதேவேளையில், அபிவிருத்திப் பணிகளுக்கான பொறுப்புக்களை அரசு கைகழுவிவிட்டு, அவற்றை அரசு சாரா அமைப்புக்களிடம் வெறுமனே கையளித்து விடவும் முடியாது. உள்ளூர் ஜனநாயகம் மற்றும் அடிமட்ட நிறுவன அமைப்பு என்பவற்றின் பெயரில் அரசு இதனைச் செய்து விட முடியாது. உள்ளூர் ஜனநாயகம் மற்றும் அடிமட்ட நிறுவனங்களின் அபிவிருத்தி முயற்சி என்பன ஒட்டுமொத்தமாக ஒரு தேசத்துக்கான ஜனநாயகத்தையும், அபிவிருத்தியையும் எடுத்து வந்து விடுவதில்லை. அது அவ்விதமாக இருந்தால், பிலிப்பைன்ஸ், கௌதமாலா அல்லது கென்யா போன்ற நாடுகளில் ஜனநாயகங்கள் செழித்தோங்கியிருக்க வேண்டும்.

எவ்வாறிருந்தபோதிலும், "அரசு அமிழ்தல்" என்பது, உத்தியோகபூர்வ நிர்ப்பந்த கருவிகளில் தாக்கத்தை எடுத்து வருவதனையடுத்து, கோட்பாட்டு ரீதியாக சிவில் சமூகத்துக்கும் வெகுசன இயக்கங்களுக்கும் பாரிய ஒரு தளத்தினை அது எடுத்து வருகின்றது. பொருளாதாரத் தாராளமயமாக்கல், அதனுடன் இணைந்த வகையில், பெருமளவிலான அரச நிறுவனங்களை சர்வதேச அமைப்புக்களுக்கு கைமாற்றிக் கொடுக்கும் ஒரு நிகழ்வுப்போக்கினை பொருளாதார நவீன மயமாக்கல் என்ற பெயரில் எடுத்து வருகின்றது. அதேவேளையில், அரசியல் தாராளமயமாக்கல் அதனுடன் இணைந்த வகையில், ஓரளவுக்கு சமூக இயக்கங்களுக்குச் சக்தியினைக் கொடுக்கின்றது.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் இராணுவ ஆட்சியின் கீழ் இருந்த சக்தி வாய்ந்த அரச அமைப்பு சமூக இயக்கங்களை நசுக்கியதுடன், அரசியல் கட்சிகளின் தலைமையையும் ஒடுக்கியது. அந்தக் கால கட்டத்தில் நினைத்துப் பார்க்கவே முடியாதிருந்த ஒரு புதிய வாய்ப்பு இப்பொழுது உருவாகியுள்ளது.

அரசியல் தாராளமயமாக்கலானது, வெகுசன இயக்கங்களும் தொழிற்சங்கங்களும் பகிரங்கமாக தமது கொள்கைகளை ஆதரித்துப் பேசுவதற்கும், தம்மை ஒன்று திரட்டிக் கொள்வதற்கும், வளர்ச்சியடைவதற்குமான அர்த்தபுஷ்டியான ஒரு வாய்ப்பினை முன் வைத்துள்ளது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், சட்ட மன்றங்களும் பிரதேச மற்றும் உள்ளூர் ஆட்சி அமைப்புக்களும் அடிமட்ட நிறுவனங்களுடன் சம்பந்தப்பட்டிருந்த சக்திகளுக்கு இடமளிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு வந்துள்ளன. பல நாடுகள் அவற்றின் வரலாற்றில் முதல் தடவையாக உண்மையான பன்முகத் தன்மையை அறிமுகம் செய்து வைத்தன.

இன்று இடதுசாரி இயக்கத்தின் முன்னிலையில் உள்ள முதன்மையான அறைகூவல், இருபதாம் நூற்றாண்டின் தாரான பொருளாதார நடவடிக்கைகளின் மத்தியில், பத்தொன்பதாம்

நூற்றாண்டின் லிபரல்வாதக் கருத்துக்களை நிலை நிறுத்துவது எப்படி என்பதாகும். 1930களின் எதேச்சாதிகார மற்றும் வெறும் வெகுசன கவர்ச்சி சுலோகங்களைக் கொண்ட அரசியல் முறைகளுக்கு எந்த வகையிலும் நாம் மீண்டும் திரும்பிச் சென்றுவிடக்கூடாது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், சுதந்திரமான தேர்தல்கள், அடிப்படை மனித உரிமைகள் மற்றும் தாம் கொண்டிருக்கும் அரசியல் கருத்துக்கள் காரணமாகத் துன்புறுத்தலுக்குஇரையாகாது இருத்தல் என்பன தொடர்பான நமது அர்ப்பணிப்புக்களை இந்த வாக்குறுதிகள் முழுமையாக நிறைவு செய்யாதிருந்த போதிலும் கூட அவற்றை நாம் கைவிட்டுவிட முடியாது. இராணுவத் தலையீடுகள் மலிந்த சகாப்தமொன்றை நாம் தாண்டி வந்துள்ளோம். முன்னைய இராணுவ ஆட்சிகள் பொருளாதார அழிவினை எடுத்து வந்தன என்பதை மக்கள் நினைவில் வைத்திருக்கின்றார்கள்.

"சம்பிரதாயபூர்வமான ஜனநாயகங்களை நிலைத்திருக்கச் செய்வதற்காக மட்டும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் பொருளாதார அழிவுடன் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுதல் வேண்டும்" என்பது இதன் பொருளல்ல. உலகளாவிய ரீதியில் அதிகார தொடர்புகள் எந்த அளவுக்கு சாதகமற்றவையாக இருந்து வந்த போதிலும், உலகளாவிய சந்தை அமைப்புக்கள் வளைந்து கொடுக்காதவையாக இருந்து வந்தபோதிலும், வெகுசன இயக்கங்கள் தமக்கு மிகவும் சாதகமான ஒரு சூழ்நிலை உருவாகும் வரையில் தமது அரசியல் நிலைப்பாட்டினை மட்டும் வைத்திருப்பதற்கு வெறுமனே முடிவு செய்து விட முடியாது.

இன்றைய நவீன சந்தையின் செயற்பாடுகள் மற்றும் அதன் விரிவான தாக்கங்கள் என்பவற்றின் பின்புலத்தில் நின்று நோக்கும்பொழுது, "வெறுமனே நின்று பார்த்துக் கொண்டிருப்பது" என்பது பின்னோக்கிய பயணத்தை மேற்கொள்வதற்கு இணையானதாகும். ஒவ்வொரு நாளும் மனச்சாட்சியும், அதேபோல அரச அதிகாரமும் நலிவுற்றுக் கொண்டே செல்கின்றது. நேரம் எமக்குச் சாதகமானதாக இருக்கவில்லை. புதிய உலக ஒழுங்குக்கான மிகவும் தீவிரமான சித்தாந்த மற்றும் அரசியல் அறைகூவல்களை அரசியல் தலைமை உருவாக்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

தாராளவாதத்தின் புரட்சிகர உள்ளார்ந்த ஆற்றலுக்கு புத்துயிரூட்டுவது ஒரு முதல் படியாக இருக்கும். அதனை அதன் முழு அளவிலான சோஷலிஸ பாதைக்கு எடுத்துச் சென்று, "ஜனநாயகத்தின் பயன்கள் முழு சமூகத்துக்கும் கிட்ட வேண்டும்" என நம்பும் அனைவரையும் ஒன்று திரட்ட வேண்டியுள்ளது. குறிப்பாக, இந்த விடயத்தில் பொருளாதார அம்சங்கள் குறித்து அதிகளவுக்குக் கவனம் செலுத்த வேண்டும்.

## செய்ய வேண்டியதென்ன?

வெகுசனத் துறைகளை எதிர்நோக்கியுள்ள பணி இன்றைய வரலாற்றுத் தேவையாக உள்ளது. அதிருப்தியுற்றிருக்கும் மக்கள், "பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம்" அல்லது "முன்னணிப் போராளிக் கட்சி" என்ற கருத்தைச் சுற்றி அணி திரளாமல் இருக்கக் கூடும்; ஆனால், அதே வேளையில், அவர்கள் சதாகாலமும் சிதறுண்டு போனவர்களாகவும் இருக்க மாட்டார்கள். மேலும், மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும் புதிய நிறுவன வடிவங்கள் அவசியமாகவே முற்போக்கானவையாக இருக்கும் என்பதற்கும் எவ்வித உத்தரவாதமுமில்லை. உலகின் வேறு சில பாகங்களில், அதிருப்தியடைந்த மக்களின் சமூக எழுச்சிகள் நாசம், வெறுப்பு, இனவாதம், அதிதீவிர தேசியவாதம், வெறித்தனம் மற்றும் அடிப்படைவாதம் போன்ற விரும்பத்தகாத வடிவங்களைப் பெற்றுள்ளன.

இலத்தீன் அமெரிக்காவைப் பொறுத்தவரையில், வன்முறை அப்பிராந்தியத்தின் மக்களுக்கு ஒரு புதிய விஷயமாக இருக்கவில்லை. இம்மக்கள் பிரிவினர் நீண்ட காலமாக வன்முறையுடன் கூடிய அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டு வந்திருந்த போதிலும், இங்குள்ள வெகுசன இயக்கங்கள் வர்க்க வெறுப்பின் அழிவுகரமான வெளிப்பாடுகளைக் காட்டவில்லை. தாராளவாதத்துக்கு எதிரான கலவரம் மத உணர்வுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வடிவத்தைப் பெறக் கூடும்; அல்லது வெறுப்பு இயக்கங்களான "சென்டோரோ லுமினோசோ" போன்றவற்றுக்கு புதிதாக உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்படக் கூடும். ஆனால், இது ஒரு விதிவிலக்கு மட்டுமேயாகும்.

சில இயக்கங்கள் மேற்கொண்டு வரும் வரலாற்றுரீதியான லிபரல் பாரம்பரியம் குறித்தும் இங்கு சாதகமாக குறிப்பிட வேண்டியுள்ளது. இந்த இயக்கங்கள் மிக முக்கியமான புரட்சிகரமான மாற்றங்களை எடுத்து வந்துள்ளன. தீவிர இடதுசாரிகளும் அதே போல (குறிப்பாக இராணுவங்களில்) தீவிர வலதுசாரிகளும் இருந்துள்ளார்கள் என்பது உண்மையாகும். இவர்கள் ஒன்றில், மார்க்ஸிஸ – லெனினிஸ அடிப்படையில் அல்லது தேசிய பாதுகாப்பு சித்தாந்த அடிப்படையில் நின்று, அரசியலிலும் சிவில் உரிமைகளிலும் வலியுறுத்தப்பட்டு வரும் லிபரல் வாதத்தின் மீது தாக்குதல் தொடுத்துள்ளனர்.

கெடுபிடி யுத்தம் லிபரல் வாதத்திலும் அதேபோல மார்க்சிஸத்தின் மீதும் ஒரு சித்தாந்த ரீதியான பிடியினை செயற்கையான முறையில் திணித்திருந்தது. இப்பொழுது அந்தப் பிடி முழுவதும் தளர்ந்து போயுள்ள ஒரு நிலையில், கோட்பாட்டு ரீதியான மற்றும் அரசியல் ரீதியான ஒரு மீள் இணக்கம் உருவாக முடியும் என்று ஒருவர் எதிர்பார்க்கலாம். முன்னைய, அரசினை அடிப்படையாகக் கொண்ட பரீட்சார்த்தம் தனி நபரைப் பொறுத்த வரையிலும், அதேபோல சமூகத்தைப் பொறுத்தவரையிலும் அடக்கு முறையுடன் கூடிய ஒன்றாக இருந்து வந்தது. சோஷலிஸ அணுகுமுறை இந்தத் தவறுகளிலிருந்து படிப்பினைகளைப் பெறக் கூடியதாக இருந்தால், முதலாளித்துவம், அரசு தலையீடு இல்லாத சந்தையொன்றின் செயற்பாடு தொடர்பாக இத்தகைய ஒரு திருத்தப்பட்ட நிலையை தோற்றுவிக்க முடியுமா? இந்த அணுகுமுறையும் கூட சமூக அடிப்படையில் அடக்கு முறையுடன் கூடியதாக இருக்குமா?

இது பேர்ன்ஸ்டீன் மற்றும் மேற்கு ஐரோப்பிய சமூக சனநாயக வழியை மீண்டும் கண்டுபிடிக்க வேண்டுமென்பதனை ஆதரித்துப் பேசுவதைக் குறிக்கவில்லை. எமது கண்டம் மிகவும் வித்தியாசமான ஒரு வரலாற்றுக் கணத்தில், வித்தியாசமான சக்திகளின் அணிவரிசையைக் கொண்டுள்ள ஒரு கண்டமாக இருந்துவருகின்றது. இந்தப் பிராந்தியத்தில், முதலாளித்துவத்தின்

அனுதாபிகள் சமூக ஏற்றத்தாழ்வு குறித்த பிரச்சினையை தீர்க்கும் விதத்தில் திருப்திகரமான ஒரு தீர்வை எடுத்து வரத் தவறியுள்ளார்கள்.

வெனிசூலா, பெரு மற்றும் பிரேசில் போன்ற நாடுகளின் அண்மைக்கால நிகழ்வுகள், குறிப்பாக இளைஞர்களிடையே பெருகி வரும் விரக்தி நிலைமையை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சமத்துவம் குறித்துப் பேசப்பட்டு வந்தபோதிலும், நடைமுறையில் அது நிலைநிறுத்தப்படுவதில்லை. ஜனநாயகத்துக்கும் பல கட்சி தேர்தல் முறைக்கும் இடையே இந்த சமத்துவம் எடுத்து வரப்படும் என்று கூறப்படுகிறது. ஸ்தாபிதமான கட்சிகளுக்கும் ஊழலுக்குமிடையே ஒரு சமநிலை நிலவி வருகின்றது என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகள் மீதான வெறுப்பு வரவர பெருகி வருகின்றது. சிலர் இதனை, "ஜனநாயகத்துக்கான ஒரு அச்சுறுத்தல்" என பொருள் விளக்கம் தருகின்றனர். "பல கட்சி அரசியலின் போட்டி ஜனநாயகத்துக்கு இணையானது" என்பதே எடுகோளாக எடுக்கப்படுகின்றது. சமூகத்தின் அடிமட்டத்தில் ஜனநாயகத்துக்கான அர்ப்பணிப்பு உறுதியாக இருந்து வந்துள்ளதுடன், இதற்கு முரணான விதத்தில், ஸ்தாபிதமான கட்சிகளின் நடவடிக்கைகள் அச்சுறுத்தல் தருவனவாக உள்ளன. தொடர்பு சாதனங்கள் - குறிப்பாக தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் - இப்பொழுது பரவலான அளவில் வெகுசனங்களை சென்றடையக் கூடியனவாக உள்ளன. ஐக்கிய அமெரிக்காவின் அல்லது பாரம்பரியக் கட்சிகளின் அனுசரணையின் கீழ் இருந்துவரும் வரையறுக்கப்பட்ட ஜனநாயகத்தின் மீது இந்த ஊடகங்கள் புதிய அறநெறி சார்ந்த கோரிக்கைகளை முன்வைக்கின்றன.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், ஊழல் சகிக்க முடியாத ஒன்றாக ஆகி விடுகின்றது. ஏனெனில், ஊழல் பேர்வழிகள், (சமூகத்தின் நடுத்தட்டு மக்களினதும் இராணுவத்தினதும்) வாழ்க்கைத் தரங்களைப் பாதிக்கக் கூடிய சிக்கன நடவடிக்கைகளை வேண்டி நிற்கின்றார்கள். வெற்றிகரமான அமைப்பு ரீதியான சீராக்கல் அல்லது சுதந்திரச் சந்தைச் சீர்திருத்தம் என்பன, அவற்றுக்கு முன் நிபந்தனையாக, ஒரு சட்டபூர்வ தன்மையை அவசியப்படுத்துகின்றன. ஆனால், அந்த சட்டபூர்வத்தன்மை இங்கு காணப்படவில்லை. இதன் விளைவாக, வீதிகளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

எவ்வாறிருப்பினும், இந்த அதிருப்தி நிலை தார்மீக விடயங்களையும் தாண்டிச் சென்று விடுகின்றன. வறியவர்களின் செலவில் செல்வத்தை உருவாக்குவதன் மூலம் வறுமையைக் குறைத்துவிடும் சூத்திரம் பொருளாதார ரீதியில் செயற்படமாட்டாது. மேலும், அரசியல் ரீதியில் அது அழிவுகரமானதாகவும் இருக்கும். இதன் பின்விளைவுகளை ஐக்கிய அமெரிக்கா புறக்கணித்து விட முடியாது. இலத்தின் அமெரிக்காவுக்கு இப்பொழுது பெருமளவுக்குத் தேவைப்படும் பொருளாதாரச் சீராக்கத்தினை இந்த வறுமை நிலை பங்கப்படுத்தி வருவதாக ஐக்கிய அமெரிக்கா கருதுமேயானால், அது, இதன் பின்விளைவுகளை புறக்கணித்து விட முடியாது. இந்த பொருளாதார சீராக்கல் முயற்சி இப்பொழுது ஆபத்தை எதிர்நோக்கியிருந்தால், இலத்தீன் அமெரிக்க சந்தைகளின் வளர்ச்சிக்கென ஐக்கிய அமெரிக்கா உருவாக்கிக் கொடுக்கும் எந்தவொரு பொருளாதார மீட்சி உத்தியும் ஆபத்தை எதிர்நோக்கியதாகவே இருக்க முடியும்.

மேலும், கால தாமதம் ஏற்படுவதற்கு முன்னர் இந்நிலைமையைத் திருத்திக் கொள்வதற்கு ஏதேனும் வாய்ப்பு உள்ளதா? கார்லோஸ் அன்ரீஸ் பெரேஸின் கூற்றின் படி, "இதற்கு வாய்ப்பில்லை" "புரட்சிச்சதி முயற்சிக்குப் பின்னர் தன்னுடைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்ந்தும் வெற்றியளித்து வருவனவாகவுள்ளன" என்ற முடிவுக்கு அவர் வந்துள்ளார். ஆனால், இந்த விடயம் குறித்து மக்களைத் திருப்தி அடையச் செய்யும் விடயத்தில் அவருடைய தொடர்பு சாதனங்கள் தோல்வி கண்டுள்ளன.

புதுப்பிக்கப்பட்ட சோஷலிச செயல்முறையும் சிந்தனையும் லிபரல்வாதிகளுக்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கண்டு கொள்வதற்கு உதவ முடியும். உண்மையிலேயே, சிவில் உரிமைகளும் அரசியல் உரிமைகளும் சந்தையின் போக்குகளுக்கு இரையாகாமல் இருக்க வேண்டுமானால், எம் முன்னுள்ள ஒரே வழி அதுவாகும். இல்லாவிட்டால், ஜனங்களை ஏமாற்றும் வெற்றுக் கோஷங்களைக் கொண்ட போலித் தெரிவொன்று மட்டுமே இருக்க முடியும். இடதுசாரிகளையும் உள்ளடக்கிய அரசியல் கட்சிகள் இந்தப் பிரச்சினையின் ஒரு பாகமாகக் கருதப்படுவதாக இருந்தால், மக்களை ஆக்கபூர்வமான முறையில் ஒன்று திரட்டுவதற்கு எந்த வழிமுறையைப் பயன்படுத்துவதென்பது இங்கு ஒரு முக்கியமான கேள்வியாக உள்ளது. புதிய சமூக இயக்கங்களின் அடையாளங்கள் மீள உறுதிப்படுத்தப்பட்டமை, தேங்கிக் கிடக்கும் சோஷலிஸத்தின் வீழ்ச்சியினாலும் சுதந்திரச் சந்தையின் கலாச்சார பொருளாதாரத் தாக்குதலினாலும் தூண்டப்பட்டுள்ளதா என்பது இங்குள்ள இரண்டாவது பிரச்சினையாகும்.

இந்தப் பின்புலத்தில், சமூகப் பிரிவுகளுக்கிடையிலும், அதேபோல அரசியல் கட்சிகளுக்கிடையிலும் புதிதாக உருவாகி வரும் உறவு நிலைகளை நாங்கள் நம்பிக்கையுடன் நோக்க முடியும். இடதுசாரி இயக்கம் மிகவும் சக்திவாய்ந்ததாக இருந்து வரும் எல்சல்வடோர், நிகாராகுவா, பிரேஸில் போன்ற நாடுகளில் இந்தச் சிக்கலான நிகழ்வுப் போக்கினை காண முடிகின்றது.

பெரும்பாலான புதிய சமூக இயக்கங்கள் பரந்தளவிலான சமூக மற்றும் அரசியல் உறவுகளை இப்பொழுது கட்டி எழுப்பிக் கொண்டு வருகின்றன. ஜனநாயக மத்தியமயமாக்கலுக்காக அவ்வளவு தூரம் விருப்பு காணப்படவில்லை. உண்மையிலேயே லிபரல்வாதம் (குறிப்பாக இலத்தீன் அமெரிக்க நாடுகளில்) வெகுசன அரசியலுடன் இரண்டறக் கலந்துள்ளதனால், அது வெகுசன இயக்கங்களுக்கும் தொழிற் சங்கங்களுக்கும், புதியதொரு களத்தினை உருவாக்கிக் கொடுத்துள்ளது. இந்த நிலையில், இந்த மக்கள் இயக்கங்களும் தொழிற் சங்கங்களும் முதலாளித்துவத்தை விமர்சனம் செய்வதனை கைவிட்டு விடாமலேயே, புதிய ஒரு சுயாதிக்க நிலையைப் பெற்று பகிரங்கமாக பிரச்சாரம் செய்வதற்கும், வளர்ச்சியடைவதற்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டுள்ளன.

லிபரல்வாதத்தின் தனிநபர் அரசியல் அடையாளத்தினை கோட்பாட்டு ரீதியாக ஊக்குவிக்கும் போக்குக்கும் பக்கம் சாராத சனநாயக வடிவம் கொண்ட சமூக அடையாளம் ஒன்றை எடுத்துவரும் நோக்கத்துக்கும் இடையே

இப்பொழுது ஒருவிதமான சங்கமம் ஏற்பட்டுள்ளது. இதில் ஆபத்துக்களும் அதேபோல வாய்ப்புக்களும் உள்ளன. சமூகம் மேலும் பிளவுபடக்கூடிய ஆபத்து இங்குள்ளது. அதே வேளையில், பாரிய அளவில் சனநாயக மக்கள் இயக்கங்களை ஒழுங்கு செய்வதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது.

பாரம்பரிய இடதுசாரி அரசியலில் அல்லது பாரம்பரிய மக்களை ஒன்று திரட்டும் முறைகளின் மீது, இப்பொழுது காணப்படும் ஏமாற்ற உணர்வு, மக்கள் இயக்கங்கள் தேசிய முதலாளித்துவத்துக்கு எதிரான பரந்த அளவிலான தரிசனமொன்றினை கைவிட்டுள்ளன என்பதனைக் காட்டவில்லை. அதற்கு மாறாக, இப்பொழுது அத்தகைய போராட்டங்கள் பெருமளவுக்குத் தன்னாதிக்கத்துடனும் மிகவும் தெளிவான ஒரு இலக்குடனும் முன்னெடுத்துச் செல்லப்பட்டு வருகின்றன. இயக்கங்களைக் கட்டியெழுப்பும் பணி ஒன்றில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது; அல்லது இந்த நிகழ்வுப்போக்கின் இறுதி அம்சமாக இருக்குமென கருதப்பட்டு வருகின்றது.

சிவில் சமூகத்துக்கு அரசியல் ரீதியாகவும் பாதுகாப்பு ரீதியாகவும் நிம்மதிப் பெருமூச்க விடக்கூடிய ஒரு நிலை நிலவ முடியுமெனக் கருதுமிடத்தும், இராணுவத் தலையீடு இருக்க மாட்டாதென கருதுமிடத்தும் கிராமப்புற தொழிலாளர்கள், நகரங்களில் வசிப்பவர்கள், மாணவர்கள், உயிரினச் சூழல்வாதிகள், சுதேசிகள் மற்றும் பல்வேறு இனக்குழுவினர் போன்ற பிரிவினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூர் அடிமட்ட அமைப்புக்கள் தொடர்ந்தும் செழித்தோங்க முடியும். உண்மையிலேயே, இந்த வெகுசன சிவில் சமூகம் மக்களை அணி திரட்டும் விடயத்தில் பெருமளவுக்குத் தாக்கத் திறனைக் கொண்டதாக இருந்து வரும். இந்த அணி திரட்டலில் இடதுசாரிக் கட்சிகளும் பங்கேற்கும். ஆனால், அவை அவசியமாகவே முன்னணிப் பங்கினை எடுப்பதில்லை.

## புதிய சமூக அறைகூல்கள்

பிரேஸிலில் 1992ல் மக்கள் இயக்கம் பெற்றுக்கொண்ட முக்கியமான வெற்றி, வெற்றிகரமான சிவில் வெகுசன நடவடிக்கைக்கான தலைசிறந்த ஓர் உதாரணமாக உள்ளது. இந்த மக்கள் நடவடிக்கையின் காரணமாக, பிரேஸிலின் கொலர் டி மெலொவுக்கு எதிராக ஒரு குற்றப் பிரேரணை முன் வைக்கப்பட்டது. இத்தகைய ஒரு முன்முயற்சி, "அரசியல் கட்டமைப்பின் ஒரு வேலையாகவோ அல்லது (ஓரளவுக்கு) காங்கிரஸின் ஒரு வேலையாக இருந்தது" என்று சிலர் நம்புகின்றனர். ஆனால், இதற்கு மாறாக, இலட்சக்கணக்கான பிரேசிலிய மக்கள் தொடர்ச்சியாக, கட்டுப்பாடான முறையில், அகிம்சை வழியில் வீதிகளில் அணி திரட்டப்பட்டமையின் விளைவாகவே இந்தக் குற்றப் பிரேரணை தோன்றியது.

உருகுவேயில் தனியார் மயமாக்குதல் தொடர்பான ஒரு சர்வஜன வாக்கெடுப்பில் வாக்காளர் தொகையில் எழுபது சதவீதத்தினர் அதற்கு எதிராக வாக்களித்தனர். நிகாராகுவாவில் தனியார்மயமாக்கல் முயற்சி தொடர்பாக பிரதான தொழிற்சங்க இயக்கம் ஒரு வித்தியாசமான அணுகுமுறையைக் காட்டியுள்ளது. முக்கியமான பொதுப் பணிகள் கம்பெனிகளை அரசாங்கம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்திய அந்த இயக்கம், அதேவேளையில் சார்டினிஸ்டா ஆட்சிக் காலத்தில் பெரும் எண்ணிக்கையில் உருவாக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் தனியார் துறைக்கு திருப்பி அளிக்கப்பட வேண்டுமென்பதனை ஏற்றுக் கொண்டது. ஆனால், அதே நிறுவனங்களின் தொழிலாளர்கள் வசம் இவை ஒப்படைக்கப்பட வேண்டும்என அது முக்கியமாக கேட்டுக் கொண்டது. இந்த நிலையில், தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், தனியார்மயமாக்கல் என்பது ஒரு புதிய வடிவிலான போராட்டத்தை முன் வைக்கின்றது. அதாவது, புதிய தாராளவாத திட்டத்தின் அடிப்படை நோக்கம் சில அமெரிக்கச் சார்பு பெரிய வணிக அமைப்புக்களிடம் செல்வத்தினையும் அதிகாரத்தினையும் ஒன்று திரட்டச் செய்வதாகும்.

வட அமெரிக்காவில் "NAFTA" அமைப்புக்கு எதிரான கூட்டணி, தோழமை உணர்வின் முக்கியத்துவத்தினைக் கோடிட்டுக் காட்டுகின்றது. சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் சிதறுண்டு கிடக்கும் பல்வேறு வித்தியாசமான பிரிவினரையும் ஒன்றாக இணைத்து, புதிய வகையிலான கட்டமைப்புக்களை உருவாக்கக் கூடிய ஒரு வாய்ப்பு இங்கு காணப்படுகின்றது. "கட்டமைப்புக்கள்" என்ற பதத்தின் மீதே ஒருவித வெறுப்பு நிலை காணப்படுகின்றது என்பது உண்மை தான். ஆனால், உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக இருந்து வருவதாக அங்கீகரிக்கப்படும் தோழமை உணர்வினைப் பொறுத்தவரையில், எவரும் அதனை வெறுக்க முடியாது. இந்தக் கூட்டணி, பொருளாதார மற்றும் சமூக நியதிகளில் முறைசாராத் துறைகளினதும் போட்டித் திறன் அற்ற துறைகளினதும் உயிர் வாழும் உரிமைக்காக போராடி வருகின்றது.

இது தொடர்பான பிறிதொரு முக்கியமான உதாரணம், 1992 அக்டோபரில் சுதேச கறுப்பினத்தவரும் மக்கள் இயக்கங்களும் மானாகுவாவில் துவக்கி வைத்த போராட்டமாகும். தேசிய மற்றும் சர்வதேசிய அரசுசாரா அமைப்புக்களின் ஆதரவினைப் பெற்ற நிலையில் முன் வைக்கப்படும் இந்தத் தோழமையுணர்வு, சில சந்தர்ப்பங்களில், அரசாங்கங்களின் பகையைப் பெற்றுக் கொள்கின்றது. இக் கண்டத்தின் வரலாற்றில் முதல் தடவையாக பல்வேறு இனக்குழுக்களும் மக்கள் இயக்கங்களும் தேச எல்லைகளைக் கடந்த நிலையில் தோழமையுணர்வுடன் ஒன்றுபட்டு நின்றுள்ளனர்.

இந்த ஒற்றுமையுணர்வினையும் குறிக்கோள் மீதான பிடிப்பினையும், சில கிழக்கைரோப்பிய நாடுகளிலும் பழைய சோவியத் யூனியனின் குடியரசுகளிலும் இடம்பெற்ற நிகழ்வுகளுடன் மட்டுமே ஒப்பிட முடியும். இப்பகுதிகளில், அரசியல் மேட்டுக் குடியினரால் மிகவும் தந்திரமான முறையில் இனப் போராட்டம் உருவாக்கப்பட்டதுடன், தமது சொந்த அடையாளத்துக்கான தேடலின் போது ஏனைய சிறுபான்மைச் சமூகங்களை வெறுத்தொதுக்கும் ஒரு மனோபாவம் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், அமெரிக்கக் கண்டத்தைப் பொறுத்தவரையில் இது நேர் எதிரானதாகவுள்ளது.

அரசியல் சமுதாயம் பெரும் வியாதி ஒன்றினால் பீடிக்கப்பட்டுள்ளது என்பதனை மறுக்க முடியாது. குறிப்பாக, முதலாளித்துவம் சாராத இடதுசாரிக் கட்சிகளை உள்ளடக்கிய அரசியல் கட்சிகளே பிரதான நோயாளிகளாக இருந்து வருகின்றன. இலத்தீன் அமெரிக்க மக்கள், இந்த இடதுசாரிக்

32 பக்கம் பார்க்க.

# வங்கித்தொழிலின் வருங்காலம்: உலகளாவிய ஒரு மதிப்பீடு

அடலப்ஸ் ஜே. டோபி

*அடலப்ஸ் ரோபி நைஜீரியாவின் விஞ்ஞான, தொழில்நுட்ப "றிவேர்ஸ்" அரச பல்கலைக்கழகத்தில் வங்கித்துறை மற்றும் நிதி திணைக்களத்தில் விரிவுரையாளராக பணிபுரிந்து வருகின்றார்.*

## அறிமுகம்

1980களின் தசாப்தத்தின் போது உலகளாவிய வங்கித்தொழில் அமைப்பினை ஊடறுத்துக் கொண்டு வீசிய துன்பம் தந்த கடும் காற்று, சிரமம் மிகுந்த நாட்களுக்காக பொருத்தமான விதத்தில் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருக்காத ஒரு தொழிற்துறையின் அவல நிலையை அம்பலப்படுத்திக் காட்டியது. கிடைக்கக் கூடியதாக இருக்கும் மிகச் சிறிதளவு வியாபாரத்தை பெரும் எண்ணிக்கையிலான போட்டியாளர்கள் துரத்திக் கொண்டிருந்தனர்.

சர்வதேச தீர்ப்பனவுகளுக்கான வங்கியின் அதிகாரியொருவர் சமீபத்தில் பின்வருமாறு கூறியிருந்தார்: "நோர்வேயிலிருந்து அவுஸ்திரேலியா வரையிலும், ஜப்பானிலிருந்து ஐக்கிய அமெரிக்கா வரையிலும், ஒழுங்கு விதி தளர்ப்பு நடவடிக்கைக்கு இசைவான விதத்தில் சீராக்கம் செய்து கொள்வது தொடர்பான பிரச்சினைகள் பரவலாக நிலவி வருகின்றன. இங்கு சற்றும் எதிர்பார்க்கப்பட்டிராத ஒரு விடயம், போட்டிச் சூழ்நிலையொன்றில் நிறுவனங்கள் எதிர்கொள்ளக் கூடிய சிரமங்களின் அளவு மற்றும் நிதி சம்பந்தப்பட்ட ஒழுங்கு விதிகள் நீக்கப்பட்டதன் பின்விளைவாக அதனை அனுசரித்துச் செல்வதற்கு ஏற்படும் செலவு ஆகியன சம்பந்தப்பட்ட விடயமாகும்".

வங்கிகள் பொருளாதார மந்தமொன்றினை மிகவும் எளிதில், அனாயாசமாகக் கடந்து செல்லக் கூடிய ஒரு காலம் இருந்தது; அப்பொழுது இவ்வங்கிகள் கணிசமான அளவில் கிடைத்த கொடுகடன் இலாப எல்லைகளைக் கொண்டும், வைப்புத் திரட்டல் நடவடிக்கைகளினாலும் எத்தகைய மோசமான சூழ்நிலைகளிலும் கூட சிறப்பாக செயற்படக்கூடிய நிலையில் இருந்து வந்தன. ஆனால், இப்பொழுது நிலைமை அவ்வாறிருக்கவில்லை. 1980களின் நடுப்பகுதியில் நிலவிய செழிப்புக் காலத்தின் போது பொருளாதார ஒழுங்குவிதி தளர்ப்பினால் கட்டவிழ்த்து விடப்பட்ட போட்டிப் பிரவாகம், மிகவும் இறுக்கமான மூலதன தடங்கல்களுடன் இணைந்த வகையில், நிலைமைகளை தலைகீழாக மாற்றி விட்டுள்ளது. மிதமிஞ்சியளவுக்கு கொள்திறன் நிலவி வரும் இன்றைய யுகத்தில், வாழ்க்கை நடத்துவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியுள்ளது என்ற உண்மையை வங்கிகள் இப்பொழுது உணரத் தொடங்கியுள்ளன.

உலகெங்கிலும் இறுக்கமான பொருளாதார ஒழுங்குவிதிகள் தளர்த்தப்பட்டுள்ள ஒரு சூழ்நிலையில், வங்கித்தொழிலின் எதிர்காலம் குறித்த உலகளாவிய மதிப்பீடொன்றினை மேற்கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சிக்கலில் மாட்டிக்கொண்டிருக்கும் ஜப்பானிய வங்கிகள்

ஜப்பானின் பெரிய வங்கிகளைப் பொறுத்தவரையில், ஒரு வகையில் நோக்கும் பொழுது 1991ல் அனைத்துமே அவற்றுக்குச் சாதகமாக இருந்து வந்தன. வட்டி விகிதங்கள் வீழ்ச்சியடைந்து, பிணைப்பத்திரங்களின் விலை

*உலகெங்கிலும் வங்கிகள் எதிர்நோக்கிவரும் சிரமங்களைப் பொறுத்தவரையில், அதற்கொரு உலகளாவிய பரிமாணம் இருந்து வருவது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. குறிப்பாக, பெருமளவுக்கு பொருளாதார ஒழுங்கு விதித் தளர்ப்புக்கள் இடம்பெற்று, போட்டி அழுக்கங்கள் செறிவாக்கப்பட்டு, சமீப காலத்தில் மிகவும் துரித வேகத்தில் கடன் வளர்ச்சி ஏற்பட்டு வந்துள்ள நாடுகளிலேயே வங்கித் தொழில் அச்சுறுத்தல் நிலைமைகளை எதிர்நோக்கி வருகின்றது. உலக வங்கித் தொழிலில் இயங்கி வரும் செயல்முனைப்பு மிகுந்த சந்தைச் சக்திகளின் நிர்ப்பந்தங்கள், வாடிக்கையாளர்கள் கோரிவரும் புதிய வங்கித்துறை உபகரணங்கள் மற்றும் சேவைகள் என்பனவும் தொழில்நுட்பத்தின் செல்வாக்கும் ஒன்றாக இணைந்து பாரம்பரிய வங்கித் தொழிலின் முகத் தோற்றத்தினை மாற்றி அமைத்து வருகின்றன. உலக பொருளாதாரத்தின் இன்றைய நிலைமை மேலும் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. காலத்துக்குக் காலம் ஏற்படும் சரிவுகளினதும் அமைப்பு ரீதியான குறைபாடுகளினதும் சேர்க்கை எதிர்காலத்துக்கான வாய்ப்புக்களை மங்கச் செய்துவிட முடியும். செயற்படும் நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடிய சக்தி வாய்ந்த நிதி முறைமை ஒன்றுக்கூடாக உண்மையான உலக பொருளாதாரத்தின் மீட்சியைப் பாதுகாப்பதற்கு நாங்கள் உடனடியாக முயற்சி செய்ய வேண்டும்.*

கள் உயர்ந்தன. மேலும் கடன்கள் மீதான வருவாய்களும் பெருகின. எனவே, அந்த நிதியாண்டின் முடிவின் போது வங்கிகளின் செயற்பாட்டு இலாபத்தில் 31.5 சத வீத முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது.

ஜப்பானிய வங்கிகள் செழிப்பு மிகுந்த வருடங்களின் போது ஒருவிதமான ஆவேசத்துடன் சொத்துக்களைத் திரட்டிக் கொண்டிருந்தன. ஆனால் இப்பொழுது அவை இலாபமீட்ட வேண்டியதன் அவசியத்தை இறுதியில் உணரத் தொடங்கியுள்ளன. இந்த வங்கிகளின் சராசரி இலாப எல்லை – அதாவது அவை பெற்றுக்கொள்ளும் பணத்துக்கு செலுத்தும் வட்டித் தொகைக்கும் தமது கடன்கள் மீது அவை அறவிட்டுக் கொள்ளும் வட்டித் தொகைக்கும் இடையிலான வித்தியாசம் – இப்பொழுது மிகவும் ஆரோக்கியமான இடத்தில் 240 அடிப்படைப் புள்ளிகளாக (அதாவது ஒரு சதவீதத்தில் நூற்றில் ஒன்றாக) இருந்து வருகின்றது. 1980 களில் இந்த ஜப்பானிய வங்கிகள் தமது நீண்டகாலப் பங்கு உடைமைகளை விற்பனை செய்து, பின்னர் அவற்றைக் கொள்வனவு செய்து அதன் மூலம் அவற்றின் புத்தகப் பெறுமதிகளை அதிகரித்துக் கொள்வதன் மூலமே பெருமளவுக்கு இலாபங்களை ஈட்டிக் கொண்டிருந்தன. பணப்பாய்ச்சலின் அடிப்படையில் இந்த வங்கிகள் குறிப்பிட்டுக் கூறக்கூடிய எத்தகைய சம்பாத்தியங்களையும் திரட்டிக் கொள்ளவில்லை.

நகர வங்கிகள், காலம் பிந்தியேனும் தமது கடந்த கால தவறுகளை உணர்ந்து விவேகபூர்வமான வங்கித் தொழிலுக்கு திரும்பி வருவதற்கு முன்னர் அவை எத்தனையோ பணிகளை நிறைவு செய்ய வேண்டியவையாக உள்ளன. இந்த வங்கிகள் இப்பொழுது தாம் வழங்கும் கடன்களுக்கு வாடிக்கையாளர்கள் ஏற்றுக்கொள்ளும் ஆகக்கூடிய வட்டி விகிதங்களை அறவிட்டு வருகின்றன. வட்டி விகிதங்களில் ஏற்கனவே பெரும் வீழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. 1993ம் ஆண்டு மார்ச் 31ல் முடிவடைந்த நிதியாண்டின்போது வங்கிகள் அதிகரித்து வரும் தமது ஐயக் கடன்களை முழுவதுமாக ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தன. ஆனால், வங்கியாளர்களும் அவர்களை நெறிமுறைப்படுத்துவோரும் இந்தப் பிரச்சினையின் பரிமாணத்தினை புரிந்து கொண்ட போது, யதார்த்தத்துடனான சந்திப்பினை இந்த ஆண்டுக்கு பின் தள்ளி வைத்தனர். ஜப்பானிய தர நிர்ணயங்களின் படி, இந்த நிலைமையிலும் கூட நகர வங்கிகள் தமது கடன் இழப்பு ஒதுக்குகளை 1991ல் தீவிரமாக அதிகரித்துக் கொண்டன. செயற்பாட்டு இலாபங்களில் முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் 1991ம் ஆண்டில் நகர வங்கிகளின் தேறிய இலாபங்கள் சுமார் காற்பகுதியளவினால் வீழ்ச்சியடைந்தது ஏன் என்பதனை இது விளக்குகின்றது. கடன் தள்ளுபடி 5.7 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து 3000 கோடி ஜப்பானிய யென்களாக அதிகரித்தது. சட்டபூர்வமான கடன் நட்ட ஒதுக்குகள் மொத்தக் கடன்களின் 0.3 சதவீதமாக இருந்தன. இது தவிர குறித்துரைக்கப்பட்ட கடன் நட்ட ஒதுக்குகள் 49200 கோடி யென்களிலிருந்து 83600 கோடி யென்களாக அதிகரித்தன.

இந்த நகர வங்கிகளைப் பொறுத்தவரையில் இந்த ஒதுக்குகள் இன்னமும் கூட போதியனவையாக இருக்கவில்லை. இந்த வங்கியமைப்பு முழுவதிலும் சுமார் 6000 கோடி யென் ஐயக் கடன்கள் பரவிக் காணப்படுகின்றன. சாதாரண மதிப்பீடுகளின்படி மொத்தக் கடன்களில் சுமார் 5 சதவீதமானவை தவணை தப்பிய கடன்களாக இருந்து வருகின்றன என அலீஸியா ஒகாவா மதிப்பிட்டுள்ளார். இந்த எடுகோளின் அடிப்படையில், தற்போதைய கடன் நட்ட ஒதுக்கங்கள் 11 நகர வங்கிகளில் 5 வங்கிகளின் சாத்தியமான ஐயக் கடன்களில் 15 சதவீதத்தினை மட்டுமே உள்ளடக்கக் கூடியவையாக இருந்து வருகின்றன.

இது இந்தப் பிரச்சினையை மேற்கத்திய கண்ணோட்டத்தில் நோக்குவதாகவேயுள்ளது. ஜப்பானிய வங்கிகள் நீண்டகாலப் பங்குடமைகள் மீதான தமது மூலதன ஆதாயங்களை தமது உண்மையான கடன் இழப்பு ஒதுக்குகளாக கருதி வருகின்றன. இந்த மறைந்துள்ள இலாபங்களையும் ஒகாவா தனது மதிப்பீட்டில் சேர்த்துக் கொண்டுள்ளார். அப்படியிருந்தும் கூட ஐந்து வங்கிகள் (தமது கடன்களில் 5 சதவீதத்தினை வசூல் செய்ய முடியாத நிலைமை தோன்றுமிடத்து அதனை ஈடு செய்வதற்கு) போதியளவு நிதி ஒதுக்குகளை தம்மிடம் வைத்திருக்கவில்லை.

இந்த பிரயோசனமற்ற கடன்களை வைத்திருப்பதானது வங்கி இலாபங்களில் ஏற்படுத்தி வரும் தாக்கம் பிறிதொரு பிரச்சினையாகும். கடந்த ஆண்டில் நகர வங்கிகளின் சொத்துக் கடன்களுக்கு என்ன நடந்தது என்பதனை நோக்குவதன் மூலம் ஒரு படிப்பினையைப் பெற்றுக் கொள்ளலாம். அநேகமாக எல்லா சந்தர்ப்பங்களிலும் சொத்துக் கடன்கள் மொத்தக் கடன்களிலும் பார்க்க அதிகமாக அதிகரித்துச் சென்றன. ஒட்டுமொத்தக் கடன் வளர்ச்சியில் ஏற்பட்ட மிக மெதுவான வளர்ச்சிக் காரணத்தினை நாம் புரிந்து கொள்ள முடியும். கடன்களுக்கான கேள்வி குறைவாக இருந்து வந்ததுடன் வங்கிகள் மிகச் சிறந்த வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே கடன்களை வழங்குவதில் ஆர்வம் காட்டி வந்தன. சொத்துக் கடன்களைப் பொறுத்தவரையில் வங்கிகள் சந்தை விகிதத்துக்கும் குறைந்த அளவு விகிதங்களில் வடிக்கையாளர்களுக்கு கடன்களை வழங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு வந்துள்ளன போல் தோன்றுகின்றது.

சுமிடோமோ வங்கி ஒரு விதிவிலக்காகத் தெரிகிறது. அது மிகவும் கவனமான முறையில் நடுத்தர அளவுக் கம்பனிகளுக்கு கடன் வசதிகளை விரிவுபடுத்துவதில் ஈடுபட்டு வருகின்றது. இதன் மூலம் அதன் சந்தைப் பங்கினையும் செயற்பாட்டுப் பரப்பினையும் அது விஸ்தரித்துக் கொள்ள முடியும். இதற்கு இன்னொரு காரணமும் உள்ளது. அதாவது, இந்த வங்கி ஏனைய வங்கிகளிலும் பார்க்க அதிக அளவுக்கு பங்குகளை வெளியிட்டதன் மூலம் சிறந்த முறையில் மூலதனத்தை பெற்றுக் கொண்டுள்ளது. 1991ம் ஆண்டில் சுமிடோமோ வங்கியின் கடன்கள் 8 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளையில் அதன் சொத்துக் கடன்கள் உண்மையில் ஒரு வீழ்ச்சியினைப் பதிவு செய்திருந்தன. இந்த வங்கியின் உபாயம் மிகவும் தெளிவானதாகும். அதாவது கடன் நிலைமைகள் மிகவும் இறுக்கமாக இருந்த சந்தர்ப்பங்களில் தமக்கு எந்த வங்கி ஆதரவளித்தது என்பதனை கம்பெனித் துறையைச் சேர்ந்த கடன் பெறுநர்கள் நினைவில் வைத்திருப்பார்கள் என்பதாகும்.

அடுத்த சில வருடங்களில் ஜப்பானின் பெரும்பாலான வங்கிகள் தமது பாரிய கடன் சுமையை தீர்த்துக் கொள்வதில் தமது சக்திகளை செலவிட்டு வரும். யுஜி யஸு*தா என்பவர் "இதற்கு ஐந்தாண்டுகள் பிடிக்கும்" என கருதுகின்றார். வருடாந்த கடன்

வளர்ச்சி விகிதம் 3 – 5 விகிதமாக இருந்து வர முடியுமென அவர் எதிர் பார்ப்பதும் இதற்கான ஒரு காரண மாகும். வங்கிகள் இப்பொழுது ஒழுங்கு விதிகள் தளர்த்தப்பட்டுள்ள ஒரு சந்தை யில் போட்டியிட்டு வருகின்றன. இங்கு பணம் சம்பாதிக்கும் பொருட்டு அபாய ஏதுக்களை ஏற்க வேண்டியுள்ளது. பெரும் சிக்கலில் மாட்டிக் கொண்ட ஜப்பானிய வங்கியாளர்கள் சில காலம் இதனை உணர்ந்திருக்கவில்லை. இப் பொழுது பல வங்கிகள் தாராளமாகக் கையை வீசி கடன்களை வழங்கியதன் பின்னர் தமது காப்பறைகளை பூட்டிக் கொண்டுள்ளன.

## அமெரிக்க வங்கிகளின் மோசமான நாட்கள்

ஒலிம்பியாவிலும் நியூயோர்க் கிலும் எவ்வளவு துரிதமாக கடன் சோர்வு நிலை தோன்றியுள்ளது என்பது ஆச்சரியமானதாகும். பிரிட்டன், கனடா மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வங்கிகள் உடனடி யாக சரிவு நிலையை எட்டி விடும் போல் தோன்றவில்லை. ஆனால், பல வங்கிகளின் சிரமங்கள் இன்னமும் முற்றிலும் நீங்கி விடவில்லை. வங்கித் தொழிலின் எதிர்காலம் இருள் சூழ்ந்த தாக இருந்து வருகின்றதென டன்யா அஸார்ச் என்பவர் அறிக்கையிட் டுள்ளார். வங்கிகள் இந்தக் கஷ்ட நிலையிலிருந்து மீட்சியடைவதற்கு பல வருடங்கள் எடுக்கும் என அவர் கருது கின்றார். "நட்டங்கள் நீண்ட காலத் துக்குத் தொடர்ச்சியாக நிலவி வரும். அவை கணிசமான அளவுக்கு உயர் மட்டங்களை எட்ட முடியும். ஒதுக்குகள் இன்னமும் போதியவையாக இருக்க வில்லை."

வங்கித் தொழிலில் இலாபநிலை மீண்டும் தோன்றியிருந்தமையினால் முதலீட்டாளர்கள் இந்தத் துறைக்குள் கவர்ந்திழுக்கப்பட்டனர். அமெரிக்கா வின் மிகப் பெரிய வங்கிகள் சொத்துக் கடன் நட்டங்களை எவ்வாறு உறிஞ்சிக் கொள்ளப் போகின்றன என்பதனை அஸார்ச் நோக்கியுள்ளார். பல்வேறு கால கட்டங்களில் சொத்துக்களின் மந்தம் நாடு முழுவதிலும் வியாபித்து வந்திருப்பதனாலும், ஐயக் கடன்கள் மீது ஒதுக்குகளை மேற்கொள்வதில் வங்கிகள் வேறுபட்ட கொள்கைகளை பின்பற்றி வருவதனாலும் ஒரு வங்கியை இன்னொரு வங்கியுடன் ஒப்பிட்டு நோக்குவது மிகவும் கடினமாக உள்ளது. அஸார்ச் இரண்டு வகையான கணிப் பீடுகளை மேற்கொள்வதன் மூலம் இந்த நிலைமையை தெளிவுபடுத்த முயல் கின்றார்.

வங்கிகள் தமது சொத்துக் கடன் களில் 18 சத வீதத்துக்கெதிராக ஒதுக்கு களை வைத்திருத்தல் வேண்டுமென்ற எடுகோளினை முதலாவது தொகுதி கொண்டுள்ளது. இரண்டாவது தொகு திக் கணக்கீடுகள், இந்த வங்கிகளின் நிலைமைகள் டெக்ஸாஸில் ஏற்பட்டது போல மிகவும் மோசமாக மாற்றமடைய முடியுமென்று தெரிவித்தன. டெக்ஸா ஸில் முதலில் சொத்து மதிப்புக்களில் ஒரு மந்த நிலைமை தோன்றியது. இறுதியில், வங்கிகள் தமது சொத்துக் கடன்களுக்கு எதிராக 25 சதவீத ஒதுக்குகளை வைக்க வேண்டியிருந்தது.

எண்ணெய் எரிபொருளுடன் சம்பந்தப்பட்ட பொருளாதார மந்தத் தின் ஒரு பாகமாக இருந்திராத அரி ஸோனாவின் வங்கிகள், டெக்ஸாஸ் வங்கிகளின் அதேயளவுக்கு செயல் திறனற்ற கடன்களை இறுதியில் கொண் டிருந்தன என டன்யா அஸார்ச் குறிப்பிடுகின்றார். நியூயோர்க் வங்கிகள் எற்கனவே அந்தக் கட்டத்தை எட்டிக் கொண்டிருக்கின்றன. ஒதுக்கு விகி தங்கள் ஒரு சதவிகிதத்துக்கும் குறைவாக வீழ்ச்சியடையும் வங்கிகள் தமது ஒதுக்கு களை கட்டியெழுப்ப வேண்டும். மூல தன விகிதங்கள் 5 சதவிகிதத்துக்குக் குறைவாக வீழ்ச்சியடையக் கூடிய வங்கி கள் குறைந்த பட்சம் ஒருசில வருடங்க ளுக்காவது தமது நட்டங்களை ஈடு செய்து கொள்வதற்காக சம்பாத்தி யங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

செலவுகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் விஷயத்தில் அதி தீவிர மாக கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ள போதிலும் செயற்பாட்டு இலாபங்கள் உண்மையில் வீழ்ச்சி கண்டன. இந்த வங்கிகள் சந்தித்த மிக முக்கியமான பிரச்சினைகள் வட்டி வருமானப் பிரிவிலிருந்து தோன்றிய பிரச்சினை களாகவே இருந்தன. வருமானம் முடக்கப்பட்டதற்கான முக்கியமான காரணம் ஐந்தொகையில் தொடர்ச்சி யாக ஏற்பட்டு வந்த வீழ்ச்சியாகவே இருந்தது. இதனை வேறு வார்த்தை களில் எளிமையாகக் கூறுவதாக இருந் தால், வங்கிகள் அவற்றின் தற்போதைய கடன்கள் முதிர்ச்சியடையும் பொழுது, அவற்றுக்கு ஈடு செய்யக்கூடிய வகை யில், ஏற்றுக் கொள்ளக்கூடிய தரத்தி லுள்ள போதிய கடன் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்து வருகின்றன.

லொயிட்ஸ் வங்கிக்கும் மிட்லண்ட் வங்கிக்குமிடையே 1991 ஜூனிலிருந்து சராசரி வட்டி சம்பாதிக்கும் சொத்துக் கள் 830 கோடி ஸ்டேர்லிங் பவுண்க ளினால் வீழ்ச்சியடைந்துள்ளன. பார்க் லேய்ஸ் வங்கியும், நஷனல் வெஸ்ட் வங்கியும் கூட இந்தப் போக்குகளுக்கு விதிவிலக்கானவையாக இருந்து வர வில்லை. எனினும், அவற்றின் வீழ்ச்சி விகிதங்கள் சார்புரீதியில் குறைவானவை யாகவே இருந்தன.

ஐந்தொகையை விரிவாக்கிக் கொள்வதற்கான இந்த சக்தியின்மை / விருப்பின்மை வங்கிகளைப் பொறுத்த வரையில் ஒட்டுமொத்தமாக ஒரு

அட்டவணை_1

நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் ஜப்பானின் வங்கிகள் – மார்ச் 1993

| வங்கி | மொத்தக் கடன்களின் கடன் இழப்பு ஒதுக்கு | மறைமுக இலாபங்களும் கடன் இழப்பு ஒதுக்குகளும் | மொத்தக் கடன்கள், சொத்துக் கடன்கள் முன்னைய வருடத்திலும் பார்க்க சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|
| டிகேபி | 0.73 | 4.56 | 0.84 | 8.20 |
| ஹொக்கைடோ டகுஷோகு | 1.33 | 5.01 | 3.84 | 13.34 |
| பாங்க் ஒப் டோக்கியோ | 1.44 | 4.21 | 2.26 | 11.36 |
| ஸகுரா | 0.66 | 5.20 | 0.95 | 3.34 |
| மிட்சுபிஷி | 0.64 | 5.17 | 4.39 | 4.09 |
| பூஜி | 1.10 | 4.06 | 2.65 | 5.57 |
| சுமிடோமோ | 0.78 | 4.03 | 7.75 | 7.53 |
| டய்வா | 0.83 | 7.08 | 6.06 | 12.50 |
| ஸன்வா | 0.87 | 4.24 | 4.77 | 10.27 |
| டொகாய் | 1.08 | 5.66 | 2.26 | 5.79 |
| குயோவா ஸஸ்டாமா | 0.72 | 5.30 | 2.12 | -1.31 |

மோசமான விடயமாக இருக்கவில்லை. குறிப்பாக பிடித்து வைத்திருக்கும் இலாபங்கள் நிர்ப்பந்தங்களின் கீழ் வரும் பொழுது மூலதன விகிதங்களுக்கான நிலைமைகள் சாதகமானவையாக உள்ளன. உண்மையிலேயே சர்வதேச தரங்களுடன் நோக்கும் பொழுது, வங்கிகளின் மூலதன விகிதங்கள் இப்பொழுது நல்ல ஆரோக்கிய நிலையிலேயே இருந்து வருகின்றன. மூலதனப் பற்றாக்குறைகள் குறித்து அக்கறைப்பட

அட்டவணை 2

சிரமத்துக்கு உள்ளாகியிருக்கும் அமெரிக்க வங்கிகள்

| வங்கி | ஒதுக்குவிகிதம் * | | மூலதன விகிதம் * | |
|---|---|---|---|---|
| | மொத்த சொத்து நிறுவைக்கு சீராக்கப்பட்டது | | | |
| | 18% | 25% | 18% | 25% |
| பாங்கர்ஸ் ட்ரஸ்ட் | 7.20 | 6.08 | 7.25 | 6.96 |
| பாங்க் ஒப் பொஸ்டன் | 3.22 | 1.24 | 7.34 | 5.86 |
| எப். என். பினான்சியல் | 2.30 | 0.92 | 7.64 | 6.82 |
| சிக்யூரிட்டி பசுபிக் | 2.16 | 0.53 | 6.20 | 4.95 |
| பெர்ஸ்ட் சிகாகோ | 1.68 | 0.40 | 6.95 | 8.28 |
| நேஷனல் பாங்க் | 1.19 | -0.95 | 6.31 | 5.55 |
| பீ. என். சி. பினான்சியல் | 1.13 | -0.29 | 7.98 | 7.17 |
| சிட்டிகோர்ப் | 0.77 | 0.08 | 4.91 | 4.43 |
| கன்டினென்டல் | 0.65 | -0.60 | 6.67 | 5.95 |
| கெமிகல் பாங்கிங் | 0.59 | -0.59 | 5.47 | 4.74 |
| சேஸ் மன்ஹட்டன் | 0.40 | -0.70 | 5.70 | 4.94 |
| பாங்க் அமெரிக்கா | 0.36 | -0.62 | 7.25 | 6.52 |
| பாங்க் வன் | -0.53 | -1.29 | 7.75 | 7.25 |
| வச்சோவியா | -1.38 | -2.78 | 6.61 | 5.74 |
| வெல்ஸ் பார்கோ | -2.47 | -4.86 | 4.01 | 2.10 |

* 1991 முடிவில்

ஆதாரம் : ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ்

வேண்டிய தேவையின்னமை இந்தப் பெறுபேறுகளின் நல்ல அம்சங்களில் ஒன்றாகும். இருந்த போதிலும் தேறிய வட்டி வருமானம் மீது காணப்படும் அமுக்கம் தொடர்ந்தும் அக்கறைக்குரிய ஒரு விடயமாகவே இருக்கும். ஏனெனில், வட்டி வருமானம் இன்னமும் கூட வங்கிகளின்மொத்த வருமானத்தின் மிக முக்கியமான கூறாக இருந்து வருகின்றது. வட்டி வருமானத்தில் ஏற்படும் எந்தவொரு வீழ்ச்சியையும் ஈடுசெய்யும் பொருட்டு வட்டியல்லாத வருமான மூலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக வங்கிகள் இரண்டு மடங்கு அதிகமாக உழைக்க வேண்டியுள்ளன. தீர்வை அதிகரிப்புக்களின் தாக்கமும் (ஆயுட் காப்புறுதி சம்பாத்தியங்களில் வெளிநாட்டுச் செலாவணி, மூலதன சந்தைகள் போன்ற) சில வருமான மார்க்கங்களின் வளர்ச்சியும் 1992ன் முதல் அரைப் பகுதியில் ஏனைய செயற்பாட்டு வருமானங்களின் வளர்ச்சி மட்டங்களை மிகச் சிறந்த முறையில் பராமரித்துக் கொள்வதற்கு உதவியுள்ளன.

குறிப்பாக பார்க்லேய்ஸ் வங்கியைப் பொறுத்தவரையில், அது தீர்வைகளை ஜுன் 1ம் திகதியன்று அதிகரித்தது. எனவே, அதற்கான மேலதிக அனுகூலங்கள் இனிமேல்தான் வந்து சேரவேண்டும். எவ்வாறிருந்த போதிலும், வட்டி அல்லாத ஏனைய பல வருமான மூலங்கள் அளவுடன் சம்பந்தப்பட்டவையாக இருந்து வருவதனால் பொருளாதார மந்தம் நீடித்துக் கொண்டு சென்றால் வங்கி மிகவும் கடினமான பல பணிகளை எதிர்நோக்க முடியும்.

இதன் பின்விளைவாக செலவுகளைக் கட்டுப்படுத்தும் விடயம் மிகுந்த முக்கியத்துவத்தினைப் பெற்றுக் கொள்கின்றது. செலவுகளைக் கட்டுப்படுத்தும் விஷயத்தில் அனைத்து வங்கிகளும் மிகவும் சிறந்த இடைக்காலப் பெறுபேறுகளைப் பெற்றுள்ளன. மிட்லண்ட் வங்கி அதன் செலவுகளை 7 சதவீதத்தினால் குறைத்துக் கொண்டுள்ள அதே வேளையில், பார்க்லேய்ஸ் வங்கியும் நஷனல் வெஸ்ட் வங்கியும் செலவு மட்டங்களை அதிகரிக்க விடாது அதே யளவில் வைத்துக் கொண்டுள்ளன. இந்த வங்கிகளின் ஆளணியினரின் எண்ணிக்கை 1992ன் முதல் அரைப் பகுதியில் 7300 னால் வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும், சம்பளக் கொடுப்பனவுகள் அனைத்தும் பணவீக்க விகிதத்துக்குள்ளேயே தீர்க்கப்பட்டன. தற்றுணிவுச் செலவின் அனைத்துக் கூறுகளும் மிகவும் கடுமையான முறையில் கண்காணிக்கப்பட்டதுடன், பல சந்தர்ப்பங்களில் நானாவித செலவுகளின் மட்டம் 1991ன் முதலாவது மற்றும் இரண்டாவது அரை வருடங்களின் அளவுகளிலும் பார்க்க குறைவானதாக இருந்தது. இந்த விருத்தி நிலைமைகளை தொடர்ந்தும் நிலைத்திருக்கச் செய்ய முடியுமா என்பதனை இனித்தான் பார்க்க வேண்டும். சில செலவுக் குறைப்புக்கள் சந்தேகமின்றி நிரந்தரமானவையாக இருந்து வருகின்றன. எனினும் விளம்பரச் செலவுகள் போன்ற விடயங்கள், நிலைமைகள் அதனை மீண்டுமொருமுறை அவசியப்படுத்துமிடத்து தவிர்க்க முடியாத விதத்தில் உயர்ந்து செல்லும்.

அதேவேளையில், ஐயக் கடன்கள் தொடர்பான நெருக்கடி தணிந்து செல்வதற்கான எந்தவொரு அடையாளத்தையும் காட்டியிருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக, ஐக்கிய இராச்சியத்தைப் பொறுத்தவரையில், இந்த விடயத்தில் எத்தகைய மாற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை. இந்து வங்கிகளின் உள்ளூர்க் கடன்களுக்கான ஒதுக்குதல்கள் 260 கோடி ஸ்டேர்லிங்

அட்டவணை 3

ஐ. இராச்சியத்தின் பெரிய வங்கிகளின் செயற்பாடு

| | அபே நஷனல் | | பார்க்லேய்ஸ் | | லொயிட்ஸ் | | மிட்லண்ட் | | நெட்வெஸ்ட் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜூன் 30 வரை 6 மாதங்கள் | 1992 | 1991 | 1992 | 1991 | 1992 | 1991 | 1992 | 1991 | 1992 | 1991 |
| [illegible] | 408 | 366 | 1.174 | 1.013 | 697 | 721 | 431 | 480 | 1.092 | 984 |
| [illegible] | 138 | 58 | 1.072 | 799 | 419 | 429 | 346 | 504 | 864 | 955 |
| [illegible] | 270 | 308 | 51 | 378 | 369 | 331 | 89 | -71 | 211 | 101 |
| [illegible] | 3.8 | 3.5 | 9.15 | 9.15 | 5.9 | 5.4 | n/a | 1.7 | 6.125 | 6.125 |

ஆதாரம் : "பாங்கிங் வேர்ல்ட்", செப். 1992

பவுண்கள் மட்டத்துக்கு அதிகரித்திருந்தன. இந்த அதிகரிப்பு 1991ம் ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது 22 சத வீதமாக இருந்தது. எனினும், வருடத்தின் கடைசிப் பகுதியில் பெரும்பாலான வங்கிகள் ஓரளவுக்கு ஒரு விருத்தி நிலைமையை கண்டன.

பார்க்லேய்ஸ் வங்கியை ஏனைய வங்கிகளிலிருந்து பிரித்து வேறுபடுத்திக் காட்டிய முக்கியமான அம்சம் அதன் கடன் ஒதுக்கங்களின் அளவில் காணப்பட்ட பேரளவிலான பரிமாணமாகும். இந்தத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வு தொடர்பான தரவுகள் அட்டவணை 3ல் தரப்பட்டுள்ளன.

ஸ்கண்டிநேவிய வங்கிகள்

நோர்வே, பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வங்கியமைப்புக்கள் 1920 களின் பின்னர் இப்பொழுது மிகவும் மோசமான ஒரு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. பின்லாந்தும் நோர்வேயும் "வங்கித் தொழிலின் மயானங்கள்" என வருணிக்கப்படுகின்றன. ஒழுங்குவிதிகள் தளர்த்தப்பட்டமையின் தாக்கம் மற்றும் வங்கித்தொழிலில் அதிகரித்து வரும் போட்டி ஆகிய விடயங்களைப் பொறுத்தவரையில், இந்த இரு நாடுகளும் சிறப்பான ஆய்வுக்குரிய இரு அலகுகளாக இருந்து வருகின்றன. ஸ்கண்டிநேவிய வங்கித் தொழில் குறித்து பேராசிரியர் டேவிட் லில்வியன் எழுதிய கட்டுரையிலிருந்து சுருக்கித் தொகுக்கப்பட்ட அறிக்கை இங்கு கீழே தரப்படுகின்றது.

நோர்வேயில் வங்கி முறையின் 70 சதவீதத்துக்கும் மேற்பட்ட பகுதி மிகவும் தாக்கமான முறையில் அரசின் கைகளிலேயே இருந்து வருகின்றது. இந்த வங்கி முறையின் ஒட்டுமொத்தமான ஒரு வீழ்ச்சியை தவிர்ப்பதற்காக மீட்பு நடவடிக்கைகள் எடுத்ததன் பின்னர் இந்நிலை ஏற்பட்டுள்ளது. இரண்டாவது மற்றும் மூன்றாவது மிகப்பெரிய வங்கிகளின் மொத்தப் பங்கு மூலதனமும் துடைத்தெறியப்பட்டுள்ளது. நாட்டின் மிகப்பெரிய வங்கி (டென் நோர்ஸ்கோ) அரச அனுசரணையுடனான மீள் மூலதனமாக்கல் திட்டமொன்றின் மூலம் வங்குரோத்து நிலையிலிருந்து மீட்கப்பட்டது.

சுவீடிஷ் அரசாங்கம் 1991 நவம்பரிலும் 1992 ஏப்ரலிலும் 500 கோடி அமெரிக்க டொலர் செலவில் இரண்டு பெரிய வங்கிகளை மீட்டெடுக்க வேண்டியிருந்தது.

அபே வங்கியின் ஒதுக்குதல்கள் வீடமைப்புச் சந்தையில் தொடர்ச்சியாக நிலவி வந்த பிரச்சினைகளை பிரதிபலித்தன. எனினும், ஏனைய வங்கிகளுடன் ஒப்பிட்டு நோக்கும்பொழுது இலாபங்கள் மீதான தாக்கங்கள் மிதமான அளவிலேயே இருந்தன. பெரும்பாலான வங்கிகளைப் பொறுத்தவரையில், தனிப்பட்ட வாடிக்கையாளர் பிரிவு விருத்தியினைக் காட்டியிருந்தது. துரதிர்ஷ்டவசமாக இது இன்னமும் நுகர்வோர் நம்பிக்கையை உருவாக்குவதற்கு எத்தகைய பங்களிப்பினையும் செய்யவில்லை. அதேவேளையில், சிறிய அல்லது நடுத்தர வியாபாரத் துறைகளில் எத்தகைய முன்னேற்றமும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையின் எதிர்முரண் நிலை என்னவென்றால், அது, வங்கிகள் மீது அவற்றின் செலவு அடித்தளங்கள் மற்றும் உற்பத்திகளை விலையிடுதல் என்பன தொடர்பாக ஓர் அடிப்படை சிந்தனையை திணித்துவிட்டுள்ளது என்பதாகும். இந்த வங்கிகளின் நடவடிக்கைகள் வாடிக்கையாளர்களிடமோ அல்லது வங்கி ஊழியர்களிடமோ ஜனரஞ்சக நிலையை அடையாதிருக்கக் கூடும். ஆனால், இவை இந்த வங்கிகளை நிச்சயமாக ஒரு நல்ல நிலைமைக்கு எடுத்து வந்துள்ளன. இப்பொழுது சுவீடனில் ஒரு வங்கி மட்டுமே இலாபகரமானதாக இயங்கி வருகின்றது. 1991ம் ஆண்டின் நட்டங்கள் பேரளவில் மூலதன உட்பாய்ச்சல்களை அவசியப்படுத்தின. இந்த உட்பாய்ச்சல்களில் சில (உதாரணமாக நோர்ட்பாங்கன் வங்கியை பொறுத்தவரையில்) அரசாங்கத்திடமிருந்தே வந்தன. கடந்த வருடம், ஒரு பாரிய வங்கித் தொழில் நெருக்கடியை தடுக்கும் பொருட்டு அரசாங்கம் சில வங்கிகளுக்கு கடன்களையும் உத்தரவாதங்களையும் வழங்க வேண்டியிருந்தது.

பின்லாந்தில் 1991ல் கடன் இழப்புக்கள் மும்மடங்கால் அதிகரித்திருந்தன. வங்கி முறையை பொறுத்தவரையில் ஒட்டுமொத்தமாக ஒரு நட்டம் ஏற்பட்டிருந்தது.

பேராசிரியர் லில்வியனின் கட்டுரையின் மையக் கருத்து, ஸ்கண்டிநேவிய வங்கிகளில் கடுமையான நிதிச் சீர்குலைவு, சுழல் முறையில் தோன்றும் மற்றும் கட்டமைப்பு அடிப்படையில் தோன்றும் ஆகிய இரண்டு விதமான காரணிகளினதும் சேர்க்கையினாலேயே உருவாகியுள்ளது என்பதாகும். மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள மூன்று ஸ்கண்டிநேவிய நாடுகளினதும் வங்கித் தொழில்துறையில் ஏற்பட்டுவந்துள்ள மாற்றங்களிடையே குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு ஒத்த தன்மை நிலவி வருவதனை அவர் அவதானித்துள்ளார். இந்த நாடுகள் ஒவ்வொன்றிலும் 1980 களின் போது வங்கித்தொழில் துறையின் கட்டுப்பாடுகள் கணிசமான அளவுக்குத் தளர்த்தப்பட்டன. இது போட்டித் தாக்கங்களை பெருமளவுக்கு தீவிரப்படுத்தியது. இது குறுகிய காலத்தில் வங்கிக் கடன்களில் கணிசமான அளவிலான ஓர் அதிகரிப்பினை எடுத்து வந்தது. உதாரணமாக, சுவீடனில் 1985ல் அனைத்துவிதமான கொடுகடன் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன. அதன் விளைவாக, 1987க்கும் 1991க்கும் இடையில் வங்கியல்லாத பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட வங்கி முற்பணங்கள் 92 சத வீதத்தினால் உயர்ந்து சென்றன. அதே வேளையில், அடகு நிறுவனங்களில் நிலுவையில் இருந்த கடன் 54100 கோடி சுவீடிஷ் குரோனர்களிலிருந்து 102000 சுவீடிஷ் குரோனர்களாக அதிகரித்தன.

அட்டவணை 4

சுவீடிஷ் வங்கிகளின் இலாபங்கள் (1985 - 1991)

| சுவீடிஷ் குரோனர் 100 கோடி | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 |
|---|---|---|---|---|---|---|---|
| செயற்பாட்டு வருமானம் | 24.7 | 31.8 | 33.9 | 40.0 | 44.3 | 52.0 | 54.9 |
| செலவுகள் | 14.9 | 17.2 | 20.2 | 22.5 | 25.2 | 29.4 | 31.7 |
| செயற்பாட்டு இலாபம் | 9.8 | 14.6 | 13.7 | 17.4 | 19.0 | 22.6 | 23.2 |
| கடன் இழப்புக்கள் | 1.7 | 2.8 | 2.5 | 2.2 | 3.0 | 11.0 | 32.8 |
| வரிக்கு முன்னர் இலாபங்கள் | 8.1 | -11.8 | 11.2 | 15.2 | 16.0 | 11.6 | -9.4 |

ஆதாரம் : தேசிய மத்திய வங்கி

வங்கிகள் அபாய ஏதுக்கள் கொண்ட கடன் வகைகளை அதிகரித்துக் கொண்டன. தொடக்கத்தில் விஸ்தரிப்பு காரணமாக வங்கிகளின் இலாபத்தன்மை அதிகரித்திருந்தது. ஆனால், பின்னர், 1990லும் 1991லும் ஐயக் கடன்களுக்காக பேரளவில் ஒதுக்குகளை வைக்க வேண்டியிருந்ததன் காரணமாக இலாபத்தன்மையில் சீர்குலைவு ஏற்பட்டது. இதன் விளைவாக வங்கி மூலதனம் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

வங்கிகளின் செயல்திறனில் காணப்பட்ட சீர்குலைவின் பரிமாணம் இங்குள்ள அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ளது. சுவீடிஷ் வங்கிகளின் செயற்பாட்டு இலாபங்கள் 1985 தொடக்கம் துரிதமாக அதிகரித்து வந்துள்ள போதிலும் கடன் இழப்புக்களுக்காக ஒதுக்குகளை மேற்கொண்டதன் பின்னர் 1989க்குப் பின்னர் நிலைமை பெருமளவுக்கு மோசமாகியுள்ளது என்பதனை அட்டவணை 4 காட்டுகின்றது. இவ் வங்கிகள் 1991ல் கூட்டு மொத்தமாக 900 கோடி சுவீடிஷ் குரோனர் நட்டத்தை அடைந்தன. இவ்விதம் மோசமடைந்து கொண்டு சென்ற நிலைமைக்கு வீழ்ச்சியடைந்து வரும் செயற்பாட்டு இலாபங்களே காரணமாக இருந்தன.

வங்கித்தொழில் துறையில் இதுகாறும் நிலவி வந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை மற்றும் அதன்ன அடியொற்றித் தோன்றிய போட்டியின் தாக்கம் மற்றும் புதிய சந்தைச் சூழ்நிலைகளுக்கு வங்கிகள் காட்டிய எதிர்விளைவு என்பன தொடர்பான ஒரு ஆய்வுக் களத்தினை ஸ்கண்டினேவிய நாடுகள் வழங்குகின்றன. ஆரம்பத்தில் ஐந்தொகையில் ஏற்பட்ட கணிசமான அளவு வளர்ச்சியின் பின்னர் வங்கிகளின் நிதிசார் செயற்பாடு மிகக் கடுமையாக சீர்குலைவுற்றது. அபாய ஏதுக்கள் பெருமளவுக்கு அதிகரித்துள்ளன. இந்த அபாய ஏதுக்கள் ஏன் அதிகரித்தன என்பதனை நோக்குவது அவசியமாகும்.

பொதுவில் (இது அனைத்து நாடுகளுக்கும் பொருத்தமானதாகும்) வங்கிகளின் ஐந்தொகைப் பத்திரத்தின் அபாய ஏதுக்களின் தொகுப்பு ஐந்து காரணங்களில் ஏதாவது ஒன்றின் நிமித்தம் உயர்ந்து செல்லமுடியும்.

1. வங்கிகள் தமது நடத்தையை மாற்றிக் கொள்வதன் மூலம் அதிக அபாய ஏதுக்களை ஏற்க, விரும்பித் துணிகின்றன. உதாரணமாக, தமது போட்டி உபாயங்களின் ஒரு பாகமாக கடன் பங்கீட்டு முறையைக் குறைத்துக் கொள்கின்றன. மேலும், போட்டி காரணமாக இழக்கப்பட்ட இலாபங்களை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக உயர்ந்த இலாப எல்லை உள்ள வியாபாரங்களில் இறங்குகின்றன. சொத்துக்களை வளர்த்துக் கொள்ளும் குறிக்கோள்கையும் அவை மேற்கொள்கின்றன.

2. ஒழுங்குக் கட்டுப்பாடுகள் குறைந்த அளவுக்குத் தளர்த்தப்பட்டு, அதே வேளையில், கூடிய போட்டி நிலவும் சூழ்நிலையொன்றில் தோன்றக் கூடிய வங்கித்தொழில் துறையின் மாற்றங்கள் காரணமாக இதே நடத்தை பெருமளவுக்கு அபாய ஏதுக்களைக் கொண்டதாக இருக்க முடியும். இதற்குப் பல உதாரணங்களைக் காட்ட முடியும். கடன் பெறுபவர்கள் பல வங்கிகளிலிருந்து கடன் பெறும் ஒரு நிலை தோன்றும். அவர்கள் ஒவ்வொரு வங்கியிடமும் ஏனைய வங்கிகளில் தாம் கடன் பெற்றுள்ள நிலையை மறைத்துக் கொண்டே இவ்விதம் செய்வார்கள். அனைத்து வங்கிகளும் ஒரே நேரத்தில் கணிசமான அளவில் விஸ்தரிப்படையும்.

3. அதிகளவுக்கு அபாய ஏதுக்கள் கொண்ட செய்திட்டங்கள் வங்கிகளிடம் முன்வைக்கப்படுவதன் காரணமாக அல்லது பொருளாதாரம் தானே எதிர்பாரா விதத்தில் அதிகளவுக்கு அபாய ஏதுக்களைக் கொண்டதாக மாற்றமடைவதன் காரணமாக அபாய ஏதுக்கள் உயர்ந்து செல்ல முடியும்.

4. வங்கிகள் தமது நடத்தையை மாற்றிக் கொள்கின்றன. உதாரணமாக, புதிய துறைகள் தற்போதைய வியாபாரத் துறைகளிலும் பார்க்க குறைந்த அளவுக்கு அபாய ஏதுக்களை

அட்டவணை 5

ஸ்கன்டினேவிய வர்த்தக வங்கிகள்

| | டென்மார்க் (டெ. குரோனர் 100 கோடி) | | மாற்றம் | பின்லாந்து (பின். மார்க்க 100 கோடி) | | மாற்றம் | நோர்வே (நோ. குரோனர் 100 கோடி) | | மாற்றம் | சுவீடன் (சுவீடிஷ் குரோனர் 100 கோடி) | | மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | % | 1990 | 1991 | % | 1990 | 1991 | % | 1990 | 1991 | % |
| வட்டி (தேறியது) | 20.50 | 22.16 | 8 | 10.45 | 9.45 | -10.00 | 10.27 | 9.71 | -5 | 29.49 | 30.82 | 5 |
| ஏனைய பெறுவனவுகள் | 3.58 | 8.94 | 150 | 6.51 | 6.01 | -8.00 | 4.60 | 3.63 | -21 | 11.18 | 12.64 | 13 |
| மொத்த பெறுவனவுகள் | 24.09 | 31.10 | 29 | 16.96 | 15.46 | -9.00 | 14.87 | 13.34 | -10 | 40.67 | 43.46 | 7 |
| ஆளணி செலவு | 10.47 | 11.78 | 12 | 5.74 | 5.58 | -3.00 | 5.05 | 4.83 | -4 | 10.36 | 11.27 | 9 |
| ஏனைய செலவு | 7.31 | 8.82 | 21 | 8.31 | 8.97 | 8.00 | 6.65 | 8.47 | 27 | 12.05 | 12.67 | 5 |
| மொத்தச் செலவு | 17.78 | 20.60 | 16 | 14.05 | 14.55 | 4.00 | 11.69 | 13.30 | 15 | 22.41 | 23.09 | 7 |
| முன் பெறுபேறுகள் கடன் நட்டங்களுக்கு | 6.30 | 10.50 | 67 | 2.91 | 0.91 | -68 | 3.18 | 0.04 | -99 | 19.66 | 19.52 | -1 |
| கடன் இழப்புக்கள் | 9.30 | 10.40 | 12 | 1.90 | 6.08 | 220 | 8.03 | 15.48 | 93 | 8.11 | 23.30 | 187 |
| கடன் நட்டத்தின் (பின்னர் 1) | -3.00 | 0.10 | – | 1.01 | -5.17 | – | -4.85 | -15.44 | – | 10.16 | -3.81 | – |

1. ஒதுக்குகளுக்கும் வரிக்கும் முன்னர்

ஆதாரம் : தேசிய மத்திய வங்கிகள்

கொண்டனவாக உள்ளன என்ற தப்பெண்ணத்துடன் வங்கிகள் தமது வியாபார நடவடிக்கைகளை பன் முகப்படுத்துகின்றன.

5. சொத்து வளர்ச்சி நிகழ்வுப் போக்கில் வங்கிகள் பொருளாதாரத்தின் குறிப்பிட்ட ஒரு துறையில் மிதமிஞ்சிய அளவில் புதிய கடன்களை உட்பாய்ச்சுவதன் மூலம் உயர் அளவில் அபாய ஏதுக்களைக் கொண்ட கடன் தொகுப்பொன்றினை பெற்றுக் கொள்கின்றன. அதே துறைக்கு வழங்கப்படும் தனியார் கடன்களும் அதேவிதமான அபாய ஏது குணாம்சங்களைக் கொண்டனவாக இருக்கும்.

ஸ்கண்டிநேவியாவின் ஒவ்வொரு நாட்டிலும் கடந்த சில வருடங்களில் வங்கிகளின் நிதிசார் செயற்பாடு மிக மோசமான நிலையில் சீர்குலைவுற்றுள்ளது. இந்தச் சீர்குலைவு சுழல் முறையில் ஏற்படும் காரணிகள் மற்றும் அமைப்பு ரீதியான காரணிகள் ஆகியவற்றுடன் இணைந்த விதத்திலேயே ஏற்பட்டுள்ளது. பொருளாதார மந்தத்தின் தவிர்க்கமுடியாத தாக்கத்துடன் சுழல்முறை காரணிகள் சம்பந்தப்பட்டுள்ளன. மேலும், சொத்து விலைகளில் காணப்படும் முன் எப்பொழுதும் இருந்திராத வீழ்ச்சியினால் அது மேலும் தீவிரமடைந்துள்ளது. எவ்வாறிருப்பினும், இந்த சுழல்முறைத் தாக்கம் இம்முறை ஒழுங்குவிதிகள் தளர்த்தப்பட்டமையினாலும், போட்டி அதிகரித்துள்ளமையினாலும் தீவிரமடைந்துள்ளது. இந்த நாடுகள் ஒவ்வொன்றிலும் இப்பொழுது கடனுக்கான கேள்வி மிகவும் பலவீனமானதாகவே இருந்து வருகின்றது. பொருளாதாரம் உடனடி மீட்சி ஒன்றுக்கான எந்த ஒரு அடையாளத்தையும் காட்டவில்லை. மெய்யாதன இழப்புக்கள் கணிசமான அளவில் காணப்படுகின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருவதனால் குடும்பத் துறையின் நிதி நிலைமை மிக மோசமான நிலையை அடைய முடியும்.

### ஒரு வளர்முக நாட்டின் அனுபவம்

நைஜீரிய வங்கித்துறை ஒரு பயங்கரமான பாதாளத்தை நோக்கி நகர்ந்து செல்வது போல் தென்படுகின்றது. நைஜீரிய வங்கித் துறையை அச்சமூட்டும் கருமேகங்கள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. 1950களில்

அட்டவணை 6

ஸ்கன்டிநேவிய வங்கிகளின் மொத்தக் கடன்களில் கடன் இழப்புகள் %

| நாடு | 1989 | 1990 | 1991 |
|---|---|---|---|
| டென்மார்க் | 1.3 | 2.3 | 2.5 |
| பின்லாந்து | 0.5[1] | 0.6[1] | 1.8[2] |
| நோர்வே | 2.1 | 2.6 | 5.2 |
| சுவீடன் | 0.3 | 1.1 | 3.3[3] |

1. வெளியிடப்பட்ட நட்டங்கள் மட்டும்
2. எதிர்பார்க்கப்படும் வெளியிடப்பட்ட நட்டங்கள்
3. குழு அடிப்படையில் கடன் இழப்புக்கள்
மொத்தக் கடனின் 2.5 சதவீதத்துக்கு சமமானதாகும்.

ஆதாரம் : தேசிய மத்திய வங்கிகள்

அட்டவணை 7

நைஜீரிய வங்கிகளின் வராசரி திரவத்தன்மை விகிதங்கள்

| காலம் | வர்த்தக வங்கிகள் | வணிக வங்கிகள் | கூட்டுமொத்த சராசரி |
|---|---|---|---|
| 1970 - 75 | 71.2 | – | 35.6 |
| 1976 - 80 | 40.4 | – | 20.2 |
| 1981 - 85 | 52.4 | 69.6 | 61.0 |
| 1986 - 90 | 57.1 | 35.4 | 46.3 |
| 1991 - 2000 (எதிர்வு கூறல்) | 45.3 | 18.8 | 32.1 |

ஆதாரம் : நைஜீரிய மத்திய வங்கி

வங்கித் தொழில்துறையின் செழிப்பு நிலை யுகத்தினை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு, சமஷ்டி அரசாங்கம், நைஜீரிய மத்திய வங்கிக்கு ஊடாக இந்த மிக முக்கியமான துறையை வீழ்ச்சியிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக பல வழிமுறைகளையும் நிறுவனங்களையும் உருவாக்கியது. நைஜீரிய வைப்புக் காப்புறுதிக் கம்பனி மற்றும் கழிவு நிலையங்கள் என்பவற்றின் ஸ்தாபிதம் மற்றும் நைஜீரிய மத்திய வங்கியின் விவேகபூர்வமான வழிமுறைகளின் அறிமுகம் என்பவற்றையும் இவை உள்ளடக்குகின்றன.

சமீபத்தில் நைஜீரிய வைப்புக் காப்புறுதிக் கம்பனி மிகவும் மோசமான செய்திகளைக் கொண்ட உறுதியான தகவல்களை நாட்டுக்கு முன் வைத்தது. தற்பொழுது சிக்கலில் மாட்டியிருக்கும் 26 நைஜீரிய வங்கிகளில் நிச்சயமான அஸ்தமனம் குறித்த செய்தியினையும் அது தந்தது. இந்த 26 வங்கிகளில் அரசுக்குச் சொந்தமான 23 வர்த்தக வங்கிகளும் 3 தனியார் வர்த்தக வங்கிகளும் அடங்கியிருந்தன. தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளும் வங்கிக் கடன் வசதிகளின் முகாமையில் காணப்படும் கட்டுப்பாட்டு கண்காணிப்பு இல்லாத நிலையுமே இந்த தொல்லைகளுக்கான பிரதான காரணங்களாக இருந்து வந்துள்ளன.

இங்கு தரப்பட்டுள்ள அட்டவணை 7 பெரும்பாலான வர்த்தக வங்கிகளினதும் வணிக வங்கிகளினதும் திரவத்தன்மை நிலை 1986 தொடக்கம் வீழ்ச்சியடைந்து கொண்டு வந்திருப்பதனை காட்டுகிறது. இன்னல்களுக்குள்ளாகியிருக்கும் பெரும்பாலான வங்கிகள் தனியாருக்குச் சொந்தமான வணிக வங்கிகளாக (38 சதவீதம்) இருந்து வருகின்றன என்பதனையும் அட்டவணை 8 காட்டுகின்றது. அதனையடுத்து, தனியாருக்குச் சொந்தமான வர்த்தக வங்கிகளும் (27 சதவீதம்) அரசுக்குச் சொந்தமான வர்த்தக வங்கிகளும் (21 சதவீதம்) வருகின்றன. உடனடி எதிர்காலத்தில் வங்கிகளின் திரவத்தன்மை நிலை விருத்தியடைவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

இன்றுள்ளதைப் போன்ற நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் தப்பி உயிர் வாழ்வது என்பது வங்கி உத்திகளைத் திட்டமிடுபவர்களைப் பொறுத்த

வரையில் மிகவும் இலகுவான ஒருபணியாக இருந்துவரவில்லை. வங்கியாளர்கள் இன்றைய சவால்களை எதிர்கொள்ளும் பொருட்டு தமது உத்திகளை இடையறாது மீளாய்வு செய்து வர வேண்டியுள்ளது. வங்கிகளின் ஆட்சேர்ப்புக் கொள்கை, புத்திக் கூர்மையான செயல்முனைப்பும் புதுமைப் புனைவும் கொண்ட ஊழியர் படையொன்றினை வேலைக்குச் சேர்த்துக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

நைஜீரிய வங்கித்தொழில் துறை இப்பொழுது ஒரு நிலைமாற்றக் கட்டத்தில் இருந்து வருகின்றது என்பது தெளிவானதாகும். பல்வேறு சக்திகள் இந்த மாற்றத்தை ஊக்குவித்து வருகின்றன. சிறந்த செலவுக் கட்டுப்பாட்டு முறைகளுக்கான நிர்ப்பந்தங்களை இந்த சக்திகள் எடுத்து வருகின்றன. மேலும், இலாபத் தன்மை, ஊழியர் ஒருவருக்கான வெளியீடு மற்றும் பங்கு மூலதனத்தின் மீதான ஆதாயம் போன்றவற்றின் மீது இப்பொழுது பெருமளவுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது. சந்தையில் இலாப நோக்கம் கொண்ட நிறுவன ரீதியான கட்டமைப்புக்கள் இருந்து வர வேண்டுமென்று இப்பொழுது இடையறாது வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மிகவும் கடுமையான போட்டிக்கு மத்தியில், ஒழுங்குவிதி தளர்ப்பின் தாக்குதல்களை ஆகக் குறைந்த மட்டத்தில் வைத்திருக்கும் பொருட்டு, வங்கிகள் தமது கடன் தொகுப்புக்களை மிகவும் ஆக்கபூர்வமான வழிமுறைகளில் வைத்திருக்க வேண்டிய தேவையுள்ளது. மாறிவரும் நிதிசார் சேவைகளின் சூழ்நிலைக்குள் திறமையுடன் செயற்படுவதற்காக வங்கியின் கடன் தொகுப்பு, வெளியிலிருந்து தூண்டப்படும் சந்தை மற்றும் ஏனைய இடையூறுகளை சமாளிக்கும் விதத்தில் நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடிய விதத்தில் உருவாக்கப்படுதல் வேண்டும். வங்கிகளின் மிக உயர் அளவிலான செயற்பாடு, வருமானத்தை உச்சப்படுத்திக் கொள்ளுதல், செலவுகளை கட்டுப்படுத்துதல் மற்றும் ஒரே சீரான சிறந்த முகாமை என்பவற்றின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்படும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்

முடிவுரை

எதிர்காலத்துக்கான வங்கியினை உருவாக்குதல் என்பது தொடர்ச்சியான ஒரு நிகழ்வுப்போக்காக உள்ளது என்பதனை இங்கு எடுத்துக் கூற வேண்டிய அவசியமில்லை. அபிவிருத்தி செய்வதனை நிறுத்திக் கொள்ளக் கூடிய ஒரு

.32 பக்கம் பார்க்க.

அட்டவணை 8

சிரமத்துக்குள்ளாகியிருக்கும் நைஜீரிய வங்கிகள் – 1991

| உரித்து | எண்ணிக்கை | சதவீதம் | சிரமத்துக்கு உள்ளாகியிருக்கும் வங்கிகள் |
|---|---|---|---|
| அரசுக்கு சொந்தமான வர்த்தக வங்கிகள் | 25 | 21 | 7[1] |
| சமஷ்டி அரசுக்கு சொந்தமான வர்த்தக வங்கிகள் | 8 | 7 | – |
| தனியார் வர்த்தக வங்கிகள் | 32 | 27 | – |
| சமஷ்டி/ அரச வணிக வங்கிகள் | 8 | 7 | – |
| தனியார் வணிக வங்கிகள் | 46 | 38 | – |
| மொத்தம் | 119 | 110 | 8 |

1. இதில் ஒரு வங்கி 20 சதவீதம் அரசுக்கு சொந்தமானது.
ஆதாரம் : நைஜீரிய வைப்பு காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ஆண்டறிக்கை, 1991

அட்டவணை 9

நைஜீரியாவின் சில தெரிவு செய்யப்பட்ட காப்புறுதி செய்யப்பட்ட வங்கிகளின் திரவத்தன்மை நிலைமைகள்

டிசம்பர் 31, 1991

| குழு | எண்ணிக்கை | 30 சதவீதத்துக்கு குறைவாக திரவத் தன்மையைக் கொண்டிருக்கும் வங்கிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| வர்த்தக வங்கிகள் | 64 | 10 (15.6%) |
| வணிக வங்கிகள் | 52 | 10 (19.2%) |
| மொத்தம் | 116 | 20 (17.2%) |
| சிரமப்படும் வங்கிகள் | 8 | 3 (37.5%) |

ஆதாரம் : வங்கித் தரவுகள்

அட்டவணை 10

வங்கி முறிவு ஏற்படும் நிலையில் வைப்பாளர் ஒருவருக்கு கிட்டும் ஆகக்கூடிய பாதுகாப்பு

| நாடு | அமெரிக்க டொலர் பெறுமதி |
|---|---|
| ஆர்ஜன்டீனா | 8,416 |
| அவுஸ்திரியா | 13,100 |
| பெல்ஜியம் | 8,421 |
| பிரேஸில் | 16,500 |
| கனடா | 43,181 |
| சிலி | 5,061 |
| கொலம்பியா | 668 |
| பிரான்ஸ் | 44,518 |
| இந்தியா | 3,815 |
| ஜப்பான் | 59,340 |
| கென்யா | 6,086 |
| நெதர்லாந்து | 14,286 |
| நைஜீரியா | 10,860 |
| நோர்வே | வரையறுக்கப்படாதது |
| பிலிப்பைன்ஸ் | 1,896 |
| ஸ்பெயின் | 16,248 |
| சுவிட்சர்லாந்து | 12,768 |
| துருக்கி | 13,306 |
| ஐக்கிய இராச்சியம் | 17,505 |
| ஐக்கிய அமெரிக்கா | 100,000 |
| யூகோஸ்லாவியா | வரையறுக்கப்படாதது |

ஆதாரம் : டலே மற்றும் மாஸ், வளர்முக நாடுகளில் வைப்புக் காப்புறுதி.

# நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி சில உத்திகள்

திருமதி எஸ். எம். கருணாரத்ன

(மேலதிக பணிப்பாளர்,
தேசிய திட்டமிடல்,
திணைக்களம்)

இருபதாம் நூற்றாண்டின் முடிவினை நாம் அண்மித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், அபிவிருத்தி நோக்கங்களில், நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி முன்னணியில் காணப்படுகின்றது. இதனை அடைவதற்காக வளர்முக நாடுகளில் சர்வதேச முகவரகங்களால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி குறித்த இலக்கு, அடுத்த நூற்றாண்டின் சில வருடங்கள் வரையில் ஒரு பாரிய சவாலாக தொடர்ந்தும் இருந்துவரும். வளர்முக நாடுகளில் எதிர்நோக்கப்படுகின்ற சமூக, பொருளாதார, கலாச்சார சிக்கல்களும் கடினமான நிலைமைகளும் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி குறித்த அர்த்தமுள்ளதும், விவேகபூர்வமானதுமான வரைவிலக்கணத்துக்கான தேவையை எடுத்து வருகின்றன. இந் நாடுகளில் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கான ஒரு தனிப்பட்ட மாதிரி உரு இல்லாததனால், நிலைத்து நிற்கக்கூடிய மாதிரி உருவின் கொள்கைகளும், செயற்பாடுகளும் இந்நாடுகளால் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாகவும், பின்பற்றக்கூடியவையாகவும் அமைய வேண்டும்.

விரும்பத்தக்க அபிவிருத்தி மட்டம் என்பது, பொருளாதார வளர்ச்சியில் உயர்ந்த வீதத்தை அடைந்து கொள்வதும், அதனை நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து பேணி வருவதும் என ஒருவர் வாதிடலாம். உயர்ந்த பொருளாதார வளர்ச்சி பெருமளவு உற்பத்தி வளங்களை வேண்டி நிற்கின்றது. அதிகளவான வளப் பயன்பாடு சூழலை நாசப்படுத்துவதற்குத் துணை போகின்றது. உச்ச பொருளாதாரத் திறனுடன் சூழலியல் சமநிலையை எடுத்து வருவதே இலட்சிய ரீதியான நிலையாகும்.

ஒரு நாடு, அபிவிருத்தியின் மூலம் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியையும், சிறந்த வாழ்க்கைத் தரத்தையும் அடைந்து கொள்ள முடியும் என எதிர்பார்க்கின்றது. வாழ்க்கைத்தரம் என்பது கல்வி, சுகாதாரம், ஆயுள் எல்லை, சிசுமரண விகிதம், நோயற்ற வாழ்வு போன்ற அடிப்படை நலவசதிகளை அடைந்து கொள்வதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. விரும்பத்தகுந்த வாழ்க்கைத் தரத்தை அடைந்து விட்டால் அது நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்க வேண்டும். ஒரு சாதாரண மனிதனது நோக்கில் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி என்பது, மனித திருப்திக்கான பொருட்கள், சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதை நிச்சயப்படுத்திக் கொள்ளும் அபிவிருத்தி மட்டமாகக் கருதப்படும். எவ்வாறெனினும், நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியை மேற்கூறிய வகையில் எளிமைப்படுத்திவிட முடியாது.

நிலைத்து நிற்றல் பற்றிய எண்ணக்கரு, அடிப்படையில் வள நுகர்வு அல்லது பயன்பாட்டினையே குறித்து நிற்கின்றது. பல உலக நிறுவனங்களின் கருத்து, நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி, கால அளவு அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தினதோ அல்லது பரப்பினதோ இயற்கை வளங்களின் மொத்த இருப்பைக் குறைவடையச் செய்யாத ஒரு பொருளாதார அபிவிருத்தியாக இருந்து வருகின்றது என்பதாகும்.

உலக உணவு விவசாய தாபனத்தினால் (FAO) முன்வைக்கப்பட்ட அண்மைக்கால வரைவிலக்கணம், முன்னர் கூறப்பட்டதைவிடச் சிக்கல் நிறைந்ததொன்றாக உள்ளது. 1988ல் FAO வின் ஆலோசனைக்குழு ஆவணத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

> "நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி என்பது, இயற்கை வளங்களின் அடிப்படை முகாமைத்துவத்தையும், நிகழ்கால எதிர்கால சந்ததியினரின் தேவைகள், அவற்றின் கிடைப்பனவு என்பவற்றை நிச்சயப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில், தொழில்நுட்ப நிறுவன ரீதியான மாற்றங்களை நெறிப்படுத்துவது ஆகும். இவ்வகை அபிவிருத்தி நிலம், நீர், தாவரங்கள், மிருகங்கள், ஏனைய உயிரின வளங்கள் என்பவற்றைப் பாதுகாப்பதுடன், சூழலைத் தரம் குறையாமலும், தொழில் நுட்ப ரீதியாகப் பொருத்தமானதாகவும் பொருளாதார ரீதியாக சாத்தியப்பாடுடையதாகவும் சமூகரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் உள்ளது."

இக்கட்டுரை, நிலைத்து நிற்கக் கூடிய வெவ்வேறு அணுகுமுறைகளைச் சுருக்கமாக விளக்குவதோடு, இலங்கையைக் கவனத்திற்கொண்டு, வளர்முக நாடுகளில் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக்கான கொள்கைகள், உருவாக்கம், உத்திமுறைகள் என்பவற்றைத் தெளிவாக அடையாளம் காட்டவும் முயற்சிக்கின்றது.

அபிவிருத்தி என்பது, மூல வளங்களை பொருட்கள், சேவைகள் என்ற வடிவில் மாற்றுகின்ற ஒரு தொகுதி பொருளாதார நடவடிக்கைகளின் வெளியீடாகும். உற்பத்திச் செயன்முறைக்குள் செல்லும் வளங்களை இரு வகைகளாகப் பாகுபடுத் தலாம். ஒன்று இயற்கை மூலதனம். (நீர், மண், தாதுப்பொருட்கள் போன்றன); மற்றையது, மனிதனால் உருவாக்கப்பட்ட மூலதனம் (வீதிகள், மின்சாரம், நீர்ப்பாசனக் கால்வாய்கள் போன்றன). இயற்கை மூலதனத்தில் தீர்ந்து அழிந்து விடுவதும், புதுப்பிக்க முடியாததுமாகிய இரண்டு முக்கிய சிறப்பியல்புகளை அவதானிக்கலாம். இவ்விரு சிறப்பியல்களுமே மேற்குலகில் உள்ள சில புத்திஜீவிகள் உலகத்தின் ஏனைய பகுதிகளுக்கு நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியை சிபார்சு செய்வதற்கு தூண்டியுள்ளன. 1987ம் ஆண்டில் அவர்களால் முன்வைக்கப்பட்ட இக் கருத்து "எங்களின் பொதுவான எதிர்காலம்" என்பதன் அடிப்படையில் அமைந்தது.

வளர்முக நாடுகளில், நிலைத்து நிற்றலுக்கான முன் நிபந்தனையாக அபிவிருத்தி உள்ளது. அபிவிருத்தி அல்லது பொருளாதார வளர்ச்சிச் செய்முறையானது, குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு பெருமளவு உற்பத்தி வளங்களை வேண்டி நிற்கின்றது. இயற்கை வளங்களைத் தொடர்ந்து அகழ்தல் காரணமாக அவை படிப்படியாகத் தரம் குறையும்; அல்லது அழிவடையும். மறுபுறம், உற்பத்திச்

செய்முறையானது, கழிவுகளின் வெளியேற்றம், எச்சங்கள் என்பவற்றின் காரணமாக சூழல் மாசடைதலுக்குப் பங்களிப்பைச் செய்யலாம். வேறு வார்த்தைகளிற் கூறின், பூகோள ரீதியாகப் பூமியின் வளங்களைப் பாதுகாத்தல் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு முன்தேவை எனவும் வாதிடப்படுகின்றது. எவ்வாறெனினும், ஏற்கனவே வளர்முக நாடுகளின் தலாநபர் வள நுகர்வு மிக அடிமட்டத்தில் உள்ள நிலையில், இந்நாடுகள் வள நுகர்வைக் குறைக்க வேண்டும் என எதிர்பார்ப்பது நியாயமானதாகப்படவில்லை. ஆனால், வளர்முக நாடுகள் நன்மையனுபவிக்கக்கூடிய வகையில், வளப்பாதுகாப்புப் பற்றிய உணர்வு ஊட்டக்கூடிய கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டியிருப்பதால் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி பற்றிய இக்கருத்தினை இந்நாடுகள் சார்பாக நிராகரிக்கவும் முடியாதுள்ளது.

நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்காக பல தெரிவுகள் உள்ளன: நிகழ்ச்சி நிரல் 21 சமூக, பொருளாதார, அரசியல் பரப்புக்களை உள்ளடக்கிய சிபார்சுகளைப் பிரேரணை செய்துள்ளது. ஆனால், இக்கட்டுரை நடைமுறைக்குப் பொருத்தமான, தேவைப்படுகின்ற 4 பகுதிகளை எடுத்து மதிப்பீடு செய்து, அவற்றுக்கு அவசியமான கொள்கைகளையும், உத்திகளையும் சுருக்கமாக விளக்குகின்றது. அவையாவன, மூலவளப்பாதுகாப்பு, பொருத்தமான தொழில்நுட்பம், பொதுமக்கள் விழிப்புணர்வு, திட்டமிடலில் சூழல் ஒருங்கிணைப்பு என்பனவாகும்.

1. மூலவளங்களின் பாதுகாப்பு

அபிவிருத்தி நடவடிக்கைகள், புதுப்பிக்கக்கூடிய, புதுப்பிக்க முடியாத ஆகிய இருவகை மூலவளங்களின் பயன்பாட்டுடன் தொடர்புடையதாகும். உற்பத்திச் செய்முறையில் இவ்வளங்கள் குறைக்கப்படலாம்; அல்லது அழிக்கப்படலாம். பாதுகாப்பு என்பது, பதிலீடு செய்வதன் மூலமோ அல்லது மீள் சுற்றுகை மூலமோ வளங்களை வீணடிக்காத வகையில் பயன்படுத்துதல் என்பது புலனாகின்றது. இம்முறைகளுடாக இயற்கை வளங்களின் பாவனை இயலளவுக்காலம் நீடிப்பதுடன், எதிர்கால சந்ததியினருக்கும் அவை கிடைக்கக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்த முடியும்.

மேலும், இலங்கை சார்புரீதியில் கூடியளவு குடித்தொகை அடர்த்தியையும், வரையறுக்கப்பட்டளவில் இயற்கை வளங்களையும், கொண்டிருப்பதால் மூலவளப் பாதுகாப்பிற்கான சகல முயற்சிகளிலும் அது முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

பொருளாதார நோக்கில் மூலவளப் பாதுகாப்பு என்பது அவற்றின் திறமையான உச்சப்பயன்பாட்டின் மூலமே உறுதிப்படுத்தப்படுகின்றது. கோட்பாட்டு ரீதியாக, உற்பத்தியில் உச்ச மட்ட திறமையை எடுத்து வருவதும், நிறைபோட்டிச் சந்தையமைப்பின் கீழ் மூலவளங்களை ஒதுக்குவதுமே மூலவளப்பாதுகாப்பினை உறுதிப்படுத்தும். எவ்வாறெனினும், அரசாங்க தலையீடு காரணமாக சந்தைத் திரிபு ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதாரங்களில் உச்சமட்டத் திறமையை எடுத்து வருவதன் மூலம் மூலவளப் பாதுகாப்பை சாதித்துக் கொள்ள முடியும் என்று கூற முடியாது.

நடைமுறை முகாமைத்துவ நோக்கில் மூலவளப் பாதுகாப்பினை ஒரு தந்திரோபாயமாகப் பிரயோகிக்கும் போது, பல நேர்க்கணிய விளைவுகள் ஏற்பட முடியும். இது இயற்கை வளங்களின் பாவனையின் போது ஏற்படும் வீண்விரயத்தைத் தடுக்கும்; மிகைச் சுரண்டல், அல்லது மிகை எடுப்பினால் ஏற்படக்கூடிய சூழல் அழுத்தத்தைக் குறைக்கும்; நிலைநிறுத்தக்கூடிய அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லக் கூடியதாக நீண்டகாலப் பாவனைக்கேற்றதான பொருளாதாரச் செயற்பாடுகளைக் குறிப்பாக மூலவள சேமிப்பினை மேற்கொள்ளும். பொருளாதார நடவடிக்கையின் பெரும்பகுதிக்கு முதல் நிலைப் பண்டங்கள் துறையையே நம்பியிருக்கின்ற இலங்கை போன்ற ஒரு நாட்டில் மூல வளப்பாதுகாப்பு கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகவே இருக்கும். உதாரணமாக, ஒரு கிராமிய விவசாயியை எடுத்து நோக்கின் அவன் பல பிள்ளைகளைக் கொண்ட தனது குடும்பத்தைப் பராமரிப்பதற்காக நிலத்தினைக் கூடுதலாகச் சுரண்டுவான். விவசாயி வறுமையில் இருப்பின் கூடுதலான அளவுக்கு அத்தியாவசியமான உள்ளீடுகளையேனும் பயன்படுத்தி, நிலத்திலிருந்து உச்சப் பயனைப் பெறமுடியாதவனாகவே இருப்பான். அவனுடைய பயிர்ச் செய்கை முறை திறனுடையதாக அமையாதது மட்டுமன்றி, வெளியீட்டு மட்டமும் குறைவாகவே இருக்கும். இவ்வகையான விவசாயிகள் மூலவளப்பாதுகாப்புப் பற்றிய கருத்துக்களில் அல்லது செய்முறைகளில் நம்பிக்கை வைக்கமாட்டார்கள்.

இதேமாதிரியான நிலையை இரண்டாவது துறையிலும் அவதானிக்கலாம். துரித கைத்தொழில் மயமாக்கத்திற்குச் சாதகமான பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளும், இலாப உச்சப்படுத்தலை நோக்கிச் செயற்படுத்தும் கைத்தொழில்களும் மூலவளங்களின் மிகைச் சுரண்டலுக்கு வழிவகுக்கின்றது. மேலும், காலத்துக்கொவ்வாத திறனற்ற தொழில் நுட்பங்கள் காரணமாக கைத்தொழில் மூலமான சூழல் மாசடைதல் மோசமாக ஏற்பட முடியும். இவை அசுத்தமான வாழ்க்கைச் சூழலை உருவாக்குவதால் பொதுவாக நல்வாழ்வுக்கும், மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கும் அச்சுறுத்தலாக அமைகின்றன.

இந்நிலையில் உற்பத்தியாளர், நுகர்வோர் ஆகிய இரு சாராரையும் கவனத்திற் கொண்டதாக, அவர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தித் தந்திரோபாய முறைகளை மேலும் நடைமுறைப்படுத்த வேண்டும். கழிவுகளின் குறைப்பு, பதிலீடு, மீள்சுற்று ஆகிய மூன்று முறைகளும் பாதுகாப்பு நோக்கி நடைமுறைப்படுத்தக் கூடியவையாகும். ஏற்கனவே மூல வளங்கள் குறைந்து செல்கின்ற நிலையில் இருந்திருப்பின் பதிலீட்டை முன் வைக்கலாம். உதாரணமாக, நிர்மாணக் கைத்தொழிலில் சீமெந்து, மரம் போன்றவை ஏனைய தகுந்த மூலப்பொருட்களால் பிரதியீடு செய்யப்படலாம். இவ்வகையான கொள்கைகள், கணிசமான அளவு மூலவளக்குறைப்புக்கும், வளப்பாவனையின் காலம், திறன் என்பவற்றின் அதிகரிப்பிற்கும் உதவ முடியும். ஆகவே, தொகுத்து நோக்கின் பாதுகாப்புக் கொள்கைகள், முழுதுறை சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களையும் குறிப்பாக விவசாயம், கைத்தொழில், நிர்மாணம், வலு என்பவற்றை உள்ளடக்கியதாகச் செயற்பட வேண்டும்.

2. பொருத்தமான தொழில்நுட்பம்

நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியில் அடுத்த முக்கிய அம்சம்

பொருட்கள், சேவைகளின் உற்பத்திக்காகத் தெரிவு செய்யும் தொழில் நுட்பமாகும். பொருத்தமான தொழில்நுட்பம் என்பதற்குப் பதிலாக உபயோகிக்கும் சொற்றொடரே கேடு விளைவிக்காத தொழில் நுட்பமாகும்; அல்லது சூழல் வட்டத்தினரால் கூறப்படுவது போல "சூழல் நட்புத் தொழில்நுட்பம்" எனவும் கூறலாம். பூகோள வெப்பம், ஓசோன் படை தேய்வடைதல் போன்ற சூழல் பாதிப்புகளுக்கு மேற்குலகில் உள்ள பல சூழல்வாதிகள் நவீன தொழில் நுட்பத்தினையே குறைகூறுகின்றனர். கடந்த சில வருடங்களாக சூழலில் பாதகமான விளைவுகளை எற்படுத்தக் கூடிய பொருட்கள், சேவைகளை நுகர்வோர் சுயமாகவே கட்டுப்படுத்தியதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவ்வகையில் மீள்சுற்றுகை, மீள் பாவனை முழுதாகவே உபயோகத்திலிருந்து விலக்குதல் என்பவை சமூக உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும். இவ்வாறான ஒரு போக்கினை விவசாயத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளிலும் காணலாம். இவ்வகை மாற்றங்கள் மெதுவாகவே செயற்பட்ட போதும், உறுதியானவையாக, நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை நோக்கிச் செயற்பட்டதை அவதானிக்க முடிகிறது.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளுக்கு, கேடுவிளைவிக்காத தொழில்நுட்பத்திற்கான முக்கிய தகுதி விதிகளாக பொருளாதார சாத்தியப்பாடும், சமூக ஏற்புடைமையும் காணப்படுகிறது. ஒரு நாடு போதுமான இயற்கை வளங்களை மூலப்பொருட்களாகக் கொண்டிருக்கவில்லையெனில், பொருளியல் அளவுத்திட்ட விளைவுகள் எனப் பாகுபடுத்தப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பங்கள் அந் நாட்டிற்குச் சாத்தியமாக மாட்டாது. சில நாடுகள் உயர்நிலை அறிவைப் பெற்றிருக்க மாட்டா; அல்லது நுண்மையான தொழில்நுட்பங்களைக் கையாளக் கூடிய திறமைசாலிகளைக் கொண்டிருக்கமாட்டா. சில நாடுகளுக்கு ஊழியச் செறிவு வாய்ந்த தொழில்நுட்பம் கூடிய ளவு பொருத்தமானதாகவும், நன்மை பயக்கக்கூடியதாகவும் அமைய முடியும். கேடுவிளைவிக்காத தொழில் நுட்பம் மீதான தீர்மானம் மேற்கொள்கின்ற போது இக்காரணிகளைக் கவனத்திற் கொள்ள வேண்டும். மேலும், நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியின் இலக்குகள், முன்னுரிமைகள், மாதிரிகள் என்பவற்றைத் தெரிவுசெய்கின்ற போது மேற்கூறிய காரணிகளை மதிப்பிட்டு, கணிப்பிட வேண்டும்.

ஆசியாவிலுள்ள பல நாடுகள் பொருத்தமான தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தலில் நிறைய அனுபவங்களைப் பெற்றுள்ளன. இந்நாடுகள் தொழில்நுட்பம் சார்ந்த சூழல் ஆய்வுகளுக்கும், விவசாயம், வலு, கைத்தொழில்களுடன் சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகளின் தந்திரோபாயங்களுக்கும் ஆதரவளிக்கின்றன.

கேடுவிளைவிக்காத தொழில் நுட்பமானது, சூழலுக்குத் தீங்கு விளைவிக்கின்ற செய்முறைகளை நடுநிலைப் படுத்தக்கூடிய தரத்தினைக் கொண்டிருக்க வேண்டும். உதாரணமாக, எமது நாடுகளில் நீண்டகாலமாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற தொழில் நுட்பம் இவ்வாறான தரத்தினைக் கொண்டுள்ளன. சுதேச தொழில்நுட்பத்தினை மீளப் பலப்படுத்தக் கூடிய வகையில் அபிவிருத்தி, ஆராய்ச்சிகளில் முதலிடுவதும், நவீன தொழில்நுட்பத்துடன் இவற்றை ஒருங்கிணைப்பதும் வளர்முக நாடுகளுக்கு பரந்தளவில் நன்மையைக் கொடுக்கக் கூடியதாகும். சுதேச தொழில்நுட்ப முறைகளை உள்ளடக்கிய உயிரியில், தாவரவியல், இயந்திரவியல் முறைகளுடன் கூடிய விவசாய பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளைத் தவிர வேறொரு சூழலோடு நட்பான தொழில்நுட்பம் ஒன்றினைச் சிந்திக்க முடியாது. இவ்வாறான சுதேச தொழில் நுட்ப அறிவு பேணிப் பாதுகாக்கப் படுவதுடன், எதிர்கால சந்ததிக்கும் எடுத்துச் செல்லப்பட்டு நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தொழில்நுட்பத்தின் பூகோள மயமாதல் நோக்கிய தற்போதைய போக்கு, சந்தை என்பன பொருளாதார செயற்றிறன் காரணங்களுக்காக, சுதேச தொழில்நுட்பத்தினைக் கடைப்பிடிக்கும் கொள்கைகளைச் சிக்கலாக்கியுள்ளன. எவ்வாறெனினும், வளர்முக நாடுகள் இவ்வாறான கொள்கைகளைக் கடைப்பிடிக்கும்போது - குறிப்பாக, இயற்கை வளங்கள் குறைவாக உள்ள நாடுகளுக்கு - கூடிய நன்மைகள் ஏற்பட முடியும். வளங்களின் தரக்குறைவு, சூழல் பாதிப்பு என்பவற்றைக் குறைந்தளவில் ஏற்படுத்தக்கூடிய, பொருத்தமான தொழில்நுட்பம் தொடர்பான துறைகளில், தூண்டுதல்கள், மற்றும் சலுகையடிப்படையிலான செயற்பாடுகள் மூலமும் தலையிட்டு, அத்தியாவசியமான மாற்றங்களைக் கொண்டு வருவது அவசியமானது.

3. பொதுவிழிப்புணர்வு

சூழலுடன் தொடர்புடைய விடயங்களுக்கு நீடித்திருக்கக்கூடிய தீர்வினை மனித நடத்தையுடன் தொடர்பான செயற்பாடுகளிலே பெருமளவுக்குக் காணலாம். மக்களின் வாழ்க்கை முறையில் குறிப்பாக நுகர்வுப் பழக்க வழக்கங்களைச் சீர்ப்படுத்துவதன் மூலம் ஒரு நேர்த்தாக்கத்தினை ஏற்படுத்தலாம். ஒரு புறம் வளங்களின் சிக்கனமற்ற நுகர்வுக் குறைப்பும், மறு புறம் தீவிர வறுமையும் வளர்முக நாடுகளில் தீர்க்கப்பட வேண்டிய முரண்பட்ட கொள்கைகளாகும். உலகம் இன்று வள நுகர்வு மட்டத்தின் நுழைவாயிலை அடைந்து விட்டது. மேற்குலகில் உள்ளவர்களும், வளர்முக நாடுகளில் செல்வந்தர்களும் வளப் பாதுகாப்பு நடைமுறைகளில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இவர்கள் பொருட்கள், சேவைகள் நுகர்கின்ற போது "அதிகம்" என்பதற்குப் பதிலாக "போதும்" என்ற நிலையைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

சமூக, கலாச்சார விழுமியங்கள் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியின் புறக்கணிக்கப்பட முடியாத முக்கியமான பகுதிகளாகும். சூழல் நடவடிக்கைகள் மனிதனையும், அவனுடைய வாழ்க்கைச் சூழலையும் நேரடியாகப் பாதிப்பதனால், அவன் சில தியாகங்களைச் செய்வதன் மூலம் இணக்கப் பாட்டிற்கு வருவது அத்தியாவசியமானது. இந்நிலையில் ஒரு சமூகத்தின் செல்வந்தர்களும், வசதிபடைத்தவர்களும் ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டு சிறந்த பங்கினை ஆற்றுவதன் வழியாக சமூகத்தில் உள்ள ஏனையோரும் பின்தொடர வழிசெய்யலாம். அது வீண்விரயத்தைத் தடுப்பதற்கானசெயற்றிறன் வாய்ந்த வழிமுறையாக இருப்பதுடன், வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் பொருட்கள், சேவைகளின் கேள்வியிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

சிறந்த சூழல் முகாமைத்துவத்திற்கானு பொதுசன பங்கு கொள்ள

33 பக்கம் பார்க்க.

UNDP

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP) இன்று உலகின் மிகப்பெரிய பல்தரப்பு நன்கொடை அபிவிருத்தி உதவிகளை அளிக்கும் நிறுவனமாக உள்ளது. இது 120 க்கும் அதிகமான நாடுகளில் தனது கிளை அலுவலகங்களையும், 40 விசேடதர நிபுணத்துவ தொழில்நுட்ப முகவர் நிலையங்களையும் கொண்டிருப்பதுடன், அரச சார்பற்ற நிறுவனங்களுடன் மிகவும் விரிவான முறையில், செயற்பட்டும் வருகின்றது. இது ஏறக்குறைய 160 வளர்முக நாடுகளுக்கு தனது சேவையை அளித்து வருகிறது. எந்தவொரு சமயத்திலும், இது அண்ணளவாக 7000 கோடி அமெரிக்க டொலர்கள் பெறுமதி வாய்ந்த 6000 கருத்திட்டங்களுக்கு தனது ஆதரவினை அளித்து வருகிறது. கருத்திட்டங்களுக்குத் தேவையான ஆளணி மற்றும் வசதிகள், உபகரணங்கள், வழங்கல்கள் என்பவற்றிற்கு வேண்டிய மொத்தக் கருத்திட்டச் செலவில் அரைவாசிக்கும் மேற்பட்ட தொகையை வளர்முக நாடுகளின் அரசாங்கங்கள் வழங்குகின்றன.

தற்சார்பு நிலையினை மேம்படுத்துவதையும் நிலைத்து நிற்கக்கூடிய மானிட அபிவிருத்தியினை ஊக்குவிப்பதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நடவடிக்கைகளில் மக்களே மையமாகக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அதனால் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (ஐ.நா.அ.தி.) கருத்திட்டங்கள் பின்வரும் அம்சங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன;

- உற்பத்தித்திறன் கொண்ட மூல வளங்களை இனங்கண்டு, அளவிடுதல்.
- எல்லா மட்டங்களிலும், தேவைப்படுகின்ற எல்லாத் திறன்களிலும் தொழில்நுட்பப் பயிற்சியினை அளித்தல்.
- பயிற்சியோடு இணைந்த விதத்தில் உபகரணங்களையும், தொழில் நுட்பத்தினையும் வழங்குதல்.
- அபிவிருத்தி முயற்சிகளைத் திட்டமிட்டு, ஒருங்கிணைப்பதில் ஒத்துழைப்பு வழங்குதல்.

இங்கு 6 விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. அவையாவன;

வறுமை ஒழிப்பும், கீழ்மட்ட அபிவிருத்தியும்;
சுற்றுச் சூழலும், தேசிய மூல வளங்களும்;
முகாமைத்துவ அபிவிருத்தி;
வளர்முக நாடுகளிடையே தொழில்நுட்ப ஒத்துழைப்பு;
தொழில்நுட்ப இடமாற்றுகையும், அதனை நிலைமைக்கு ஏற்ப பொருந்தச் செய்தலும்;
அபிவிருத்தியில் மகளிர் ஆகியன வாகும்.

மானிட அபிவிருத்திக்கான ஓர் உந்து விசை என்ற முறையில் தொழில் முனைப்புக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. பூகோள ரீதியிலான பல்பரிமாண நிகழ்ச்சித்திட்டங்களில் எச்.ஐ.வி./எயிட்ஸ் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளும் உள்ளடங்குகின்றன. அண்ணளவாக 70 கோடி அமெரிக்க டொலர் பெறுமதி வாய்ந்த 630 ற்கும் அதிகமான சுற்றுச் சூழல் தொடர்பான கருத்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

1992ல் ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் 10800 சர்வதேச நிபுணர்களையும், 11,500 தேசியமட்ட நிபுணர்களையும் ஆட்சேர்ப்பு செய்திருக்கிறது. ஐக்கிய நாடுகளின் தொண்டர் அமைப்பிலுள்ள 3300 தொண்டர்களினூடாகவும், விசேட நிபுணத்துவத்தினை வழங்கியிருக்கிறது. இது வருடாந்தம் ஏறக்குறைய 16 கோடி டொலர்களுக்கும் அதிகமான பெறுமதிமிக்க உபகரணங்களை வழங்குகின்றது. அத்தோடு, நிதியுதவி வழங்கப்படுகின்ற எல்லாக் கருத்திட்டங்களிலும் பணிபுரிகின்ற தேசியமட்ட ஆளணியினருக்கு பயிற்சியினை வழங்குகின்றது. வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்காக வளர்முக நாடுகளின் பிரஜைகளுக்கு ஏறக்குறைய 14,000 புலமைப் பரிசில்களையும் அது வழங்குகிறது.

முழு ஐக்கிய நாடுகள் முறைமையினாலும் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளில் பிரதான ஒருங்கிணைப்புப் பணியினையும் ஐ. நா. அ. திட்டம் புரிகிறது. ஒவ்வொரு நாட்டையும் பொறுத்தவரையில், அந்நாட்டு ஐ.நா.அ. திட்டத்தின் தலைவர், ஐக்கிய நாடுகள் முறைமையினது அபிவிருத்திச் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு, வதிவிட ஒருங்கிணைப்பு அதிகாரியாக பதவியில் அமர்த்தப்படுவதோடு, அவரே ஐக்கிய நாடுகளின் பல்வேறு நிறுவனங்களினதும், முகவர் நிலையங்களினதும், உள்நாட்டுப் பிரதிநிதியாகவும் கடமையாற்றுகிறார்.

அநேகமாக பூமியிலுள்ள ஒவ்வொரு நாட்டினதும் மனமுவந்த அன்பளிப்புகளின் மூலமாகவே ஐ.நா.அ. திட்டத்திற்கு நிதி அளிக்கப்படுகிறது. 1992ல் ஐ.நா.அ. திட்டத்திற்கும், அதனோடிணைந்த நிதியங்களுக்கும் 130 கோடி டொலர்களை வழங்குவதற்கு அரசாங்கங்கள் உறுதிமொழி அளித்திருந்தன.

ஐ.நா.அ.தி. திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட "மானிட அபிவிருத்தி அறிக்கை - 1993" என்ற வெளியீட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

# மானிட அபிவிருத்தி அறிக்கை 1993

*உலகின் 90% ஆன மக்கள் தங்கள் சொந்த வாழ்க்கையினைக் கட்டுப்படுத்தும் வலுவற்றவர்களாக உள்ளனரென்றும், "தொழிலற்ற வளர்ச்சி" காணப்படுகிறதென்றும், சிறுபான்மையினர் தவிர்க்கப்பட்டுள்ளனரென்றும், மத்தியில் அமைந்துள்ள பலமே, மாற்றத்திற்கான இலக்குகளாக இருக்கிறதென்றும் சமீபத்திய மானிட அபிவிருத்தி அறிக்கை தெரிவிக்கிறது.*

*மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணில் அமெரிக்காவின் வெள்ளை இன மக்கள் முதலாம் இடத்திலும், கறுப்பு மற்றும் ஹிஸ்பானிக் குடித்தொகைகள் வளர்முக நாடுகளுடன் வரிசைப்படுத்தப்படலாம் எனவும் ஐ.நா.அ. திட்டத்துக்காக தயாரிக்கப்பட்ட நூலில் தெரிவிக்கப்படுகிறது. இந்த அறிக்கை தனியே நாடுகளைப் பற்றி வற்புறுத்தாது, மக்களின் பாதுகாப்புப் பற்றியே வற்புறுத்துகிறது.*

*இந்த அறிக்கை வெளியிடப்பட்ட மூன்று ஆண்டு காலத்திற்குள், நிபுணத்துவம் வாய்ந்ததும், சுயாதீனமானதுமான இந்த அறிக்கை, பாராளுமன்ற விவாதங்களை ஏற்படுத்தி இருப்பதோடு, ஏறக்குறைய 20க்கும் அதிகமான வளர்முக நாடுகள் தங்களின் அபிவிருத்திப் பாதைகளை மாற்றிக்கொள்வதற்கு வேண்டிய ஊக்கத்தினையும் அளித்துள்ளதென ஐ.நா.அ. திட்டம் தெரிவிக்கிறது*

ஐ.நா.அ. திட்டம், 25 மே, 1993

சாதகமான சந்தைப் பொருளாதாரங்கள், பலகட்சி, ஜனநாயகங்கள் அடிமட்ட நடவடிக்கைகள் என்பன உலகம் பூராவும் மாற்றங்களை ஏற்படுத்தி வரும் சூழ்நிலையிலும் உலக சனத்தொகையில் 90% ஆன மக்கள் தங்களின் சொந்த வாழ்க்கை நிலையைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அற்றவர்களாக இருக்கின்றனர் என "மானிட அபிவிருத்தி அறிக்கை - 1993" தெரிவிக்கிறது.

"இன்று காணப்படும் போராட்டங்களிற் பல, அரசியல் பலத்தைப் பெறுவதற்கான போராட்டங்களாக உள்ளன" என்று ஐ. நா. அ. திட்டத்தின் நிர்வாகியான வில்லியம் எச். டிறேப்பர் இந்த அறிக்கையின் முன்னுரையில் தெரிவித்திருக்கிறார். "அவை காணி, நீர், தொழில், இருப்பிட வசதி, அடிப்படைச் சமூக சேவைகள் போன்ற வாழ்க்கையின் சாதாரண வாய்ப்புகளை அடைவதற்கான போராட்டங்களாக உள்ளன" என அவர் மேலும் கூறுகிறார்.

பொருளியலாளர்களைக் கொண்ட ஒரு சுயாதீனக் குழுவினால் ஐ.நா.அ. திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்டு, ஐக்கிய அமெரிக்காவின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தினால் பிரசுரிக்கப்பட்ட இந்த அறிக்கையில், சிறுபான்மை இனமக்கள், வறியோர், கிராமவாசிகள், பெண்கள், ஊனமடைந்தோர் ஆகியோர் தங்கள் சொந்த வாழ்க்கை நிலையை மாற்றிக் கொள்வதில் சொற்ப பலத்தையே கொண்டிருக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய பலம்குன்றிய தன்மை அனைத்து நாடுகளுக்கும் பரவக்கூடும்.

மானிட அபிவிருத்திக்கான அடிப்படைச் செய்தியானது இன்னமும் மாற்றம் அடையவில்லை என்றும், ஒரு நாட்டின் அபிவிருத்திக்குப் பொருளாதார வளர்ச்சி இன்றியமையாதது என்றும், அந்த வளர்ச்சி மக்களின் வாழ்க்கைக்குள் எடுத்து வரப்படல் வேண்டும் எனவும் பாகிஸ்தானின் முன்னாள் நிதி, திட்டமிடல் அமைச்சரும், தற்போது, ஐ.நா.அ.தி. நிர்வாகியின் விசேட ஆலோசகரும், இந்த அறிக்கையின் பிரதம ஆசிரியருமான மஹ்பூப் அல்ஹக் தெரிவிக்கிறார். "வருமானம் மிகவும் அவசியமானது; ஆனால், இது ஒரு கருவியே தவிர மனிதவாழ்க்கையின் ஒட்டுமொத்தமும் அதுவல்ல" என்கிறார் அவர். மக்கள் தங்கள் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்துகின்ற பணத்தினை உழைப்பதற்குப் புறம்பாக, சுகாதாரம், கல்வி என்ற விடயங்களிலிருந்து தொழில் வாய்ப்பு வரையிலும் அவை கையாளப்படுகின்ற விதத்திலும் பல விருப்புத் தெரிவுகளை செய்கின்றனர்.

இந்த அம்சத்தை தெளிவுபடுத்துவதற்கு, இவ்வறிக்கையானது, மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணின் (HDI) அடிப்படையில் நாடுகளை வரிசைப்

# மானிட அபிவிருத்திச் சுட்டெண்
## ஒவ்வொரு நாடும் பெற்றுள்ள ஸ்தானம்

### உயர் மானிட அபிவிருத்தி

1. ஜப்பான்
2. கனடா
3. நோர்வே
4. சுவிட்ச்சர்லாந்து
5. சுவீடன்
6. ஐக்கிய அமெரிக்கா
7. அவுஸ்திரேலியா
8. பிரான்ஸ்
9. நெதர்லாந்து
10. ஐக்கிய இராச்சியம்
11. ஐஸ்லாந்து
12. ஜேர்மனி
13. டென்மார்க்
14. பின்லாந்து
15. அவுஸ்திரியா
16. பெல்ஜியம்
17. நியுசிலாந்து
18. லக்ஸம்போர்க்
19. இஸ்ரேல்
20. பார்படோர்ஸ்
21. அயர்லாந்து
22. இத்தாலி
23. ஸ்பெயின்
24. ஹொங்கொங்
25. கிரீஸ்
26. செகோஸ்லவாக்கியா
27. சைப்பிரஸ்
28. ஹங்கேரி
29. லித்துவேனியா
30. உருகுவே
31. ரினிடாட்டொபாகோ
32. பஹாமாஸ்
33. கொரியக் குடியரசு
34. எஸ்தோனியா
35. லத்வியா
36. சிலி
37. ரஷ்ய சமஷ்டி
38. பெலாரஸ்
39. மால்டா
40. பல்கேரியா
41. போர்த்துக்கல்
42. கோஸ்டாரிகா
43. சிங்கப்பூர்
44. புரூனே தாருஸ்ஸலவா
45. உக்ரேன்
46. ஆர்ஜென்டினா
47. ஆர்மீனியா
48. போலந்து
49. ஜோர்ஜியா
50. வெனிசுவலா
51. டொமினிகா
52. குவைத்
53. மெக்ஸிக்கோ
54. கசாகிஸ்தான்
55. கட்டார்

### நடுத்தர மானிட அபிவிருத்தி

56. மொரிஷஸ்
57. மலேசியா
58. பஹ்ரேய்ன்
59. கிரனாடா
60. அன்டிகுவா பாபுடா
61. கொலம்பியா
62. அஸர்பைஜான்
63. சீஷெல்ஸ்
64. மொல்டோவா குடியரசு
65. சுரினாம்
66. துருக்மெனிஸ்தான்
67. ஐக்கிய அரபு எமிரேட்டுகள்
68. பனாமா
69. ஜமைக்கா
70. பிரேசில்
71. பிஜி
72. செண்ட் லூசியா
73. துருக்கி
74. தாய்லாந்து
75. கியுபா
76. சென்ற் வின்சண்ட்
77. ருமேனியா
78. அல்பேனியா
79. செண்ட் கிட்ஸ் நேவிஸ்
80. உஸ்பெகிஸ்தான்
81. சிரிய அரபுக் குடியரசு
82. பெலிஸ்
83. கிருகிஸ்தான்
84. சவூதி அரேபியா
85. தென் ஆபிரிக்கா
86. இலங்கை
87. லிபிய அரபு ஜமாஹிரியா
88. தஜிகிஸ்தான்
89. ஈக்குவாடர்
90. பரகுவே
91. கொரிய ஜனநாயகக் குடியரசு
92. பிலிப்பைன்ஸ்
93. டியுனீஸியா
94. ஓமான்
95. பெரு
96. இராக்
97. டொமினிகன் குடியரசு
98. சமோவா
99. ஜோர்தான்
100. மங்கோலியா
101. சீனா
102. லெபனான்
103. ஈரான் இஸ்லாமிய குடியரசு
104. பொஸட்வானா
105. கயானா
106. வனாட்டு
107. அல்ஜீரியா
108. இந்தோனீசியா
109. கபொன்
110. எல்சல்வடோர்
111. நிகாராகுவா

### குறைந்த மானிட அபிவிருத்தி

112. மாலைதீவு
113. கவ்தமாலா
114. கேப்வேர்ட்
115. வியட்நாம்
116. ஹொண்டுராஸ்
117. சுவாசிலாந்து
118. சொலமன் தீவுகள்
119. மொரோக்கோ
120. லெலோதோ
121. சிம்பாப்வே
122. பொலிவியா
123. மியான்மார்
124. எகிப்து
125. சர்வோடோம் பிரின்ஸிபே
126. கொங்கோ
127. கென்யா
128. மடகாஸ்கார்
129. பபுவா நியுகினியா
130. சம்பியா
131. கானா
132. பாகிஸ்தான்
133. கமரூன்
134. இந்தியா
135. நமீபியா
136. கோடேடிவொயா
137. ஹைடி
138. டன்ஸானியா குடியரசு
139. கொமரோஸ்
140. ஸையரோ
141. லாவோ மக்கள் ஜனநாயகக் குடியரசு
142. நைஜீரியா
143. யெமன்
144. லைபீரியா
145. டோகோ
146. உகண்டா
147. பங்களாதேஷ்
148. கம்போடியா
149. ருவண்டா
150. செனிகல்
151. எதியோப்பியா
152. நேபாளம்
153. மலாவி
154. புருண்டி
155. ஈக்குவாடோரியல் கினியா
156. மத்திய ஆபிரிக்கக் குடியரசு
157. மொசாம்பிக்
158. சூடான்
159. பூட்டான்
160. அங்கோலா
161. மொரிடானியா
162. பெனின்
163. டிஜிபோடி
164. கினியா பி[illegible]
165. [illegible]சாட்
166. சோமாலியா
167. காம்பியா
168. மாலி
169. [illegible]
170. [illegible]கினா பார்சோ
171. ஆப்கானிஸ்தான்
172. சியாராலியோன்
173. கினியா

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்

படுத்துகின்றது. இதில் ஆயுள் எல்லை, கல்வித் தரம், அடிப்படைக் கொள்வனவுச் சக்தி ஆகியவை உள்ளடக்கப்பட்டு மானிட அபிவிருத்தியின் ஒரு குறிகாட்டியாக கணிக்கப்படுகிறது. உயர்வருமானங்களைக் கொண்டுள்ள நாடுகள் எப்போதுமே, மானிட அபிவிருத்தியில் உயர் சுட்டெண்களைக் கொண்டிருக்கவில்லை. ஜப்பான் 1993 இல் அதன் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமானத்தில் ஆறாவதாக இருந்த போதிலும், மானிட அபிவிருத்திச் சுட்டெண் அடிப்படையில் முதலிடத்தில் இருந்தது. இச்சுட்டெண்ணின் பிரகாரம், கனடா இரண்டாம் இடத்திலும் அதைத் தொடர்ந்து நோர்வே, சுவிட்சர்லாந்து, சுவீடன், அமெரிக்கா (வருமானத்தில் முதலிடம்) அவுஸ்திரேலியா, பிரான்ஸ், நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளும் காணப்படுகின்றன. வளர்முக நாடுகளிடையே, முதலிடத்தில் உள்ள பர்படோஸ் இச்சுட்டெண் அடிப்படையில் இருபதாவது இடத்தையும் அதைத் தொடர்ந்து ஹொங்கொங் (24), சைப்பிரஸ் (27), உருகுவே (30), டிரினிடாட் - டொபாகோ (31), பஹமாஸ் (32), கொரியக் குடியரசு (33), சிலி (36), கோஸ்டாரிகா (42), சிங்கப்பூர் (43) ஆகிய நாடுகளும் உள்ளன.

மானிட அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் அதன் மட்டங்களை மேம்படுத்துவதற்கான தேவை வளர்முக நாடுகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கவில்லை. பொருளாதார, சமூக அனுகூலங்களிலிருந்து சிறுபான்மை இனமக்கள் முழுமையாக தவிர்க்கப்பட்டுள்ளதை எடுத்துக் காட்டுவதற்கு, அமெரிக்காவின் வெள்ளை இன, ஆபிரிக்-அமெரிக்க இன, ஹிஸ்பானிக் இன மக்கள் குழுவினரை இவ்வறிக்கை தனித்தனியே இந்தச் சுட்டெண்ணில் வேறுபடுத்திக் காட்டி இருப்பதைக் குறிப்பிடலாம். இந்தச் சுட்டெண்ணில், (அமெரிக்க) வெள்ளை இன மக்கள் ஜப்பானையும் மிஞ்சி முதலாவது இடத்தில் இருக்கும் அதேவேளையில், மிகவும் குறைந்த ஆயுள் எல்லை, வருமானம், கல்வித் தரம் என்பவற்றைக் கொண்டுள்ள (அமெரிக்காவில் வாழும்) ஆபிரிக்க - அமெரிக்க இன மக்கள் 31வது இடத்தைப் பெறுகின்றனர். இது டிரினிடாட் - டொபாகோ நாட்டின் ஸ்தானத்துக்கு சமானமாக உள்ளது. அமெரிக்காவில் வாழும் ஹிஸ்பானிக் இன மக்கள் பகாமாஸ், கொரியக் குடியரசு, எஸ்ரோனியா ஆகிய நாடுகளுக்குக் கீழ் 35வது வரிசையில் இடம் பெறுகின்றனர். வறியோர், பெண்கள், கிராமவாசிகள் போன்ற ஏனைய கூட்டத்தினரும் முழுதளவான பங்களிப்பில் இருந்து தவிர்க்கப்பட்டுள்ளனர் என ஏனைய நாடுகள் பற்றிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பங்களிப்புச் செய்தல், தவிர்க்கப்படுதல் போன்ற விடயங்களை உலகளாவிய ரீதியில் மீளாய்வு செய்த பின்பு, "உலக குடித்தொகையில் 10 சதவீதத்திற்கும் குறைவானவர்களே அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார வாழ்க்கை நிலைகளில் முழுதளவாக பங்களிப்பு செய்வதாகத் தோன்றுகின்றது" என இந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

மக்களின் உண்மையான தேவைகளைச் சுற்றி சமூகங்களைக் கட்டியெழுப்புவதற்கு, "மக்களை மையமாகக் கொண்ட ஒரு உலக ஒழுங்கு தொடர்பான ஐந்து புதிய தூண்களுக்கான அழைப்பை" இந்த அறிக்கை விடுக்கின்றது:

1. நாடுகளினதும் பிராந்தியங்களினதும், பாதுகாப்பை வலியுறுத்தாது, மக்களின் பாதுகாப்பை வலியுறுத்துகின்ற புதிய எண்ணக்கருக்கள்: இதன் கருத்து துரிதப்படுத்தப்பட்ட ஆயுதப் பரிகரணம், மானிட அபிவிருத்தியை ஊக்கப்படுத்தும் நோக்கில் பாதுகாப்புச் செலவினத்தைக் குறைத்தல் என்பவற்றை எடுத்து வருவதாகும். நாடுகளுக்கிடையிலான யுத்தத்தை விட நாடுகளுக்குள்ளேயே மக்கள் யுத்தம் செய்து கொண்டிருக்கும் முன்னாள் யூகோஸ்லாவியா, சோமாலியா போன்ற நாடுகளில் மானிட பாதுகாப்பினை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் இன்னும் அதிகரித்த அளவில் தலையிட வேண்டிய ஒரு பங்கினையே இது குறிக்கிறது.

2. அபிவிருத்தியினைச் சுற்றி மக்களை ஒன்று திரட்டாமல், மக்களைச் சுற்றி அபிவிருத்தியை எடுத்து வருகின்ற ஒரு நிலைத்து நிற்கக்கூடிய மானிட அபிவிருத்தியை எடுத்துவரும் உபாயம்.

3. சந்தை வினைத்திறமையை சமூக இணக்கத்துடன் ஒன்றிணைப்பதற்காக, அரசுக்கும், சந்தைகளுக்கும் இடையே புதிய கூட்டினை உருவாக்குதல்.

4. தேசிய ரீதியிலானதும் உலகளாவிய ரீதியிலானதுமான ஆட்சி முறைகளின் புதிய வடிவங்கள் இருத்தல். நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையற்ற தேசிய அரசுகள், ஒரு புறம், சந்தைகளின் உலகமயமாக்கலை சமாளிக்க முடியாதிருப்பதுடன், மறுபுறத்தில், மக்களின் பெருகிவரும் அபிலாஷைகளை நிறைவு செய்ய முடியாதவையாக உள்ளன. இன்றைய தேவை அதிகரித்த அதிகாரப் பரவலாக்கம், அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகரித்த ஈடுபாடு, வறியோரை மேலும் பலப்படுத்துதல் என்பனவாகும்.

5. அரசாங்கத்தின் விருப்புக்களைவிட, மக்களின் தேவைகளிற்கு வெளிநாட்டு உதவிகளை நேரடியாக வழங்குவதை குறிக்கோளாகக் கொண்ட சர்வதேச ஒத்துழைப்பின் புதிய வடிவங்கள்.

மிக முக்கியமாக "பங்கேற்பு" என்ற விடயம் மானிட அபிவிருத்திக்கான பிரதான திறவுகோலாக இருந்து வருகின்றது என்பதை இந்த அறிக்கை வலியுறுத்துகின்றது.

## பொருளாதாரப் பங்களிப்பு

மக்கள் தமது நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும், அவற்றின் பயன்களை நியாயமான ரீதியில் அறுவடை செய்வதற்கும் இடமளிக்கின்ற "மக்கள் நலன் பேணும்" சந்தைகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை இந்த அறிக்கை விடுக்கின்றது. தொழில் வாய்ப்பே பொருளாதாரப் பங்கேற்புக்கான ஆரம்பப் படியாகும். உலகெங்கிலும் பொருளாதாரங்கள் வளர்ச்சி அடைகின்றன; ஆனால், அந்த வேகத்துக்கேற்ப தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்காது, ஒரு "தொழில் வாய்ப்பற்ற வளர்ச்சியினை" ஏற்படுத்துகின்றதென இந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது. உதாரணமாக, 1960இல் இருந்து 1987 வரை பிரான்ஸ், ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பொருளாதாரங்கள் இருமடங்கிலும் அதிகமாக அதிகரித்த போதிலும், அவற்றின் தொழில்வாய்ப்பு வீதங்கள் வீழ்ச்சி அடைந்திருந்தன. இத்தகைய அசாதாரண நிலைமை வளர்முக நாடுகளில் மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. 1960-1987ற்கிடையிலான காலப் பகுதியில் வளர்முக நாடுகளின் உற்பத்தி

வெளியீட்டின் அதிகரிப்பில் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவான தொகை அதிகரித்த ஊழியத்தில் இருந்தும், மூன்றில் இரண்டிற்கும் அதிகமான பகுதி மூலதன முதலீட்டில் இருந்தும் கிடைத்தது. அதேவேளையில், வளர்முக நாடுகளில் ஊழியர்படை 40 கோடிக்கும் அதிகமான தொகையால் அதிகரித்து, ஒரு வேலையற்ற பட்டாளத்தை உருவாக்கியது. குறிப்பாக சில கிழக்காசிய நாடுகளில் காணிச் சீர்திருத்தம், மானிட மூலவளங்களில் முதலீடு ஆகியவை எவ்வாறு கணிசமானளவு தொழில் வாய்ப்புக்களின் வளர்ச்சிக்கு வழிகோலியது என்பதனையும் இந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

பொருளாதாரங்கள் சிறப்புற செயற்படுவதற்கும் பங்களிப்புக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதற்குமான ஒரு வழி, அரச ஒழுங்கு விதிகளைத் தளர்த்தி, தனியார் ஆக்கத் திறன்களை கட்டவிழ்த்து, செயல்திறனற்ற பொது நிறுவனங்களை விற்றுவிடுவதாகும். இச்சீர்திருத்தங்களை வரவேற்கின்ற அதே வேளையில், துஷ்பிரயோகங்களைத் தவிர்க்கும் முகமாக அவை மிகவும் அவதானமாக இயற்றப்பட வேண்டும் என இவ்வறிக்கை தெரிவிக்கிறது. ஊழலைத் தடுப்பதற்கும் தனியுரிமைக்கெதிரான நடைமுறைகளை எடுப்பதற்கும் விடயங்களை முழு அளவில் வெளிப்படுத்த வேண்டிய தேவையை "தனியார்மயமாக்கலின் ஏழு தவறுகள்" என்ற ஒரு பகுதி முன்வைக்கின்றது. இது பொருளாதார அதிகாரம் மேட்டுக்குடியின் ஒரு பிரிவினரிடமிருந்து பிறிதொரு பிரிவினரைச் சென்றடைவதனைத் தடுக்கும்.

## அரசியல் பங்கேற்பு

• அதிகாரத்தில் பங்கேற்பதற்கு அரசாங்கத்தின் ஆசனத்துக்கருகே மக்களால் வரமுடியாவிடின், அதிகாரப் பரவலாக்கம் மூலமாக மக்களண்டைக்கு அரசாங்கம் செல்ல முடியும், செல்லவும் வேண்டும் என இந்த அறிக்கை வலியுறுத்துகின்றது. பன்முகப்படுத்தலை அளவீடு செய்வதற்கான சில வழிவகைகளிலொன்று, "அரசாங்கத்தின் பணம் எங்கு செலவிடப்பட்டுள்ளது" என்பது பற்றி ஆராய்ந்து அறிவதாகும். அந்த அடிப்படையில் நோக்கும்பொழுது, இன்னும் வெகுதூரம் கடக்க வேண்டியுள்ளது. வளர்முக நாடுகளின் மத்திய அரசுகள் மொத்தத் தேசிய செலவினத்தில் பத்து சதவீதத்திற்கும் குறைவான தொகையை உள்ளூராட்சியிலும், ஆறு சத வீதத்திற்கும் குறைவான தொகையை மொத்தச் சமூகச் செலவினத்திலும் சராசரியாக செலவிடுகின்றன என இந்த அறிக்கை தெரிவிக்கின்றது. ஒப்பீட்டு ரீதியில் பார்க்கையில், ஆய்வுக்கு எடுக்கப்பட்ட 15 கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளில் 40 சதவீதமான தொகை உள்ளூராட்சிக்கும், 25 சதவீதம் சமூகச் செலவினத்துக்கும் செலவிடப்படுகிறது.

மத்திய மயப்படுத்தப்பட்ட அரசாங்க வடிவமைப்புகளை மாற்றுவதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. சிலி, இந்தோனேஷியா, மொராக்கோ, சிம்பாப்வே ஆகிய நாடுகள் உள்ளூராட்சியில் தன்னாட்சி மட்டங்களை ஏற்படுத்துவதன் மூலம் அதிகாரப் பன்முகப்படுத்தலில் முன்னணியில் நிற்கின்றபொழுதிலும், சார்பு ரீதியில் மிகவும் சொற்ப அதிகாரத்தினையே அவை பகிர்ந்தளித்துள்ளன. "உள்ளூராட்சி சிறு அளவு மூலவளங்களையே தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. தீர்மானம் இயற்றும் அதிகாரங்கள் உள்ளூர் மட்டத்தில் மிகவும் குறைவானவையாகும்; பல உள்ளூர் நியமனங்கள் மேலிடத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்றது" என இந்த அறிக்கை தெரிவிக்கின்றது. எனினும், பன்முகப்படுத்தலானது, அரசாங்கத்தை மக்களின் காலடிக்கு கொண்டு செல்லவல்லது என்பதனையும், அது அவர்களின் வாழ்க்கையில் மேம்பாட்டினை ஏற்படுத்த முடியும் என்பதனையும் இந்நாடுகள் எடுத்துக் காட்டுகின்றன. சிலி 1980களில் அடிப்படைக் கல்வி, முதனிலை சுகாதார சேவை என்பவற்றிற்கான முழுப் பொறுப்பினையும், உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு வழங்கியது. இதன் விளைவாக, சமூக சேமநலச் செலவினத்தில் 30 சதவீதத்தினை உள்ளூராட்சி அமைப்புக்கள் செலவிட்டன.

## குழுப்பங்கேற்பு

வரைவிலக்கணத்தின் படி, மக்கள் தங்களை ஒன்று திரட்டிக் கொள்ளும் போது, அவர்களின் பங்கேற்பு மட்டம் அதிகரிப்பதுடன், தங்கள் சொந்த வாழ்க்கையிலும் அவர்களின் செல்வாக்கு அதிகரிக்கின்றது. வளர்முக நாடுகளிடையே ஜனநாயகத்தை நோக்கிய நகர்வு, பங்கேற்பு இயக்கங்கள் உருவாகுவதற்கும், அரசசார்பற்ற நிறுவனங்கள் பல்கிப் பெருகுவதற்கும் வழிகோலியது. இன்று அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் 25 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கு பணியாற்றி வருகின்றன என்றும், 1980களின் ஆரம்பத்தில் இத்தொகை 10 கோடியாக இருந்ததென்றும் இவ்வறிக்கை தெரிவிக்கின்றது. அரசசார்பற்ற தொண்டு ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளின் விரிவாக்கத்துக்கு நன்கொடை வழங்குனர்கள் ஆதரவளித்து வருகின்றனர். உத்தியோகபூர்வ வழிகளில் வழங்கப்படும் நன்கொடைகளின் செயல்திறனில் அதிருப்தியடைந்த கொடை வழங்குனர்கள், தமது பணத்தினை இந்தத் தொண்டு நிறுவனங்களுக்கு ஊடாக வழங்குகின்றனர். கடந்த 20 வருடங்களில், வடக்கிலுள்ள (இவற்றில் அநேகமானவை அரசாங்க மூலங்களில் இருந்து வருபவை) அரசசார்பற்ற தொண்டு ஸ்தாபனங்களினால் வளர்முக நாடுகளிற்கு வழங்கப்பட்ட நன்கொடைகள் வருடாந்தம் ஒரு 100 கோடி அமெரிக்க டொலர்களில் இருந்து 500 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்திருக்கிறது.


அரசசார்பற்ற தொண்டு ஸ்தாபனங்கள் பல்வேறு பங்களிப்புக்களை வழங்கி வருகின்றன. அதிலொன்று, ஜனநாயகத்தினை ஊக்குவிப்பதாகும்; போலந்தின் சொலிடாரிட்டி, சாம்பியாவின் வர்த்தகச் சங்கங்களின் காங்கிரஸ் போன்ற தொழிற்சங்கங்கள் ஒருகட்சி ஆட்சிகளை எதிர்ப்பதிலும், பலகட்சி தேர்தல்களை ஆதரிப்பதிலும் மிக முக்கிய பங்கினை வகித்தன. இந்த இரு சந்தர்ப்பங்களிலும், சங்கத்தின் தலைவர்கள், அந்தந்த நாட்டின் ஜனாதிபதிகளாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

அரசாங்கம் சென்றடையாத வறிய மக்கள் பிரிவினரை, அரசசார்பற்ற நிறுவனங்கள் சென்றடையக் கூடியதாக இருக்கிறது. சிம்பாப்வேயில் கமக்காரர்கள், "சில்வெய்ரா ஹவுஸ்" என்ற தொண்டு ஸ்தாபனத்தின் ஆதரவோடு பிழைப்பூதியப் பயிர்ச் செய்கையிலிருந்து விடுபட்டு, பணப் பொருளாதாரத்திற்குச் செல்லக்கூடிய வகையில் பயிர் விளைச்சலை பத்து மடங்காக பெருக்கிக் கொண்டனர். பங்களாதேஷிலுள்ள 23,000 கிராமங்களில் ஏறக்குறைய 10 இலட்சம் மக்களுக்கு கடன்கள் வழங்கப்படுவதன் மூலம், "கிராமீன் வங்கி" காணியற்ற வறிய மக்களுக்கு வியாபாரம், தொழில்




33776.

வேலையில்லாத் திண்டாட்டத்துடன் கூடிய வளர்ச்சி : உலகெங்கிலும் தொழில் வாய்ப்புக்களின் பெருக்கத்திலும் பார்க்கக் கூடிய வேகத்தில் பொருளாதாரங்கள் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன. அதிக எண்ணிக்கையில் தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கபடாத நிலையில், 2000 ஆவது ஆண்டளவில் இந்த இடைவெளி மேலும் விரிவடையும் என்று ஐ. நா. அ. திட்டத்தின் மானிட அபிவிருத்தி அறிக்கை 1993 தெரிவிக்கிறது.




மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதங்களை மேலேயுள்ள கோடும் தொழில் வாய்ப்புக்களின் வளர்ச்சி வீதங்களை கீழேயுள்ள கோடும் காட்டுகிறது. 1975ல் இவையிரண்டும் 100 சவீதமாக இருந்தன. பிராந்திய வளர்ச்சி இடைவெளிகள் கீழே தரப்பட்டுள்ளன.

பிராந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தொழில்வாய்ப்புக்களின் வளர்ச்சி என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரி




தொழிலற்ற நிலையுடன் கூடிய வளர்ச்சி: 1975–2000
மொத்த உள்நாட்டு உற்பத்தியும் வேலை வாய்ப்பும் 1975 – 2000
(1975 = 100)



வாய்ப்புகள் ஆகியவற்றை உருவாக்குவதுடன் 95 சதவீத கடன் வகுல் வீதத்தினையும் சாதித்துக் கொண்டுள்ளது. புறமொதுக்கப்பட்ட சமூகக் குழுக்களை வலுவூட்டுவதற்கான ஒத்துழைப்பையும்கூட அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் வழங்க முடியும். ஈகுவாடார் நாட்டில், சுதேச மக்கள் காணியுறுதிகளைப் பெற்றுக் கொள்வதில் அங்குள்ள இந்தியச் சம்மேளனங்கள் உதவியளித்து வருகின்றன. இதன்பயனாக, அவர்களுக்கு பொருள்ரீதியான நன்மைகளும், சமூகத்தில் ஒரு அதிகரித்த அந்தஸ்து நிலையும் கிடைத்தன.

அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் இன்னமும் சிறிய அளவிலேயே செயற்படுகின்றன என்ற உண்மையை, அவற்றின் வளர்ச்சி, மற்றும் தாக்கம் என்பன மறைக்க முடியும் என இவ் அறிக்கை தெரிவிக்கிறது. வட பிராந்தியத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களூடாக, தென் பிராந்தியத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட 720 கோடி அமெரிக்க டொலர் பெறுமதி வாய்ந்த நன்கொடைகளின் அளவு உத்தியோகபூர்வ உதவிப்பணத்தில் 19சத வீதமாகவும், வளர்முக நாடுகளுக்கு வழங்கப்படும் மொத்த மூலவளப் பாய்ச்சல்களில் 2.5 சதவீதமாகவும் இருந்தது. "இக்கூற்று அரச சார்பற்ற நிறுவனங்கள் அளித்து" வரும் பங்கினைப் பற்றிய குற்றச்சாட்டல்ல; ஆனால், அதன் தத்ரூபமான உண்மை நிலைமையினை மீள நினைவுபடுத்துவதாக உள்ளது. அரசாங்கங்கள் அளித்து வருகின்ற பங்கினை அரச சார்பற்ற நிறுவனங்கள் குறைநிரப்புச் செய்யலாம்; ஆனால் அவைகள் அரசாங்கத்தின் பங்கினை முழுமையாக பிரதியீடு செய்யமுடியாது" என இவ் அறிக்கையின் பிரதம ஆசிரியரான மஹ்புப் அல்ஹக் கூறுகிறார்.

மானிட அபிவிருத்தி அறிக்கை 1990ல் வெளியிடப்பட்டதிலிருந்து, ஒரு செய்தியை மாத்திரம் தொடர்ச்சியாகப் பேணி வந்துள்ளது: "அபிவிருத்தியானது மக்களை நோக்கியதாக இருத்தல் வேண்டும். அபிவிருத்தியின் முன்னேற்றம் பற்றிய ஒரு தீர்க்கமான குறிகாட்டி யாதெனில், மக்களுக்கு மிகவும் விசாலமான விருப்பத் தேர்வுகள் இருக்கின்றன என்பதாகும்". இராணுவச் செலவினம் கணிசமானளவு குறைக்கப்பட வேண்டும்: சமூகச் செலவினம் கூட்டப்பட வேண்டும். வெளிநாட்டு உதவி சரியான இலக்கில் பாய வேண்டும்: வறிய நாடுகளுக்கு மிகவும் சாதகமான வர்த்தக நியதிகள் அமைய வேண்டும். உயர்மட்ட ரீதியிலான ஜனநாயகமும், பங்களிப்பும் இருக்க வேண்டும் என இவ் அறிக்கைகளில் விவாதிக்கப்பட்டுள்ளது.

மானிட அபிவிருத்திச் சுட்டெண் அடிப்படையில் நாடுகள் வரிசைப்படுத்தப்பட்டதன் விளைவாகவும், இந்த அறிக்கையின் வெளிப்படையான விமர்சனத்தின் விளைவாகவும் இதன் தாக்கம் மிகவும் கடுமையாக உணரப்பட்டது. பாரிசில் 1992 நடைபெற்ற ஏழு நாடுகளினது குழுக் கூட்டமானது, "இராணுவச் செலவினம் குறைக்கப்பட வேண்டும்" என்பது பற்றிய இவ் அறிக்கையினது முக்கியத்துவத்தினை பாராட்டிய அதேவேளையில், ஜகார்த்தாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தில், அவர்கள் இவ் அறிக்கையினை "வரவேற்றதோடு", அரசாங்கங்கள், "மானிட அபிவிருத்திக்கான சர்வதேச ஒத்துழைப்பினை உடனடியாக விருத்தி செய்ய வேண்டியதற்கான" அழைப்பினையும் இது விடுத்தது. இத்தாலி, பிரான்ஸ், சுவீடன், கனடா, ஐரோப்பா ஆகிய நாடுகளின் பாராளுமன்றங்களில் "மானிட அபிவிருத்தி" என்ற அம்சம் விவாதத்திற்குரிய விடயமாக அமைந்திருந்தது.

ஐ.நா.அ. திட்டத்தின் மூலம் நிதிப்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களிலும், வளர்முக நாடுகளினால் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய கடப்பாடுகளிலும், அவை செயற்பாட்டுக்கு மாற்றப்பட்ட வழிவகையின் அடிப்படையிலேயே இந்த அறிக்கையின் முக்கியத்துவம் தங்கியிருந்தது. பல நாடுகளில் அவற்றின் ஆரம்ப கட்டம் தரவு சேகரித்தல் ஆகும். பொலிவியா தனது நாட்டு மக்களினது மானிட அபிவிருத்தி அந்தஸ்தினை கண்டு கொள்வதற்காக ஒரு தொகை மதிப்பீட்டினை நடாத்துகிறது. இந்தியா, இந்த அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு, வறுமை ஒழிப்புக்கான தனது நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில், மாநிலங்கள் மட்டத்திலும், மாவட்டங்கள் மட்டத்திலும், நாடு தழுவிய ஒரு தரவு சேகரிப்பு செயல் முறையினை ஆரம்பித்துள்ளது.

1991ன் பிற்பகுதியில் மத்திய அமெரிக்காவின் ஆறு ஜனாதிபதிகள் ஒன்றுகூடி, தங்கள் நாடுகளின் மானிட அபிவிருத்திக்காக "எல்லா மூலவளங்களையும் ஒருங்கமைப்பதற்கான" கடப்பாட்டிற்கு கைச்சாத்திட்டதைத் தொடர்ந்து, அந்த முழுப் பிராந்தியமுமே மக்களை நோக்கியதான அபிவிருத்தி நோக்கி முன்னேறியது. இந்த ஆறு நாடுகளில் மூன்று நாடுகளின் தலைவர்கள், தமது தேசிய வரவு-செலவுத் திட்டத்திற்குள் வருடாந்தம் 50 கோடி அமெரிக்க டொலரினை சமூகத்துறை திட்டங்களுக்காக மீள ஒதுக்கீடு செய்வதற்கு வாக்குறுதி அளித்தனர். மானிட அபிவிருத்தி இலக்குகளை மீளாய்வு செய்வதற்கும், அதற்கான செலவுகளை ஈடுசெய்வதற்காகவும் ஐ.நா.அ. திட்டத்தின் உதவியை முதன்முதலில் நாடிய நாடுகள் பங்களாதேஷ், கொலம்பியா, கானா, பாகிஸ்தான் என்பவையாகும். உதாரணமாக, கானாவில், பேரண்டப் பொருளியற் திட்டமிடலில் இருந்து, மிகவும் சிக்கனமான காலப்பகுதியில் வறியமக்களை பாதுகாத்தல் வரையுள்ள விடயங்களில் ஒரு மாற்றத்துக்கான தேவையினை ஏற்றுக்கொள்கின்ற பாரியதொரு மானிட அபிவிருத்தி உபாயத்தினை இந்நாடு தயாரித்திருக்கிறது.

மானிட அபிவிருத்தி உபாயத்தினை அமுல்படுத்துவதற்காக 20க்கும் அதிகமான நாடுகள் ஏதாவது ஒரு வகையில் ஐ.நா.அ. திட்டத்தின் உதவியை நாடி இருக்கின்றன. இதன் விளைவாக, 1992–1996 காலப்பகுதிக்கென ஐ.நா.அ. திட்டத்தினால் நிதிப்படுத்தப்படவுள்ள 300 கோடி அமெரிக்க டொலரில், ஏறத்தாழ 120 கோடி அமெரிக்க டொலர் (அல்லது 37 சதவீதம்) வறுமை ஒழிப்பிற்கும், மக்களின் பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டங்களிற்கும் பயன்படுத்தப்படும். "மக்களைச் சுற்றி அபிவிருத்தி ஏற்படுத்தப்பட வேண்டுமேயல்லாது அபிவிருத்தியைச் சுற்றி மக்களை எடுத்து வரக்கூடாது. அபிவிருத்திக்கான ஒத்துழைப்பானது, நாடுகள் – மாநிலங்களை நோக்காகக் கொள்ளாது, நேரடியாக மக்களை நோக்கியதாக இருக்க வேண்டும். இங்கு அபிவிருத்தியாளர்கள் எதிர்நோக்கும் சவால், நடைமுறைச் சாத்தியமான தெரிவுகளை இனங்கண்டு கொள்வதாகும்" என ஐ.நா.அ.தி. நிர்வாகி கூறுகிறார்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# ஐக்கிய அமெரிக்கா : ஒரு நாடா? அல்லது மூன்று நாடுகளா?

ஐ. நா. அ. திட்டத்தின் மானிட அபிவிருத்தி சுட்டெண்ணின் அடிப்படையில் வெள்ளை இன அமெரிக்கா முதலாவது இடத்திலும், கறுப்பின அமெரிக்கா 31வது இடத்திலும் ஹிஸ்பானிக் அமெரிக்கா 35வது இடத்திலும் உள்ளன.

உலகம் பூராவும் 10 சத வீதத்திற்கும் குறைவான மக்களே, தங்கள் வாழ்க்கை நிலைமைகளை மாற்றி அமைக்கின்ற நிறுவனங்களில் முழுமையாக பங்களிப்புச் செய்கின்றனர். வறியோர், பெண்கள், சிறுபான்மை இனத்தவர்கள், கிராமவாசிகள் ஆகியோர் அநேகமாக ஒதுக்கப்பட்டுள்ளார்கள் என ஐ.நா.அ. திட்ட நூல் தெரிவிக்கின்றது.

ஐக்கிய அமெரிக்காவில் வாழும் ஆபிரிக்க – அமெரிக்க சமுதாயத்தினர் அமெரிக்க சமூகத்தினதும் அதன் பொருளாதாரத்தினதும் அனுகூலங்களில் மிகவும் சிறுபங்கொன்றையே பெற்று வருவதால், அவர்கள், மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணில் ஐக்கிய அமெரிக்காவின் வெள்ளை இனத்தின் ஸ்தானத்திலிருந்து 30 ஸ்தானங்கள் கீழே இருந்து வருகின்றனர். ஐக்கிய அமெரிக்காவின் ஹிஸ்பானிக் சமூகம் வெள்ளை இனத்தின் முதலாவது ஸ்தானத்தில் இடத்தில் இருந்து 34 இடங்கள் கீழே உள்ளது.

ஐ.நா.அ. திட்டத்திற்காக பொருளியலாளர்களைக் கொண்ட ஒரு சுயாதீனக் குழுவினால் தயாரிக்கப்பட்டு, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அச்சகத்தினால் வெளியிடப்பட்ட "மானிட அபிவிருத்தி அறிக்கை – 1993" என்ற பிரசுரத்தில் மானிட அபிவிருத்திச் சுட்டெண் வெளியிடப்பட்டுள்ளது. ஆயுள் எல்லை, கல்வி மட்டம், அடிப்படைக் கொள்வனவுச் சக்தி என்பவற்றை ஒன்றிணைத்து, அதனை அளவுகோலாகப் பயன்படுத்தி, மானிட அபிவிருத்திச் சுட்டெண் நாடுகளை வரிசைப்படுத்துகிறது. ஐக்கிய அமெரிக்காவினை ஒரு முழுநாடாகக் கருதுமிடத்து, அது ஜப்பான், கனடா, நோர்வே, சுவிட்சர்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகளுக்குக் கீழே 6வது ஸ்தானத்தில் நிற்கிறது.

"அநேகமாக ஒவ்வொரு நாட்டிலும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இனக் குழுக்களின் மானிட அபிவிருத்தி மட்டம் அந்நாட்டின் தேசிய சராசரியிலும் பார்க்க குறைந்த மட்டத்துக்கு வீழ்ச்சி கண்டுள்ளது" என இந்த அறிக்கை தெரிவிக்கிறது. "மிகவும் தெளிவாகவும் சிறந்த முறையிலும் ஆவணப்படுத்தப்பட்டுள்ள விடயங்களில் ஒன்று, ஐக்கிய அமெரிக்காவின் கறுப்பு இன மக்களைப் பற்றியதாகும்". வருடாந்த வெளியீட்டுத் தொடரில் நாலாவதாக இடம்பெற்றுள்ள இந்த வருட அறிக்கை, தனிப்பட்டவர்களும் குழுக்களும் சமூகத்திலும், அரசாங்கத்திலும், பொருளாதாரத்திலும் பங்களிப்புச் செய்த விதம் பற்றி ஆராய்கிறது. பத்துசத வீதத்திற்கும் குறைவான மக்களே, தமது வாழ்க்கை நிலைமைகளை சீர்படுத்துகின்ற நிறுவனங்களில் முழுதளவாக பங்களிப்புச் செய்கின்றனர் என்ற முடிவினை இந்த அறிக்கை தருகின்றது.

ஐக்கிய அமெரிக்காவில் வாழும் ஆபிரிக்க – அமெரிக்க இனத்தைப் பொறுத்தவரையில், "அவர்களின் துரதிர்ஷ்டம் பிறப்பிலேயே ஆரம்பிக்கிறது" என இந்த அறிக்கை கூறுகிறது. அமெரிக்காவின் வெள்ளை இன மக்களின் சிசு மரண விகிதம் ஒவ்வொரு ஆயிரம் உயிர்பிறப்புகளிற்கும் 8 ஆக உள்ளது. ஆனால், கறுப்பு இன மக்களின் இவ்விகிதம் 19ஆக (இரு மடங்கிலும் அதிகமாக) காணப்படுகிறது. வாழ்க்கையின் பிற்கால பகுதியில் சேகரிக்கப்பட்ட சுகாதார புள்ளி விபரங்களில் உள்ளவாறு, கறுப்பு இன மக்களின் மேற்கூறிய விகிதம் குறைந்து வருவதைக் காண முடிகிறது. கறுப்புஇன மக்களின் கல்வி மட்டங்கள் கூட வெள்ளை இன மக்களின் மட்டங்களை விடத் தாழ்வாக உள்ளன. அதேவேளையில், வறுமை மட்டங்கள் மிகவும் உயர்வாகக் காணப்படுகின்றன. 1990இல் வெள்ளை இன மக்களின் தலைக்குரிய வருமானம் (மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி) 22,372 அமெரிக்க டொலர்களாக இருந்தது; ஆனால், கறுப்பு இன மக்களைப் பொறுத்தவரையில் இது 13,378 அமெரிக்க டொலர்களாக (அல்லது வெள்ளை இனமக்களின் வருமானத்தின் 60 சதவீதமாக) இருந்தது.

ஐக்கிய அமெரிக்க ஏனைய 5 நாடுகளிலும் பார்க்க உயர்வான சராசரி வருமானத்தினைக் கொண்டிருந்த போதிலும், மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணில் அது ஆறாவது ஸ்தானத்தில் இருப்பதற்கு முக்கிய காரணம் யாதெனில், கறுப்பு இன மக்களிடையேயும், ஹிஸ்பானிக் இன மக்களிடையேயும் காணப்பட்ட தாழ்வான மானிட அபிவிருத்தி மட்டங்கள் ஆகும். தனியே வெள்ளை இனமக்கள் மட்டுமே கவனத்தில் எடுக்கப்பட்டால், அவர்கள் முதலாவது ஸ்தானத்தைப் பெறுவார்கள். ஆபிரிக்க– அமெரிக்கர்கள் 31வது இடத்தையும், ஹிஸ்பானிக் இன மக்கள் (டிரினிடாட் – டுபாகோ, பஹாமாஸ், தென் கொரியா, எஸ்டோனியா ஆகிய நாடுகளுக்கு கீழேயும், சிலி, ரஷ்யா, மால்டா ஆகிய நாடுகளுக்கு மேலேயும்) 35வது ஸ்தானத்தைப் பெறுவார்கள். ஐக்கிய அமெரிக்காவில் வாழும் ஹிஸ்பானியர்களின் ஆயுள் எல்லை, கறுப்பு இனத்தவர்களின் ஆயுள் எல்லையைவிட உயர்வாக உள்ளது. அதாவது, ஹிஸ்பானியர்களின் ஆயுள் எல்லை 76 வருடங்களாகவும், கறுப்பு இனத்தவர்களின் ஆயுள் எல்லை 71 வருடங்களாகவும் இருக்கிறது. ஆனால், வருமானம், கல்வி என்பவற்றைப் பொறுத்தவரையில், ஹிஸ்பானியர்கள் கறுப்பு இனத்தவர்களைவிட பின்தங்கிய நிலையிலுள்ளனர். பாடசாலையில் கல்வி பயிலும் காலம் ஹிஸ்பானியர்களுக்கு 8.5 வருடங்களாக இருக்கையில், ஆபிரிக்க–அமெரிக்கர்களுக்கு சராசரியாக 10.6 வருடங்களாக காணப்படுகிறது.

"ஐக்கிய அமெரிக்காவின் குடித்தொகை இனரீதியிலும், சாதியடிப்படையிலும் பிரிக்கப்பட்டிருப்பதனால் இந்த விடயம் தெளிவாக முன்வைக்கப்படுகிறது. ஆனால், அத்தகைய தொகை மதிப்பீட்டு புள்ளி விபரங்களைப் பேணி வைத்திராத ஏனைய நாடுகளில் இந்த அம்சம் மேலும் தீவிரமாக வெளிப்படுத்தப்படலாம்" என மஹ்பூப் அல்–ஹக் கூறுகிறார். "உலகிலுள்ள பல நாடுகளில் சில குறிப்பிட்ட குழுக்கள், வறுமையானவர்களாகவோ, பெண்களாகவோ அல்லது சிறுபான்மை இன மக்களாகவோ அல்லது கிராமவாசிகளைக் கொண்ட சுதேசக் குழுக்களாகவோ இருந்தாலும், அவர்கள் எதுவித பங்களிப்பும் செய்வதில்லை; அவர்களிடம் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகை இல்லை; பொருளாதாரத்தின் அனுகூலங்களில் அவர்

# மகளிர் - மௌனப் பெரும்பான்மை

உலகக் குடித்தொகையில் பெரும்பான்மை யாகவுள்ள மகளிர் அபிவிருத்தி வாய்ப்பு களில் மிகவும் சிறிதளவு பங்கினையே பெறுகின்றனர். இவர்கள் அநேகமாக, கல்வி, சிறப்பான தொழில்கள், அரசியல் முறைமைகள், போதிய சுகாதாரப் பராம ரிப்பு என்பவற்றிலிருந்து புறமொதுக்கப் பட்டவர்களாக இருந்து வருகின்றனர்.

எழுத்தறிவு - எழுத்தறிவினைப் பெற்றுக் கொள்வதில் ஆண்களைவிட பெண்கள் பின்தங்கிய நிலையில் உள்ளார்கள். தெற்காசியாவில், பெண்களின் எழுத்தறிவு வீதங்கள் ஆண்களின் வீதங்களில் 50 சத வீதமாக இருக்கிறது. பல நாடுகளில் இந் நிலைமை இன்னும் மோசமாக உள்ளது: நேபாளத்தில் இது 35 ஆகவும் சியாரா லியோனில் 37 ஆகவும், சூடானில் 27 ஆகவும், ஆப்கானிஸ்தானில், 32 ஆகவும் இருக்கிறது. உலகில் வாழும் எழுத்தறிவற்ற மக்கள் தொகையில் பெண்கள் மூன்றி லிரண்டு பங்கினை வகிக்கின்றனர்.

உயர் கல்வி - வளர்முக நாடுகளில் வாழும் பெண்கள், உயர்கல்வியில் ஆண்களைவிட பின்தங்கிய நிலையில் உள்ளனர். ஆபிரிக்கா வின் உப-சஹாரா பகுதியில் மூன்றாம் நிலைக்கல்விக்கு அனுமதி பெறுகின்ற பெண்களின் தொகை, ஆண்களின் தொகை யினை விட மூன்றிலொன்றாக, மட்டுமே உள்ளது. கைத்தொழில் நாடுகளில் கூட விஞ்ஞானத் தொழில்நுட்பக் கற்கைகளில் மிகவும் குறைந்தளவு வீதத்தினையே பெண்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்: இந்தக் கற்கைகளில் ஈடுபடுகின்ற மூன்றா வது நிலை மாணவர்களிடையே பெண்கள், ஆண்களுக்கிடையிலான விகிதம் ஸ்பெயினில் 28 சதவீதமாகவும், அவுஸ்திரியாவில் 25 சதவீதமாகவும், கனடாவில் 29 சதவீத மாகவும் இருக்கின்றது.

தொழில் வாய்ப்பு - வளர்முக நாடுகளில் பெண்களுக்கு மிகவும் குறைந்தளவு தொழில் வாய்ப்புக்களே கிடைக்கின்றன. பெண்களின் தொழில் பங்களிப்பு வீதம், ஆண்களினதை விட சராசரியாக 50 சதவீதமாக உள்ளது. (தெற்காசியாவில் இது 29% ஆகவும், அரபு நாடுகளில் 16% ஆகவும் மட்டும் காணப்படு கிறது). அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைத்தாலும் கூட, மிகவும் குறைந்த ஊதி யமே கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. கொரியக் குடியரசில் பெண்களின் வேத னங்கள் ஆண்களின் வேதனங்களைவிட 47% ஆக மட்டுமே இருக்கிறது. கைத்தொழில் நாடுகளில், கூலியில் பாரபட்சம் காட்டப் படுவதும் கூட ஒரு விசேட பண்பாகக் காணப்படுகிறது. ஜப்பானில் பெண்கள், ஆண்களின் வேதனத்தில் 51 சதவீதத்தினை மட்டுமே பெற்றுக் கொள்கின்றனர்.

வேதனம் பெறும் தொழில்களில் ஈடுபட்டிராத பெண்கள், வெறுமனே சோம்பிக் கிடக்கவில்லை. உண்மையிலேயே அவர்கள் ஆண்களைவிட நாளொன்றுக்கு அதிக நேரம் வேலை செய்பவர்களாக இருக்கின்றனர். இங்குள்ள பிரச்சினை யாதெனில், நாளாந்த வீட்டுப் பணிகளிலும், பிள்ளைகளையும், வயோதிபரையும், பராம ரிப்பதிலும் இவர்கள் செய்கின்ற வேலை யானது, தேசிய வருமானக் கணக்குகளில், அது பெற்றுக் கொள்ள வேண்டிய அள விற்கு அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ள வில்லை என்பதாகும்.

சுய வேலைவாய்ப்பு - பெண்களைப் பொறுத்தவரையில், சுய வேலை வாய்ப்புக் கான வாய்ப்புக்கள் பல்வேறு வழிகளில் மட்டுப்படுத்தப்படலாம். ஒரு சில நாடு களில், பெண்கள் உடைமைகளைச் சொந்த மாக வைத்திருப்பதற்கோ அல்லது வங்கிக் கடன்களுக்கு பிணையாக நிற்பதற்கோ அல்லது வாகனம் செலுத்துவதற்கோ இன்னமும் அனுமதிக்கப்படவில்லை.

அரசியல் - ஒரு சில நாடுகளில் பெண்க ளுக்கு இன்னமும் வாக்குரிமை வழங்கப் படவில்லை. அநேகமாக, அனைத்து நாடு களிலும் பெண்கள், அரசாங்கத்தில் குறைந் தளவு பிரதிநிதித்துவத்தினையே பெற்றுள் ளனர். 1980ல் உலகின் பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் பெண்கள் கிட்டத்தட்ட 10 சதவீதத்தினராக உள்ளனர். தேசிய அமைச்சரவைகளில் பெண்கள் 4%ற்கும், குறைவாக பிரதிநிதித்துவம் செய் தனர். 1993ல், ஆறு நாடுகளில் மாத்திரம் பெண்கள் அந்நாட்டு அரசாங்கங்களின் தலைவர்களாக இருந்தனர்.

சுகாதாரம் - ஆண்களைவிட பெண்கள் சராசரியாக நீண்ட காலம் வாழ்வதாக தெரிகிறது. ஆனால் ஒருசில ஆசிய, வட ஆபிரிக்க நாடுகளில், பெண்களின் ஆரோக்கிய நிலை அல்லது போசாக்கில் காட்டப்பட்டு வரும் அசிரத்தை மற்றும் பாரபட்சங்கள் காரணமாக அவர்களது ஆயுள் எல்லை குறைவானதாக இருந்து வருகின்றது. உலகளாவிய இறப்பு மாதிரி களின் அடிப்படையில் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்க வேண்டியவர்களின் சனத் தொகைகளை ஒப்பிடுமிடத்து, 10 கோடி ஆசியப் பெண்கள் "காணாமல் போய் விட்டதாகத்" தோன்றுகிறது. வறிய நாடு களில் பெண்கள் எதிர்கொள்ளும் சுகாதார பேராபத்துக்களில் ஒன்று மகப்பேறாகும். வளர்முக நாடுகளில் பிரசவ இறப்பு வீதங்கள் கைத்தொழில் நாடுகளை விட 15 மடங்குகளுக்கும் அதிகமானதாகக் காணப் படுகிறது.

தேசிய புள்ளி விபரங்கள் - பெண்கள் அநேகமாக புள்ளிவிபரவியலின் கண் ணுக்குப் புலப்படுவதில்லை. கூலி கொடுக் கப்படாத வீட்டுப் பணிகளை, தேசிய வருமானக் கணக்குகளில் ஒரு உற்பத்தித் திறன் கொண்ட வெளியீடாக சேர்த்துக் கொண்டால், உலகளாவிய வெளியீடு 20 - 30% னால் அதிகரிக்கும்.

---

கள் பங்கு கொள்வதில்லை. இதன் கருத்து யாதெனில், மக்களை அடிப் படையாகக் கொண்ட அபிவிருத்தி யினை வலியுறுத்துகின்ற வறிய நாடு களுக்கும், செல்வந்த நாடுகளுக்கும் ஒரு புதிய அபிவிருத்தி மாதிரி தேவை யாக உள்ளது என்பதாகும்."

பிரதேசங்களுக்கும் அல்லது மக்களைக் கொண்ட குழுக்களுக்கும், ஏனையவற்றுக்கும் இடையிலான ஏற்றத் தாழ்வுகள் பற்றிய ஒரு அவதானிப் பினை பேணி வைத்திருந்த ஒருசில வளர்முக நாடுகளிடையே இந்தியா, மெக்சிக்கோ, துருக்கி ஆகிய நாடுகளும் அடங்குகின்றன. இந்தியாவில், உத்தர பிரதேச மாநிலத்திற்கான மானிட அபிவிருத்தி ஸ்தானம் அதன் தேசிய சராசரியை விட மூன்றிலொரு பங்கு குறைவானதாக காணப்படுகிறது. அதே வேளையில், கேரள மாநிலம் சராசரி யினைவிட 70% உயர்வானதாக முன்ன ணியில் நிற்கிறது. மெக்சிக்கோவில், ஒஆக்ஸ்க்கா மாநிலத்தின் மானில அபி விருத்திச் சுட்டெண் அதன் தேசிய சராசரிப் பெறுமானத்தினைவிட நான்கி லொரு பங்கு தாழ்வானதாகக் காணப் படுகிறது. துருக்கியில், கிராமிய, நகர குடிமக்களுக்கிடையிலும், ஆண்கள், பெண்களுக்கிடையிலும் பெரிய இடை வெளி காணப்படுகிறது. இங்கு நகரத்தி லுள்ள ஆண்கள் சராசரியினை விட 15 சதவீதம் மேலாகவும், கிராமியப் பெண்

கள் சராசரியினைவிட 12 சதவீதம் பின்தங்கியும் இருக்கின்றனர்.

மகளிரின் குறைந்தளவு பங்கேற்பு விகிதங்கள் விசேட கவனத்தினைப் பெற வேண்டிய ஒரு விடயமாகும். எதிர்காலத்தில் இது குறித்து சிறப்பு அக்கறை காட்டப்படும். பெண்கள் ஆண்களை விட பின்தங்கிய நிலைமையில் இருந்து வருவது வளர்முக நாடுகளில் மட்டும் காணப்படும் ஒரு நிலை அல்ல; முழுதளந்த மானிட அபிவிருத்தியில் முதலாவது ஸ்தானத்தை வகிக்கும் ஜப்பானில், ஆண்-பெண்ணுக்கிடையிலான ஏற்றத் தாழ்வுக்கு ஏற்ற வகையில் கட்டெண் சீர் செய்யப்படும் போது, அது 17வது ஸ்தானத்துக்கு வீழ்ச்சியுறுகிறது. கல்வியில் பெண்களின் மூன்றாம் நிலைக் கல்விக்கான அனுமதி வீதம் (பல்கலைக்கழக மட்டம்) ஆண்களின் சதவீதத்தில் மூன்றில் இரண்டு பங்களவாக மட்டுமே காணப்படுகிறது. பெண்களின் சராசரி வருமானங்கள், ஆண்களின் வருமானத்தின் 51 சதவீதமாக காணப்படுகிறது. ஜப்பானில் 7 சதவீதமான நிர்வாக முகாமைத்துவ தொழில்களையே பெண்கள் பெற்றுள்ளனர். அரசியலில் பெண்களின் பங்களிப்பு இன்னும் குறைவாகக் காணப்படுகிறது. ஜப்பானிய பெண்கள் 2 சதவீதமான பாராளுமன்ற ஆசனங்களை மட்டுமே வைத்திருக்கின்றனர். (கைத்தொழில் நாடுகளில் இப்பெறுமானம் 9 சதவீதமாக உள்ளது). எந்தவிதமான அமைச்சுப் பதவிகளையும் ஜப்பானியப் பெண்கள் வகிக்கவில்லையென 1993ம்ஆண்டின் அறிக்கை தெரிவிக்கிறது.

சமூகரீதியில் முழுஅளவில் புறமொதுக்கப்பட்ட பொருளாதார ரீதியில் நலிவுற்ற ஏனைய குழுக்களும் இருக்கின்றன. உண்மையில், உலகக் குடித்தொகையில், பெரும்பான்மையோர் அபிவிருத்தியில் முழுமையான பங்களிப்புச் செய்வதிலிருந்து இன்னமும் தவிர்க்கப்பட்டுள்ளனர் என இந்த அறிக்கை தெரிவிக்கிறது. உலக குடித்தொகையில் நான்கிலொரு பங்கினர் இன்னமும் முழுமையான வறுமை நிலையில் துன்புற்று வருகிறார்கள். வருமான மட்டத்தின் அதியுச்ச நிலையில் இருக்கும் 20 சதவீதத்தினர் கடும் வறுமை நிலையிலுள்ள 20 சதவீதத்தினர் பெற்றுவரும் வருமானத்திலும் பார்க்க 150 மடங்கு அதிக வருமானத்தைப் பெறுகின்றனர். சாதாரணமாக, வளர்முக நாடுகளில் மூன்றிலிரண்டு பங்காக உள்ள கிராமிய மக்கள் கல்விச் சேவைகள், சுகாதார சேவைகள் நீர் வசதிகள் ஆரோக்கிய சேவைகள் என்பவற்றில் நான்கிலொன்றுக்கும் குறைவான பங்கினையும் அரைவாசிக்கும் குறைவான வருமான வாய்ப்புக்களையுமே பெறுகின்றனர்.

“இவற்றையும் தவிர்த்து விடப்பட்டுள்ள ஏனைய குழுக்களையும் கவனத்தில் எடுப்பின், உலக குடித் தொகையில் 10 சதவீதத்திற்கும் குறைவான மக்களே அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார வாழ்க்கையில் முழுதளவாக பங்களிப்புச் செய்யக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளனர் போல் தோன்றுகின்றதென” இந்த அறிக்கை தெரிவிக்கிறது. “இத்தகைய பெரும்பான்மை மக்கள் உண்மையான பங்களிப்பினை எய்துவதற்கு ஒரு நீண்ட கால, இடையறாத போராட்டம் தேவையாகவுள்ளது” என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மானிட அபிவிருத்தி அறிக்கை 1993

## மக்களுக்கு உசிதமான சந்தைகளை நோக்கி .......

ஐ.நா.அ. திட்டத்தின் அறிக்கை “முடியும்” என கூறுகிறது. சந்தைகள் இருப்பது மக்களுக்கு பணி புரிவதற்காகவேயொழிய அதன் மறுதலையான நோக்கத்திற்காக அல்ல என இவ்வறிக்கை தெரிவிக்கிறது. சந்தைகள் “தனியார்மயமாக்கலின் ஏழு தவறுகளுக்கு” எதிராகவும் “தொழில் வாய்ப்பற்ற வளர்ச்சிக்கு” எதிராகவும் போராடுகின்றன. சமீப காலங்களில் இடம் பெற்ற மாற்றங்களில் மிகவும் வரவேற்கப்பட்ட மாற்றம், முன்னாள் சோஷலிஷ நாடுகளும், வளர்முக நாடுகளும் சந்தைப் பொருளாதாரங்களை நோக்கி நகர்ந்து சென்றமையாகும். இந்த சந்தைகளை நோக்கிய பயணத்தில் பொது நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படுதல், வங்கிகளும் ஏனைய முதலீட்டுச் சந்தைகளும் உருவாக்கப்படுதல் ஆகியன உள்ளடங்குகின்றன ஆனால், மக்களை பொருளாதாரங்களில் முழுஅளவில் பங்கெடுக்கச் செய்வதற்கோ அல்லது எதிர்காலத்திற்கு வேண்டிய நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியினை கட்டியெழுப்புதற்கோ இத்தகைய மாற்றங்கள் மட்டும் போதுமானவையாக இல்லை என ஒரு புதிய நூல் தெரிவிக்கின்றது.

“சந்தைகள் அவற்றுக்குள்ளேயே முற்றுப்பெற்றவை அல்ல; அவை மானிட அபிவிருத்திக்கான ஒரு வழி மட்டுமேயாகும்” என “மானிட அபிவிருத்தி அறிக்கை – 1993” தெரிவிக்கிறது. “மக்கள் சந்தைகளுக்கு சேவையாற்றுவதை விட சந்தைகள் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும்”. 1980களில் விடுக்கப்பட்ட “சந்தை நட்புறவுக் கொள்கைகளுக்கான” வேண்டுகோளினை இங்கு குறிப்பிடும்போது, “மக்கள் தங்கள் செயற்பாட்டில் முழுமையாக பங்களிப்புச் செய்கின்றதை அனுமதிக்கின்றதும், அவற்றின் நன்மைகளை நியாயமான ரீதியில் பங்கிடப்படுவதை அனுமதிக்கின்றதுமான கொள்கைகள் அவசியமாகும்” என வலியுறுத்தப்பட்டுள்ளது.

சந்தைகள் மக்களுக்கு சேவையாற்ற தவறியதை விளக்குவதற்கான சிறந்த உதாரணமாக, சமீபத்திய தொழில் வாய்ப்பற்ற பொருளாதார வளர்ச்சியினை இங்கு குறிப்பிடலாமென மஹ்பூப் அல்ஹக் தெரிவிக்கிறார்.

“உலகம் பூராவும், ஒரு தொழில் வாய்ப்பற்ற வளர்ச்சியைக் கொண்டுள்ள சகாப்தத்திற்கு நாம் வந்திருக்கிறோம்” என்கிறார் அவர். இத்தகைய ஒரு குணாம்சம் பல செல்வந்த நாடுகளில் கூட அவதானிக்கப்பட்டதுடன், வளர்முக நாடுகளில் இது மிகவும் தீவிர நிலையில் காணப்படுகிறது. 1960 இற்கும் 1987 இற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வளர்முக நாடுகளின் வெளியீட்டில்

மூன்றில் ஒன்றிற்கும் குறைவான அதிக ரிப்பு அதிகரிக்கப்பட்ட ஊழியத்தில் இருந்து கிடைத்தது. மூன்றில் இரண்டிற்கும் அதிகமான பங்கு மூல தன முதலீட்டில் இருந்து கிடைத்தது. அதேசமயம் வளர்முக நாடுகளில் ஊழியர்படை 40 கோடிக்கும் அதிக மான தொகையினால் அதிகரித்தது. "வெளியீடு அதிகரிக்கும் போது கூட, தொழில்வாய்ப்பின் அதிகரிப்பு பின் தங்கிய நிலையிலேயே இருக்கின்ற தென" கலாநிதி ஹக் தெரிவிக்கிறார். 1982 இற்கும் 1989 இற்கும் இடைப்பட்ட காலத்தில் அமெரிக்க பல்தேசிய கம்பனி களின் உலகளாவிய விற்பனைகள் 34 சதவீதத்தாலும் சொத்துக்கள் 78 சத வீதத்தாலும் அதிகரித்த அதே வேளை யில், மொத்த தொழில்களின் எண் ணிக்கை 66 இலட்சமாக இதே எண் ணிக்கையில் மாற்றமடையாது இருந்த தென 1989இல் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு தெரிவிக்கின்றது. உலக ளாவிய ஊழியர் படையின் வளர்ச்சி வேகத்திற்கு இணைந்து செல்லக்கூடிய வகையில் ஏறக்குறைய 100 கோடி புதிய தொழில் வாய்ப்புகள் அடுத்த தசாப்தத்திற்குள் உருவாக்கப்பட வேண்டுமென மானிட அபிவிருத்தி அறிக்கை மதிப்பீடு செய்திருக்கின்றது. "தற்போதைய போக்குகள் தொடர்ந்து நிலவி வருமாயின் இந்த எண்ணிக்கை யிலான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதென்பது சந்தேகத்துக் குரியதாகவே இருக்கும் என அவர் கூறுகிறார்.

சந்தைகள், வேலை வாய்ப்புக் களின் உருவாக்கத்திற்கு எவ்வாறு சிறப்பாக சேவையாற்றலாம்? இதற்கான உதாரணங்களை கிழக்காசியாவின் கைத்தொழில் மயமாக்கப்படும் நாடு களில் இருந்து இந்த அறிக்கை காட்டு கிறது. கொரியக் குடியரசைப் பொறுத்தவரையில், 1950களில் ஏற்பட்ட மிக முக்கியமான ஆரம்பப் படி அங்கு மேற்கொள்ளப்பட்ட காணிச் சீர் திருத்தம் ஆகும். வாடகைக்கு குடியி ருப்பதை விட சொந்தமான காணிகளை வைத்துள்ள விவசாயிகளின் விகித மானது இரண்டாண்டுக்குள் 51 சத வீதத்தில் இருந்து 94 சதவீதத்திற்கு அதிகரித்தது. அடுத்த 14 வருடங்களில், ஒரு ஹெக்டேருக்கு பயன்படுத்தப்பட்ட ஊழியம் வருடாந்தம் 4.7 சதவீதத்தால் அதிகரித்தது. அத்தோடு, சொத்துக் களை மீளப் பங்கீடு செய்வதற்கு மேலதி கமாக, இந்நாடுகள், சுகாதாரம், கல்வி, மக்களின் திறன்கள் என்பவற்றில் பாரிய முதலீடுகளைச் செய்தன. இதன் பெறுபேறாக, புதிய உற்பத்தி முறை களும் தொழில்நுட்பமும் அறிமுகப் படுத்தப்படும் வேளையிலேயே, ஊழியர் படை அவற்றை அறிந்து கொள்வதற்கு ஆயத்தமாக இருந்தது. அத்தகைய சூழ்நிலையில், ஊழிய உற்பத்தித் திறன் வருடாந்தம் 10 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்ததுடன், வேலையில்லாத் திண் டாட்டம் தொடர்ச்சியாக மூன்று சத வீதத்திற்கும் குறைவாக நிலைத்து நின்றது. வளர்முக நாடுகளில் வேலை யில்லாதோர் வீதங்கள் தொடர்ந்தும்

## மக்கள் நலன் பேணும் சந்தைகளை நோக்கி

மக்கள் தங்களின் செயற்பாடுகளில் முழு தளவில் ஈடுபடவும், அவற்றின் அனுகூலங்க ளில் நியாயமான முறையில் பங்கு கொள்ள வும், மக்கள் நலன் பேணும் சந்தைகள் அவர்களுக்கு இடமளிக்கின்றன. மக்கள் சந்தைகளுக்குச் சேவையாற்றுவதை விட, சந்தைகள் மக்களுக்குச் சேவையாற்றும் நிலைமை எடுத்து வருவதற்கு உறுதியான படிமுறைகள் தேவையாகவுள்ளன.

*1. முன்நிபந்தனைகள் -*

- மக்கள் சந்தைக்காக தம்மை ஆயத்தம் செய்யும் வண்ணம், அவர்களின் கல்வி, சுகாதாரம், திறன்கள் ஆகியவற்றில் போதுமான முதலீட்டினைச் செய்தல்.
- வறிய விவசாயச் சமூகங்களில் சொத்துக்களை - குறிப்பாக காணி களை - சமமாக பங்கீடு செய்தல்.
- வறிய மக்களுக்கான கடன் விஸ்தரிப்பு.
- குறிப்பாக சந்தை வாய்ப்புக்களின் வீச்சு பற்றிய தகவலை அறிய வழி செய்தல்.
- தெருக்கள், மின்சாரம், தொலைபேசி போன்ற பௌதீக உட்கட்டமைப் பையும், ஆராய்ச்சிக்கும், அபிவிருத் திக்கும் போதிய ஒத்துழைப்பினையும் வழங்குதல்.
- சொத்துரிமைகளைப் பாதுகாப்ப தற்காக ஒரு சட்டபூர்வமான வரை யறைச் சட்டம் இருத்தல்.
- சாதி, சமயம், பால், இனம் என்ற பேதமின்றி வாய்ப்புக்களை அளித்தல்.
- சர்வதேச வர்த்தகத் தடைகளை ஒழித்து ஒரு தாராள வர்த்தக ஆட்சிமுறையினை ஏற்படுத்தல்.

*2. உடன்வரும் நிபந்தனைகள்*

- உள்நாட்டு விலைகளிலும், வெளி நாட்டு நாணயப் பெறுமதிகளிலும் உறுதித் தன்மையைப் பேணுகின்ற ஒரு நிலையான பேரண்டப் பொரு ளாதார சூழல் இருத்தல்.
- சரியான விலைச் சட்டெண்களைக் கொண்ட ஒரு விரிவான ஊக்கு விப்புத் திட்டம், ஒரு நியாயமான வரி முறை, வேலைக்காகவும், நிறுவ னத்திற்காகவும் போதிய சன்மா னங்கள் என்பன இருத்தல்.
- தன்னிச்சையான அரசாங்கக் கட்டுப்பாடுகள், ஒழுங்கு விதிகள் என்பவற்றிலிருந்து சுயாதீனம்.

*3. சீரமைப்பு நடவடிக்கைகள்*

- தனியுரிமைக்கெதிரான சட்டங்களூ டாகவும், நிதித் துஷ்பிரயோகங்க ளுக்கு எதிரான முற்பாதுகாப்பு நடவடிக்கைகளினூடாகவும் போட்டித் தன்மையினைப் பாதுகாத்தல்.
- மருந்துகள் பற்றிய ஒழுங்குவிதிகள், காப்பு மற்றும், சுகாதாரம், பற்றிய நியமங்கள், நேர்மையான முறையில் விளம்பரம் செய்தல் ஆகியவை மூலமாக, நுகர்வோரைப் பாது காத்தல்.
- ஒழுங்கமைக்கப்பட்ட தொழில் நிபந்தனைகள், ஆகக் குறைந்த சம்பள நியமங்கள் என்பவையூடாக தொழிலாளர்களைப் பாதுகாத்தல்.
- குறிப்பாகப் பெண்கள், சிறுவர்கள், சிறுபான்மை இன மக்கள் போன்ற விசேட குழுக்களைப் பாதுகாத்தல்.
- ஊக்குவிப்பு முறைமைகளூடாகவும், மாசுபடுதலைத் தடுப்பதன் மூலமாக அல்லது மாசுபடுதலை விளைவிப்ப வர்களைக் கட்டணம் செலுத்தச் செய்விப்பதன் மூலமாகவும் சுற்றா டலைப் பாதுகாத்தல்.

*4. சமூகக் காப்பு வலைகள்*

மானிட முதலீடு, தொழிலாளர்களுக்கு மீள் பயிற்சி, கடன் பெறுவதற்கான வாய்ப்புக்கள், ஊனமுற்றவர்கள், வயோ திபர்கள் போன்ற கூட்டத்தவர்களுக்கு நிரந்தர உதவி வழங்குதல் என்பவை யூடாக சந்தை விசையினால் தற்காலிக மாக பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் சந்தைகளுக்குள் கொண்டு வரும் வண்ணம் அவர்களைக் கவனித்துக் கொள்வதற்காக போதியளவு ஒழுங்கு விதிகள் இருத்தல்.

இரு இலக்கங்களைக் கொண்டவையாக இருந்து வருவதுடன், கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளில் இது 6 சத வீதத்திற்கும் அதிகமானதாக காணப்படுகிறது.

"ஒரு தொகுதி நாடுகளின் வரலாற்று ரீதியான அனுபவத்தினை எதிர்காலத்தில் இன்னொரு நாட்டில் எடுத்து வர முடியுமென அனுமானிப்பது கபடமற்ற ஓர் ஊகமாக இருக்கும்" என இந்த அறிக்கை தெரிவிக்கிறது. "ஆனால், இதிலிருந்து ஒரு செய்தி கிடைப்பதாக இருப்பின், அச் செய்தியானது, முதலீடுகளிலோ அல்லது உற்பத்திச் செயன்முறைகளிலோ மாத்திரமல்லாது, மக்கள்மீதும் கவனத்தினைச் செலுத்துவதே தீர்வாக அமையும் என்பதைத் தெரிவிக்கிறது" பெரிய நிறுவனங்கள் தொழிலாளர்களை தற்காலிக அடிப்படையிலும், உப ஒப்பந்த அடிப்படையிலும் பயன்படுத்துவது அதிகரித்து வருவது பற்றியும், வளர்முக நாடுகளிலும் கைத்தொழில் நாடுகளிலும் பிரதான தொழில் வழங்குனர்களாக இருக்கின்ற சிறிய நிறுவனங்களுக்கு தொழில் துவக்கும் கடன்களை வழங்குவதிலுள்ள ஊக்கமின்மை பற்றியும் இந்த அறிக்கை ஓர் எச்சரிக்கையினை விடுத்திருக்கிறது.

சந்தைகளில், செயல்திறனற்ற அரசாங்கங்களின் பங்கு குறித்து இந்த அறிக்கையில் நேரடியாக விமர்சிக்கப்பட்டிருக்கிறது. கடந்த காலத்தில் பல பெரிய அரச நிறுவனங்கள் பாரிய நிதி இழப்புக்களை அடைந்திருக்கின்றன என்றும், மானிட அபிவிருத்திக்காக சிறப்பாக பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடிய மானியங்களினால் இவ் இழப்புகள் ஈடுசெய்யப்பட வேண்டியுள்ளதென்றும் இவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். "சமூக நலச் செலவுகள் தளர்ந்த நிலையிலுள்ளன" என இவர்கள் தெரிவிக்கிறார்கள். "அரசாங்கங்கள் இத்தகைய இழப்புக்களை ஈடுசெய்ய வேண்டிய தேவை இல்லாதிருப்பின், பங்களாதேஷிலும், போலந்திலும், சுகாதாரம்/கல்வி என்பவற்றுக்காக, ஒதுக்கப்படும் மொத்தச் செலவினத்தினை இரு மடங்காகவும் ஆர்ஜென்டினாவில் அநேகமாக மூன்று மடங்காகவும் பெருக்கி இருக்க முடியுமென" இவர்கள் தெரிவிக்கின்றனர்.

பல நாடுகளில் இதற்கான தீர்வு, அரச வியாபாரங்களை தனியார் மயப்படுத்துவதாகும்; 1980ற்கும் 1991ற்குமிடைப்பட்ட காலப்பகுதியில் ஏறக்குறைய 7000 அரச நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட்டன. இவற்றுள் ஏறக்குறைய 4500 நிறுவனங்களின் தனியார்மயமாக்கல் முன்னாள் கம்யூனிச உலகில் மேற்கொள்ளப்பட்டது. கடந்த இரண்டு வருடங்களில் வளர்முக நாடுகளில் தனியார்மயமாக்கல் வேகம் அதிகரித்த போதிலும், ஏறக்குறைய 1350 தனியார்மயமாக்கப்பட்ட கம்பெனிகள் மாத்திரமே அங்கிருந்தன. "தனியார்மயமாக்கப்பட வேண்டும்" என்பதற்கான உத்வேகத்திற்கும், திறமையற்ற பொது நிறுவனங்களின் பாரிய இழப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும்" என்பற்கும் காரணம், தயாரிப்பு, மற்றும் உற்பத்தித் துறைகளில் தனியார் துறையினர் பொதுத் துறையினரின் செயற்பாட்டினைவிட சிறப்பான பெறுபேறுகளை தரக்கூடும் என்ற நம்பிக்கையே ஆகும்.

"எவ்வாறாயினும், தனியார்மயமாக்கல் ஒரு நிவாரணியல்ல" என இவ் அறிக்கை எச்சரிக்கிறது. அவசரமாக உருவாக்கப்பட்டால் அல்லது நடைமுறைப்படுத்தப்பட்டால், இது மிகவும் சிறிய பலனையே தரும். "தனியார்மயமாக்கல் என்பது அதனுள்ளேயே முற்றுப்பெற்ற ஒன்றாக அமையாது, உயர்மட்டங்களைக் கொண்ட மானிட அபிவிருத்திக்கு ஒரு கருவியாகவே இருக்க வேண்டும்" என இவ் அறிக்கை தெரிவிக்கிறது. "துரதிர்ஷ்டவசமாக பல்வேறு நாடுகளில் காணப்படுகின்ற செயல்முறையாதெனில், தனியார் முதலீட்டினை ஊக்குவிப்பதற்கான ஒரே சீரான ஓர் உபாயத்தின் உள்ளார்ந்த அங்கமாக இதனைக் கருதாது, ஒரு சில பிரத்தியேக தனிப்பட்டவர்களுக்கும் குழுக்களுக்கும் பொதுநிறுவனங்கள் விற்கப்படுகின்ற ஒரு "விற்றுத் தீர்க்கும்" விற்பனை முறை காணப்படுவதாகும்.

குறிப்பாக வளர்முக நாடுகளில் பிராந்தியங்களுக்குள்ளேயே அனுபவங்கள் மிகப் பரந்த அளவில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. அமெரிக்காவில் தனியார்மயமாக்கலானது ஒரு "கணிசமான பங்கினை" வகித்திருக்கிறது. ஆர்ஜென்டீனா மூன்று வருடங்களில் 51க்கும் அதிகமான கம்பனிகளைத் தனியார்மயமாக்கி, அரசாங்க வருமானத்தினை 560 கோடி அமெரிக்க டொலர்களினால் அதிகரித்துக் கொண்டுள்ளது. அத்துடன், பேரளவிலான வெளிநாட்டு தனியார் முதலீட்டினையும் கவர்ந்திருக்கிறது. (இங்கும் கூட, ஒரு சில ஏகபோகங்கள் இன்னமும் காணப்படுகின்றதென இவ்வறிக்கை தெரிவிக்கிறது). மறுபுறத்தில், ஆபிரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட தனியார்மயமாக்கல் "மிகவும் குறைந்த முக்கியத்துவத்தை" கொண்டிருந்தது. பங்கு முதலீடுகளுக்கு அவசியமான போதிய சேமிப்புக்களை திரட்டிக் கொள்வதில் காணப்படும் இடையூறுகள் காரணமாக மாளாவி போன்ற நாடுகள் தங்கள் இலக்குகளை அடைய மிகவும் போராடி இருக்கின்றன.

மானிட அபிவிருத்தி இலக்குகளை பேணி வருவதற்கும் அதே வேளையில் சந்தைக் காரணிகளை சமநிலையில் வைத்திருப்பதற்கும்" இந்த அறிக்கையானது, "தனியார் மயமாக்கலின் ஏழு பயங்கரமான தவறுகள் பற்றிய எச்சரிக்கையை விடுக்கிறது.

1. தவறான காரணம்

அநேகமான அரசாங்க விற்பனைகள் தேசிய நிதிவளங்களுக்கு குறுகியகால வருமானங்களை மட்டும் தேடுபவையாகவே உள்ளன. இத்தகைய வரையறுக்கப்பட்ட குறிக்கோளானது, நுகர்வோருக்கு நீண்டகால இழப்புக்களையும் ஒட்டுமொத்த பொருளாதார திறமைக்குப் பாதிப்பினையும் ஏற்படுத்தக்கூடும். ஓர் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையானது வெறுமனே ஒரு தனியார் ஏகபோகமாக மாற்றம் அடையும் வேளையில் இந்நிலைமை தோன்றுகின்றது.

2. தவறான சூழ்நிலை

தன்னிச்சையான அரசாங்கப் பிரகடனங்கள், வினைத்திறமையில் தொடர்ந்தும் பாதிப்புக்களை ஏற்படுத்துமாயின் அல்லது அரசாங்கம் மோசடிகளுக்கு எதிரான ஒழுங்கு விதிகளை மேற்கொள்ள தவறுமாயின், "சொத்துரிமையை தனியார் துறைக்கு மாற்றுவதனால் அதிக நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும்."

3. நட்புச் சலுகையும் ஊழலும்

சொத்துக்கள் இரகசியமாகவோ அல்லது போட்டி விலை கோரல் இல்லாமலோ விற்கப்படுகின்ற

வேளையில் ஊழலும், அரசாங்கம் தனக்கு வேண்டியவர்களுக்கு சலுகை காட்டுவதும் தொடர்கின்றன. விற்பனைகள் "பகிரங்கமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், அந்நிலையில் இத்தகைய குற்றச்சாட்டுகள் எழ மாட்டாது" என்றும் இவ் அறிக்கை தெரிவிக்கிறது. விற்பனைக்கு முன்னான விளம்பரத்தில் விற்பனைக்கான குறிக்கோள்கள் பற்றித் தெரிவிக்கப்படல் வேண்டும். விற்பனைக்குப் பின்னர் இக்குறிக்கோள்கள் அடையப்பட்டிருந்தால், அவை எவ்வாறு அடையப்பட்டன என்பது பற்றிய ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

### 4. வரவு – செலவுத்திட்ட பற்றாக் குறைகளை நிதியீட்டம் செய்தல்

நிதிப் பற்றாக்குறையால் அல்லல் படும் நிதி அமைச்சர்கள் தங்கள் வரவு – செலவுத் திட்டப் பற்றாக் குறைகளை நிதியீட்டம் செய்வதற்கு வசதியான ஒரு கருவியாக அரச நிறுவனங்களின் விற்பனையைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் தங்களின் வரவு – செலவுத் திட்டங்களை சமநிலைப்படுத்துவதற்காக, தேசிய படுகடனைக் குறைத்துக் கொள்வதற்குப் பதிலாக வரிகளை உயர்த்துதல்,' பொதுச் செலவினத்தில் குறைப்பினைச் செய்தல் போன்ற மிகவும் கஷ்டமான தேர்வுகளுக்கு முகம் கொடுக்க வேண்டும். "தற்போதைய பொறுப்புக்களுக்காக சொத்துக்களை விற்பனை செய்வதென்பது, எதிர்கால சந்ததிகளின் விருப்பத் தேர்வுகளை அடகு வைப்பதற்குச் சமானமாகும்" என இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

### 5. பலவீனமான ஒரு நிதிசார் உபாயம்

அநேகமாக, பங்குகள் ஒன்றில் வெளிநாட்டவர்களுக்கு அல்லது ஒரு சிலரால் மட்டும் தனியுரிமை கொண்டாடப்படுகின்ற விருத்தி குன்றிய நிலையிலுள்ள பங்குப் பரிவர்த்தனை சந்தையில் மாத்திரம் விற்கப்படுகின்றன. இதற்குப் பதிலாக, வருமானத்தினை உச்சப்படுத்தும் வகையிலும, தேசிய நலனைப் பேணிப் பாதுகாக்கும் வகையிலும் உள்நாட்டவர்களுக்கும், வெளிநாட்டவாகளுக்கும் பங்குகள் ஒரேவிதமான முறையில் பரந்த ரீதியில் விற்கப்படுவதற்கு அரசாங்கங்கள் போதிய அக்கறையினை எடுத்தல் அவசியமாகும்.

### 6. பலவீனமான தொழில் உபாயங்கள்

ஊதியங்கள் தொடர்பான யதார்த்தத்துக்கு மாறான வாக்குறுதிகள் அல்லது மிதமிஞ்சிய தொழில் முடிவுக் கொடுப்பனவுகள் தொடர்பான உத்தரவாதங்கள் போன்றவற்றால் தொழிலாளர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளும் தவறினை அரசாங்கங்கள் இழைக்கின்றன. இதற்குப் பதிலாக, ஆளணியினைத் தொடர்ந்து வைத்தல், ஆட்குறைப்புச் செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பான கொள்கைகளில், விற்பனைக்கு முன்னரே தொழில் தொடர்பான கலந்துரையாடல், முகாமைத்துவத்தில் பங்களிப்புச் செய்தல் ஆகியவற்றுக்கு அவர்கள் அழைக்க வேண்டும்.


### 7. அரசியல் இணக்கம் இன்மை

தனியார் மயமாக்கல் என்பது அரசியல் ரீதியானது என்பதுடன், அதுவொரு பொருளாதார நடவடிக்கை என்பதால், பிரகடனம் மூலமாக பலாத்காரமாகத் திணிக்கப்படக்கூடாது. "அரசாங்கங்கள் கூடுமானவரை ஒரு இணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், கொள்கையில் பாரிய விலகல் ஏற்படுவதைக் குறைப்பதற்கு ஜனநாயக பாராளுமன்ற நடைமுறைகளைப் பயன்படுத்தவும் வேண்டும்" என கலாநிதி ஹக் தெரிவிக்கிறார். "இத்தவறுகளை கணக்கில் எடுத்துக் கொள்வது தனியார் மயமாக்கலுக்கு எதிரான எச்சரிக்கையல்ல; ஆனால், பிழையான கட்டமைப்புக்குள் மானிட அபிவிருத்தியின் நோக்கம் பற்றிய சிந்தனை எதுவுமின்றி மேற்கொள்ளப்படுகின்ற தனியார் மயமாக்கலுக்கு எதிரானதாகும்" என இவ் அறிக்கையின் ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

வெற்றிகரமான சந்தைப் பொருளாதாரங்களின் மத்தியில் சமூக, பொருளாதாரப் பங்களிப்பின் புதிய வடிவங்கள் இருக்க வேண்டுமென அறிக்கை தெரிவிக்கிறது. "மக்கள் நலன் பேணும் சந்தைகளை உருவாக்குவது இந்த நிகழ்வுப் போக்கின் அத்தியாவசியமான ஒரு பாகமாக இருக்கும். மக்களின் படைப்பாற்றலிலும் செயல்திறனிலும் நம்பிக்கை வைத்து, அவர்களுடைய பங்களிப்பினை முழு அளவில் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது" என்றும் இவ்வறிக்கை கூறுகிறது.

"இத்தவறுகளை கணக்கில் எடுத்துக் கொள்வது தனியார்மயப்படுத்தலுக்கு எதிரான எச்சரிக்கையல்ல; ஆனால், பிழையான கட்டமைப்புக்குள் மானிட அபிவிருத்தியின் நோக்கம் பற்றிய சிந்தனை எதுவுமின்றி மேற்கொள்ளப்படுகின்ற தனியார்மயமாக்கலுக்கு எதிரானதாகும்" என இவ் அறிக்கையின் ஆசிரியர்கள் குறிப்பிடு கிறார்கள்.

வெற்றிகரமான சந்தைப் பொருளாதாரங்களின் மத்தியில் சமூக பொருளாதாரப் பங்களிப்பின் புதிய வடிவங்கள் இருக்க வேண்டுமென அறிக்கை தெரிவிக்கிறது. "மக்கள் நலன் பேணும் சந்தைகளை உருவாக்குவது இந்த நிகழ்வுப்போக்கின் அத்தியாவசியமான ஒரு பாகமாக இருக்கும். மக்களின் படைப்பாற்றலிலும் செயல்திறனிலும் நம்பிக்கை வைத்து, அவர்களுடைய பங்களிப்பினை முழுஅளவில் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது" என்றும் இவ்வறிக்கை கூறுகிறது.



# சமூக மாற்ற நிகழ்வுப்போக்குக்கான சில கருத்துக்கள்

ஹன்ஸ் ஜே. ஹோயர்

*கலாநிதி ஹான்ஸ் ஜே. ஹோயர் ஜேர்மனியில் பிறந்த அமெரிக்கப் பிரஜையாவார். 'Plan International' அமைப்பின் தென்னாசிய பிராந்திய அலுவலகத்தின் பிராந்தியப் பணிப்பாளராக அபிவிருத்தி சம்பந்தமாகப் பரந்த அறிவும் வெளிக்கள அனுபவமும் பெற்றுள்ள அவர், சிலியில் ஐக்கிய அமெரிக்க சமாதானத் தொண்டர் படையிலும் பணி புரிந்துள்ளார். தனது வெளிக்கள அனுபவங்களுக்கு மத்தியில் ஜோர்ஜ் மேசன் பல்கலைக்கழகத்தில் விரிவுரைகளையும் நிகழ்த்தியுள்ளார்.*

அபிவிருத்தி மற்றும் சமூக மாற்றம் என்பன குறித்த பாரம்பரிய அணுகுமுறை, முன்னர் நிர்ணயம் செய்யப்பட்டு உயர்ந்த வாழ்க்கைத் தரங்களின் நியதிகளின் அடிப்படையில் எடுத்துக் கூறப்பட்டுள்ள ஓர் இலக்கினை நோக்கி, தனிப்பட்ட அல்லது துறைவாரியான செய்திட்டங்களை மிகவும் திறமையான முறையில் நிர்வகித்து வருவதற்கான ஒரு முயற்சியென்றே கருதப்படுகின்றது. மேலைத்தேச உலகின் நுகர்வு மாதிரிகளும் அதன் விளைவான வாழ்க்கை முறைகளும் – குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் தொழில்மயமாக்கப்பட்ட சமூக வாழ்க்கை மாதிரிகள் – அபிவிருத்திக்கான அடிப்படை நியமமாக கருதப்படுகின்றது. சார்புரீதியில், உயர்ந்த மற்றும் தாழ்ந்த வாழ்க்கைத் தரங்கள் பெருமளவுக்கு வளர்ச்சியடைந்த அல்லது வளர்ச்சி குன்றிய நிலைகளுடன் இணைந்து காணப்படுபவையென கருதப்பட்டு வருகின்றது. பாரம்பரிய சமூக அபிவிருத்தி முயற்சிகள், தேவைகளை இந்த நியமத்தின் அடிப்படையில் நோக்குகின்றது. ஆகவே, செய்திட்டக் குறிக்கோள்கள், உயர்ந்த வாழ்க்கைத் தரமொன்றை எட்டுவதனை சாத்தியமாக்கிக் கொள்ளக்கூடிய விதத்தில் உற்பத்தி ஆற்றலையும் சம்பாத்திய ஆற்றலையும் பெருக்கிக் கொள்ளக்கூடிய வகையில் நெறிப்படுத்தப்படுகின்றன. தொழில் திறன்களைக் கற்றுக் கொள்ளுதல், சந்தைகளை விஸ்தரித்தல், கடன் வசதிகளை பெற்றுக் கொள்ளல், விவசாய விளைச்சல்களைப் பெற்றுக் கொள்ளுதல் போன்றவற்றுக்கு அதிகளவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. வறிய மக்களின் வாழ்க்கை அனுபவத்தினை / கண்ணோட்டத்தினை விருத்தியடையச் செய்வதானது, அவர்கள் பெற்றுக் கொண்டுள்ளவற்றை தக்க வைத்துக் கொள்வதற்கும், மேலும் அதிக அளவு பெற்றுக் கொள்வதற்காக தமது ஆற்றல்களை செலவிடுவதற்கும் அவர்களுக்குத் தூண்டுதல் அளிக்கின்றது என்பதே சமூக மாற்றத்தின் அடிச்சரடான தத்துவமாகும். அதாவது, மக்கள் பிரிவினர் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களாகவும் பட்டினியிலிருந்து விடுபட்டவர்களாகவும் உடல் ஆரோக்கியம் கொண்டவர்களாகவும் இருந்து வருதல் வேண்டும். உயர்ந்த வாழ்க்கைத்தரம் அளிக்கப்படும் பொழுது, அது, மக்களிடையே எதிர்பார்க்கப்படும் பொருள் குவிப்பு முனைப்பினை தூண்டி விடாதிருக்கும் நிலையில் பாரம்பரிய சமூக மாற்ற திட்டவியலாளர்கள் குழப்பமும் விரக்தியும் கோபமும் அடைகின்றனர். இந்த தோல்விக்கான காரணம் வறிய மக்களின் நடத்தைப் போக்கிலுள்ளது என்றும், தமது வறுமை நிலைக்கு அவர்கள் தாமே காரணமாக உள்ளனர் என்றும் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றது. அதாவது வறிய மக்கள் எதனையும் சாதித்துக் கொள்ள வேண்டுமென்ற உந்துணர்வு அற்றவர்களாக வாளாவிருந்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

சமூக மாற்றத்தினை சமூகத்துக்குள் திணித்துவிட முடியும்; எனினும், அணுகுமுறையில் ஏற்படும் முழு அளவிலான மாற்றத்துடன் இணைந்த வகையில் நடத்தையில் மாற்றம் ஏற்படாத பட்சத்தில், அந்த மாற்றம் நேரடியாக அடக்குமுறைக் கூடாகவோ அல்லது வெகுமதி முறை மூலமாகவோ நிலைநிறுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய ஒரு சூழலில் மட்டுமே ஏற்புடைத்தான நடத்தையை நிலைநாட்டிக் கொள்ள முடியும். இவை விரும்பப்படும் நடத்தையிலும் பார்க்க விரும்பத்தக்க இசைவாக உள்ளது. அதனை நேரடியான அல்லது மறைமுகமான சமூகமயமாக்கல் மூலம் பேணி வருதல் அவசியமாகும்.

விரும்பப்படும் சமூக மாற்றத்துக்கு (தானே உருவாக்கி தன்சுய முயற்சியினால் எடுத்து வரப்படுவது) ஒரு புதிய விவேக முறையின் உருவாக்கம் அவசியமாகும். இதற்கு ஓர் புதிய அணுகுமுறை – அதாவது, ஒரு தனிநபர் அல்லது ஒரு குழு அதன் முழு வாழ்க்கைச் சூழலுடனும் பரஸ்பரம் தொடர்பு கொள்ளும் வழிமுறையில், காணப்படும் செலவுகள் மற்றும் அனுகூலங்கள் என்பன குறித்த ஒரு புதிய அணுகுமுறை – அவசியமாகும். ஒரு புதிய விவேகபூர்வமான அறிவு இல்லாதிருப்பின், ஆரம்ப ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கிய சிந்தனை முறைகள் அவற்றை மீண்டும் உருவாக்க முடியும். இத்தகைய போலியான மாற்றம் நடத்தையை தற்காலிகமாக (விரும்பத்தக்க இசைவு) மாற்றியமைக்க முடியும். ஆனால், மனப்பாங்குகளும் விழுமியங்களும் மாற்றமடையாது அதே வகையில் இருந்து வருவதுடன், சமூக –பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டு நிர்ப்பந்தங்கள் குறைந்து வரும் பொழுது அவை மீண்டும் எழுச்சியடையும். நிர்ப்பந்தத்தினால் வாய் மூடி மௌனியாக்கப்பட்டுள்ள ஒரு மனிதன் தனது நம்பிக்கைகளை மாற்றிக் கொண்டவனல்லன். பௌதீக சூழலை மாற்றுவதன் மூலமோ அல்லது மக்களின் அவதானிக்கக் கூடிய நடத்தையை திருத்தியமைப்பதன் மூலமோ தானே விரும்பி தனது சுய முயற்சியால் எடுத்து வரக்கூடிய மாற்றத்தைக் கொண்டுவர முடியாது. அத்தகைய மாற்றங்கள் வெறும் நிகழ்வுகள் மட்டுமேயாகும்.

மக்கள் தமது வாழ்க்கையை எப்படி ஏன் மாற்றிக் கொள்கின்றார்கள் என்பதனை சிறப்பாகப் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு முயற்சியாக சமூக மாற்ற நிகழ்வுப்போக்கினை நாம் நோக்குவோம். மக்கள் தாம் யதார்த்தத்தை புரிந்துகொள்ளும் விதத்திலேயே அனைத்து விளைவுகளுக்கும் எதிர் விளைவு காட்டி வருகின்றார்கள். அவர்கள் தமக்கே உரிய வேகத்தில் தமக்கே உரிய காரணங்களுக்காக

மாற்றமடைகின்றார்கள். அவர்கள் தமக்குள் ஒரு செலவுப் பகுப்பாய்வு அணுகுமுறையை மேற்கொண்டு அதற்கேற்ற விதத்திலேயே தம்மை மாற்றிக் கொள்கின்றார்கள். பொருளாதார இலாபம் இதில் ஓர் அம்சம் மட்டுமேயாகும். மக்கள் தாமே தமது சொந்த மாறுதல் முகவர்களாக இருக்கக் கூடிய சந்தர்ப்பம் அவர்களுக்கு அளிக்கப்படும் பொழுது, அவர்கள் அபாய ஏதுப் பிரச்சினையை நேரடியாக எதிர்கொள்கின்றார்கள். அது செயல் முடக்கத்தினை எடுத்து வருகின்றது.

செயல் முடக்கத்தினை ஏற்படுத்தும் அச்ச உணர்வு, ஒருவரின் தாங்க முடியாத இழப்பு குறித்த அச்ச உணர்வு போன்றதல்ல. வறிய மக்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு, அனுபவம் பல கசப்பான படிப்பினைகளைக் கொடுத்துள்ளது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், தமக்குக் கடும் துன்பங்கள் ஏற்பட முடியும் என்பதனையும், இந்தத் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு தாம் உயிர் வாழ வேண்டியுள்ளது என்பதனையும் அவர்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். பொதுவாக மத்தியதர வர்க்கத்து அல்லது மேல் தட்டு வர்க்கத்தின் பின்னணியை கொண்டிருக்கும் வெளி அவதானி ஒருவர், ஏற்படக்கூடிய மேலும் ஒரு துன்பம் வறிய மக்களை அதள பாதாளத்துக்கு இட்டுச் சென்று விடும் என்று நம்புகின்றார். ஆனால் வறியோர் தமக்கு எது உகந்தது என்பதை நன்கு அறிந்த நிலையிலேயே இருந்து வருகின்றனர்.

வறிய மக்களைப் பொறுத்தவரையில், தமது நாளாந்த வாழ்க்கையில் மனச் சோர்வு மற்றும் விரக்தி என்பவற்றுக்கு ஈடு கொடுப்பதற்கு அவர்களுக்கு ஒரு சுயமரியாதை அவசியமாக உள்ளது. இந்த சுயமரியாதைக்கு அச்சுறுத்தல் தரக்கூடிய, தம்மை அவமதிப்புக்குட்படுத்தக்கூடிய ஒரு தோல்வி குறித்த அச்சமே வறிய மக்களை முடக்கி வருகின்றது. இந்த சுயமரியாதை என்பது மிகவும் மதிப்பு மிக்க ஒரு சொத்தாகும். அது அவர்கள் வாழ்க்கைப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு உதவுகின்றது. தான் மதிப்பு மிக்க ஒரு நபர் என்ற உணர்வினை எடுத்து வரும் சுயமரியாதை, தம்முடன் ஒத்த குழுவினரின் ஏற்பினை வேண்டி நிற்கின்றது. இந்த சகாக்கள் குழுவினரே வெற்றியை அல்லது தோல்வியை நிர்ணயம் செய்து வருகின்றனர். மேலாதிக்கம் செலுத்தி வரும் கலாச்சாரம் இந்த வெற்றி தோல்விகளை நிர்ணயம் செய்யவில்லை.

வறிய மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் மேலும் அதிகளவு சுதந்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக வெகுமதி முறை மீள ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டும். அதாவது தமது சகாக்களிடையே அவர்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் உசிதமான சூழ்நிலை தோன்றினால் தோல்வியின் செலவுகள் மிகக் குறைந்த மட்டத்திலேயே இருக்க முடியும். மேலும், வாய்ப்புக் கட்டமைப்பினைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தினை அதிக அளவில் பெற்றுக் கொள்வதற்கும் வெகுமதி முறையை மீள ஒழுங்குபடுத்தல் அவசியமாக உள்ளது.

குறிக்கோள், மக்களின் விழுமியம் மற்றும் வெகுமதி முறை என்பவற்றுடன் இசைந்து செல்லக் கூடியதாக இருக்காதவிடத்து விரும்பப்படும் (தானே உருவாக்கிய தனது சுயமுயற்சியில் எடுத்துவரும்) சமூக மாற்றம் நிகழமாட்டாது. எவ்வாறிருப்பினும், அது விரும்பத் தக்கதும், சாதித்துக் கொள்ளக் கூடியதுமாகும். இல்லாவிட்டால், நிச்சயமாக விரக்தியில் முடிவடையக் கூடிய ஒரு முயற்சியின் மீது மக்கள் தமது சக்தியை விரயம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படும் ஒரு நிலைமை தோன்ற முடியும். வாய்ப்புக் கட்டமைப்பு (அதாவது கிடைக்கக் கூடியதாக இருக்கும் சுதந்திர இடப்பரப்பு), விரும்பப்படும் அந்த வாய்ப்பினை எட்டுவது சாத்தியமானதா அல்லது சாத்தியமற்றதா என்பதனை நிர்ணயிக்கின்றது

விரும்பப்படும் ஒரு சமூக மாற்றத்தை எடுத்து வருவதற்கான ஒரு முயற்சியை, எதிர்பார்க்கப்படும் பின் விளைவுகளை இனங்கண்டு கொள்வதற்கும், மதிப்பிடுவதற்கும் தனி நபர்களும் குழுக்களும் அதிகளவில் கவனம் செலுத்த வேண்டும் என்ற விடயத்தை முகவரகங்கள் வலியுறுத்தல் அவசியமாகும். வாய்ப்புக் கட்டமைப்பு தாம் விரும்பும் குறிக்கோளை எட்டிக் கொள்ளக் கூடியவிதத்தில் நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடியதாக இருந்து வருகின்றதா அல்லது எதிர்பார்க்கப்படும் எதிர்ப்பினை சமாளிப்பதற்கு ஆற்றல் அற்றதாக இருந்து வருகின்றனவா என்பதனை மதிப்பிடுவதற்கான முயற்சியாக அது உள்ளது. சமூக மாற்றத்தில் காணப்படும் அபாய ஏதுக்களை ஏற்றுக் கொள்பவர்களினால் இந்த செலவு நலன் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேலும், இது பொருத்தமான வரலாற்றுத் தருணமாக இருந்து வருகின்றதா? அல்லது இருக்கவில்லையா என்பதனைக் கண்டறிவதற்கான முகவரகங்களின் முயற்சியில் இது முக்கியமான குவிமையமாக இருக்க முடியும். எதிர்ப்பினை சமாளிப்பதற்கும் விரும்பப்படும் சமூக மாற்றத்தினை சாதித்துக் கொள்வதற்குமான சக்தியை வெளி நிதிப்படுத்தலினால் வழங்க முடியுமா?

சமூக நிகழ்வுப்போக்கின் பிறிதொரு கூறும் உள்ளது. இந்த மூன்றாவது கூறு வாழ்வதற்கான இடமாகும். அதாவது, ஒருசமூகக் குழு பௌதீக ரீதியில் விரிவடையாதிருக்கும் அதே வேளையில், தொடர்ச்சியாக விரிவடைந்து செல்வதற்கு இடமளிப்பதாகும். இந்த "வாழ்க்கை இடம்" என்ற அம்சம் மிகவும் முக்கியமானதொன்றாகும். ஏனெனில், சமூக மாற்ற செய்திட்டங்கள் ஏனைய அனைத்து ஜீவிகளையும் போலவே ஒன்றில் வளர்ச்சியடைகின்றன. அல்லது மரணித்து விடுகின்றன. அளவில் பெருக்கமடையாது வளர்ச்சி அடையக்கூடிய சமூக அங்க ஜீவியொன்றின் முரண்பாடு காரணமாக குழப்பநிலை தோன்ற முடியும். இந்த வாழ்க்கை இடம் என்ற விடயத்தை மனித மூளையின் பிராந்தியங்களுடன் ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் நன்கு புரிந்து கொள்ள முடியும். எமது மூளையில் 10 சதவீதத்துக்கும் குறைவான பகுதியையே நாம் பயன்படுத்தி வருகின்றோம் என்பது தெரிந்த விடயமாகும். எனவே, இந்த நிலையில், முன்னர் பயன்படுத்தப்படாதிருந்த மூளையின் பாகங்களை பயன்படுத்துவதன் மூலம் நாம் வளர்ச்சி நிலையை அனுபவிக்க முடியும். இவ்விதம் பயன்படுத்துவதன் மூலம் புதிய கருதுகோள்கள் போன்றவற்றை புரிந்து கொள்வதற்கான ஆற்றலும் உள்ளொளியும் எமக்குக் கிட்டுகின்றது. மூளையின் அளவு பருமன் அடைந்து விடவில்லை. ஆனால், முன்னர் வெறுமனே சோம்பிக் கிடந்த பிரதேசங்களை பயன்படுத்திக் கொள்வதன் மூலம் வாழ்க்கையை நாம் மிகவும் அர்த்தமுள்ள விதத்தில் அனுபவிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

சமூக மாற்ற நிகழ்வுப்போக்கு பல கட்டங்களைக் கொண்டதாகும்.

இவற்றுள் சில கட்டங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுகின்றன. விளக்கத்துக்காக இந்தக் கட்டங்கள் வரிசை வாரியாக இங்கு தரப்படுகின்றன.

*கட்டம் 1 - ஆக்கபூர்வமான அதிருப்தி*

தற்போதைய வாழ்க்கை அனுபவம் விரும்பத் தக்கது அல்ல என்றும் மாற்றம் தவிர்க்க முடியாதது என்றும், மாற்றம் சாத்தியமானதென்றும் ஒரு புதிய எண்ணம் தோன்றுகின்றது.

*கட்டம் 2 - தேவைகள் இனங்காணப் படுகின்றன.*

விரும்பத்தக்கவை/சாதித்துக் கொள்ளக் கூடியவை என்பவற்றின் அடிப்படையில் தேவைகள் இனங் காணப்படுகின்றன. அத்துடன், செயல் திட்ட முன்னுரிமைகளுடன் இணைந்த விதத்தில் அவை வரிசைப்படுத்தப் படுகின்றன.

*கட்டம் 3 - செலவு - நலன் பகுப்பாய்வு*

இந்த விரும்பத்தக்க சாதித்துக் கொள்ளக்கூடிய தேவையை நிறைவு செய்து கொள்வதன் மூலம் கிட்டும் பயன்கள் எதிர்பார்க்கப்படும் அபாய ஏதுக்களுடன் ஒப்பிட்டு நோக்கப் படுகின்றன.

*கட்டம் 4 - பிரச்சினைகளைத் தீர்த்தல்*

பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் வாழ்க்கை அனுபவத்தின் பின் விளைவுகள் குறித்து விமர்சனம்.

*கட்டம் 5 - விமர்சனம்*

மூலவளங்கள் மற்றும் எதிர்ப்பு என்பன குறித்த ஒரு மதிப்பீடு. இது பொருத்தமான வரலாற்றுத் தருணம் தானா என்பதும் நிர்ணயம் செய்து கொள்ளப்படுகின்றது.

*கட்டம் 6 - நடவடிக்கை*

சமூக மாற்ற நடவடிக்கை முற்றுப் பெற்றுள்ளது. அதன் பயன்களும் செலவுகளும் குழுவினால் மதிப்பிடப்படுகின்றது. இது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் கலந்துரையாடலுக்குரிய ஒரு விடயமாகின்றது.

..5 பக்கத் தொடர்ச்சி

கட்சிகளிலேயே வழமையாக தமக்கான மாற்று வழிகளைத் தேடி வந்துள்ளனர். ஆனால், இன்று இந்தக் கட்சிகளும் கூட அர்ப்பணிப்பு உணர்வு அற்றவையாகவே இருந்து வருகின்றன என பலர் கருதுகின்றனர்.

ஆனால், இடதுசாரி இயக்கத்துக்கிடையில் ஆக்கபூர்வமான, அதே வேளையில் கொள்கை அடிப்படையிலான மீள் சிந்தனை இப்பொழுது இடம் பெற்று வருவதனைக் காண முடிகின்றது. இலத்தீன் அமெரிக்காவின் இடதுசாரி அமைப்புக்கள் அனைத்தையும் ஆண்டுதோறும் ஒன்று கூட்டும் சாவோபோலா மாநாட்டின் கலந்துரையாடல்களினால் இதனை நிர்ணயம் செய்யக் கூடியதாகவுள்ளது. இடதுசாரி இயக்கத்தின் கோட்பாட்டு ரீதியான மற்றும் நடைமுறை அரசியல் நவீனமயமாக்கலுக்கான பணிக்கு இந்த மாநாடு பங்களிப்பு செய்துள்ளது.

பல்வேறு நாடுகளில் பல்வேறு கட்டங்களில் விரக்தி இப்பொழுது படிப்படியாக அகன்று வருவதுடன், வேற்றுமையில் ஒற்றுமை கண்டு ஒன்றாக இணைந்து கொள்ளும் போக்குகள் தென்படத் தொடங்கியுள்ளன. தேசிய எல்லைகளைத் தாண்டிய விதத்திலும் கூட பல்வேறு அமைப்புக்கள் இப்பொழுது உருவாகிக் கொண்டிருக்கின்றன. இந்த அமைப்புக்கள் உறுதியான ஒரு நிலையில் இன்னமும் வடிவம் பெறவில்லை என்பதனையும் மறுக்க முடியாது.

பல கட்சிகளைக் கொண்ட ஒரு அமைப்பு முறையில் இடதுசாரி இயக்கம், குறிப்பாக அனுகூலமற்ற ஒரு நிலையிலேயே இருந்து வருகின்றது. எனவே, இயக்கங்களைக் கட்டியெழுப்புவதற்கு முன்னர் கட்சிகளை மீளமைப்புச் செய்ய வேண்டிய தேவையுள்ளது. கட்சிகள் தமது இலட்சியத்தில் வெற்றி மீட்ட வேண்டுமானால், அவை மக்களை அடிப்படையாகக் கொண்ட மாற்று வழிகளை பிரதிபலித்து, அவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டியவையாக இருந்து வருகின்றன.

இந்த விஷயத்தில், எதிர்ப்படக் கூடிய இடையூறுகளைக் குறைவாக மதிப்பிட்டுவிட முடியாது. குறிப்பாக அமைப்பு ரீதியான மற்றும் கோட்பாட்டு ரீதியான அறைகூவல்கள் பேரளவில் காணப்படுகின்றன. ஒரு புதிய அரசியல் களம் ஒரு பரீட்சையையும் முன் வைத்துள்ளது. உதாரணமாக, எல்சல்வடோரிலும் நிகாராகுவாவிலும் FMLN மற்றும் FSLN ஆகிய இயக்கங்கள் பல வருட காலப் போரின் பின்னர் இப்பொழுது சட்டபூர்வமான எதிர்க் கட்சிகளாக (சர்வதேச நிதி மற்றும் அரசியல் அச்சுறுத்தலுக்கு உள்ளாகக் கூடிய ஓர் அரசியல் முறைக்குள்) அமர்ந்துள்ளன.

லிபரல்வாத பலகட்சி தேர்தல் முறை, ஒருபுறம் புதிய லிபரல்வாத அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும், மறுபுறத்தில், ஜனநாயக சோஷலிஸ சக்திகளுக்கு இடையில் இடம் பெற்று வரும் போட்டியின் உக்கிரத்தினை தாங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்குமா? அல்லது பெருவில் இடம் பெற்றது போல அவை வீழ்ச்சி கண்டு விடுமா? அல்லது கொலம்பியாவில் இடம் பெற்றது போல அவை இராணுவ ஆட்சிகளாக மாற்றம் கண்டு விடுமா?

இந்த முரண்பாடுகள் மிக ஆழமாக வேரூன்றியவையாக இருந்து வருகின்றன. ஒருபுறத்தில், தேசிய பின்னணியில் நோக்கும் பொழுது, சக்திகளின் சமூக சமநிலை ஜனநாயக பெரும்பான்மையினர் சார்பானதாகவே இருந்து வருவது போல் தோன்றும்; ஆனால், சர்வதேசப் பின்புலத்தில், வணிக முதலாளிகள், தொழில்நுட்ப வல்லுனர்கள், செல்வந்த பூர்ஷ்வாக்கள் போன்ற பிரிவினர்கள் தமது நிர்ணயகரமான போராட்டத்தில் ஐக்கிய அமெரிக்க ஆதரவினைப் பெற்றுக் கொள்ள முடியும்? இந்தப் பின்னணியில், லிபரல்வாதம் தொடர்ந்தும் ஒரு போர்க்களமாகவே இருந்து வரும்.

13 பக்கத் தொடர்ச்சி

கட்டத்தை அடைந்துள்ளோம் என்றும், இனிமேலும் மாற்றம் அவசியமில்லையென்றும் நாம் ஒரு போதும் கூறிவிட முடியாது. வருங்கால வங்கியின் பல கூறுகளை இப்பொழுது இனங்காணக் கூடியதாக உள்ளது என்பதும் அவை எழுச்சியடையத் தொடங்கியுள்ளன என்பதும் உண்மையாகும்.

உலக வங்கித் தொழிலில் முனைப்பான சந்தைச் சக்திகளின் நெருக்குதல்கள், வாடிக்கையாளர்களினால் கோரப்படும் சேவைகள், தொழில்நுட்பத்தின் செல்வாக்கு ஆகிய

அனைத்தும் ஒன்றாக இணைந்து இப்பொழுது பாரம்பரிய வங்கித் தொழிலின் முகத்தோற்றத்தை மாற்றியமைத்து வருகின்றன. வங்கிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளின் வீச்செல்லைகள், இலாப மூலாதாரங்கள், அவற்றின் சார்புரீதியான முக்கியத்துவம், சேவை மட்டங்கள் மற்றும் செலவுக் கட்டமைப்புக்கள் என்பன அடிப்படையில் மீள மதிப்பீடு செய்யப்பட்டு வருவதுடன், அவை வருங்கால வங்கியினை வடிவமைத்து வருகின்றன.

எவ்வாறிருந்தபோதிலும், மிகக் கவனமான பரிசீலனையின் பின்னரேயே பன்முகப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. உலகமயமாக்கலும் அகிலம் தழுவிய வங்கிமுறையும் 1980களின் போக்காக இருந்து வந்தது போலவே, புவியியல் பிரதேசத்தின் அடிப்படையிலோ அல்லது குறிப்பிட்ட ஒரு துறையின் அடிப்படையிலோ சிறக்குமியல்பு 1990களின் போக்காக இருக்கும்.

முன்னேற்றகரமான வங்கித் திட்டமிடல், மூலதன அடித்தளத்தை பலப்படுத்திக் கொள்வதற்கு விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்பது மிகவும் முக்கியமான ஒரு விடயமாக உள்ளது. கண்காணிப்பு அதிகார அமைப்புக்கள், மூலதன அளவு தேவைப்பாடுகளை இப்பொழுது மிகவும் கடுமையான முறையில் அனுசரித்து வருகின்றன. வியாபாரக் கொள்கை முடிவுகள் மற்றும் வெற்றி என்பவற்றின் மிக முக்கியமான அளவுகோலாக சம்பாத்தியங்கள் மீண்டும் ஒரு முறை இப்பொழுது கருதப்படத் தொடங்கியிருப்பதற்கான காரணம் இதுவாகும். வங்கி நிறுவன அமைப்பின் செலவுகள், வங்கிச் சேவைகளின் வீச்செல்லை, கிளை வலைப்பின்னல் அமைப்பு, வங்கிகள் ஒன்றாக இணைவதற்கான சாத்தியக் கூறுகள் ஆகிய அனைத்துமே மூலதனம் என்ற மிகவும் அருமையாக இருக்கும் ஒரு பொருளின் கண்ணோட்டத்திலேயே இப்பொழுது அதிகளவுக்கு நோக்கப்பட்டு வருகின்றன.

மூலதனப் பற்றாக்குறை என்பது நாட்டுக்கு நாடும் பல்வேறு வங்கிகளின் தொகுதிகளுக்கு இடையிலும் வித்தியாசமான ஒரு தாக்கத்தைக் கொண்டதாக இருந்து வருகின்றது. இந்த வகையில், வங்கிகளின் எதிர்காலத்தைப் பொறுத்தவரையில் மூலதனம் என்பது ஒரு முக்கியமான கூறாக இருந்து வருகின்றது. மேலும், அரச தலையீட்டுக்கும் சந்தை ஒழுக்காற்றுக்குமிடையிலான பரஸ்பர செயல் விளைவு எதிர்காலத்துக்கு மிகவும் முக்கியமானதாக இருந்து வருகின்றது. கண்காணிப்பு அதிகார நிறுவனங்கள் மிதமிஞ்சிய அளவுக்கு செயல்முனைப்பான ஒரு பங்கினை வகித்து வருவதானது, சந்தையில் பங்கேற்கும் வங்கிகளுக்கு ஒரு போலிப் பாதுகாப்புணர்வினையளித்து, அவை அதிகளவு அபாய ஏதுக்களை ஏற்பதற்கு ஊக்கமளிக்க முடியும். மேலும், சந்தை ஒழுக்காற்றினை நம்பியிருப்பது மட்டும் திருப்திகரமான பெறுபேறுகளை எடுத்துவர மாட்டாது என்பதனையும் அனுபவத்தின் மூலம் நாங்கள் கண்டறிந்துள்ளோம்.


சர்வதேச வங்கித்தொழில் சந்தைகள் மீதான அமைப்பு ரீதியான மாற்றங்கள் மிகவும் கடினமான ஒரு சூழ்நிலையில் ஏற்பட்டு வருகின்றன. குளறுபடிகள் ஊடு கடத்தப்படும் வேகம் இப்பொழுது அதிகரித்துள்ளது. 1970களின் எண்ணெய் நெருக்கடியை அடுத்து வங்கிகளும் ஏனைய நிதி மத்தியஸ்த அமைப்புக்களும் அடிப்படையில் இந்தப் பணியை மேற்கொண்டிருந்தன. அதன் பின்னர் ஒழுங்குவிதித் தளர்ப்பு, உலகமயமாக்கல், நிதி தொடர்பான புதிய உபகரணங்களின் அலை ஆகிய அனைத்தும் உலகளாவிய நிதி முறைமையின் செயல்திறனை மேலும் அதிகளவுக்கு அதிகரிக்கச் செய்துள்ளன.

விடயங்களை மேலும், அதிகளவுக்கு சிக்கலாக்கி வரும் அம்சம் உலக பொருளாதாரத்தின் இன்றைய நிலையாகும். ஓர் அளவுக்கு கிழக்காசியாவிலும், இலத்தீன் அமெரிக்காவின் சில பகுதிகளிலும் சாதகமான ஒரு வளர்ச்சி ஏற்பட்டு வந்துள்ள போதிலும், உலக பொருளாதாரம் நெருக்கடியான ஒரு நிலையிலேயே இருந்து வருகின்றது. சுழல் முறையில் ஏற்படும் சரிவுகளும், அமைப்பு ரீதியான குறைபாடுகளும் உடனடி எதிர்காலத்தில் நிலைமையை மேலும் மோசமாக்க முடியும். நாம் இருவகையான பணிகளை எதிர்கொண்டுள்ளோம். முதலில் நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடிய சக்திவாய்ந்த நிதிமுறை ஒன்றுக்கூடாக மெய் உலகப் பொருளாதாரத்தின் மீட்சியை பாதுகாத்துக் கொள்வதற்கு நாங்கள் முயற்சிக்க வேண்டும். இரண்டாவதாக, உலக பொருளாதாரம் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு நிலைக்கு வீழ்ந்து செல்வதனை தடுத்து நிறுத்த வேண்டிய உடனடித் தேவையை நாம் எதிர் கொண்டுள்ளோம்.

16 பக்கத் தொடர்ச்சி

லுக்குத் "தெளிவான அறிவைப் பெற்ற பிரசைகள்" என்பது முன்தேவையாகும். பரந்தளவிலான முறைசாராக் கல்வி, தொடர்பு சாதன உத்திகள் என்பவை, உள்நாட்டு சூழல் பற்றிய விடயங்கள் மீதும், சூழல் கெடுதலைத் தடுப்பதற்கான உபாயங்கள் மீதும் பொதுசன விழிப்புணர்வினை ஏற்படுத்தக் கூடியவையாகும்.

துரித கைத்தொழில்மயமாக்கல் என்ற உத்தியைப் பின்பற்றி வருகின்ற இலங்கை போன்ற நாட்டில் தொழில் முயற்சியாளரிடையே – குறிப்பாக, கைத்தொழில் முதலீட்டாளர், வர்த்தக விவசாயிகள் ஆகியோரிடையே – விழிப்புணர்வினை அதிகரித்தல் அவசியமானது. சூழலை மாசபடுத்துபவர்களின் நடவடிக்கைகளை மட்டுப்படுத்தி, அவர்களின் தேவைகளை வரையறுத்து, அவர்களுக்கு பொறுப்புக்களை ஒப்படைப்பதன் மூலமே சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயற்றிறன் வாய்ந்தவையாக மாற்ற முடியும். தொழில் நுட்பம் சார்ந்த மூலவளப் பாதுகாப்பு கொள்கைகளின் நேர்க்கணிய நன்மைகள் பற்றி மேற்கு நாடுகள் ஆய்வு செய்து நிறுவியுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் வியாபாரத்திற்கும், கைத்தொழிலிற்கும் நிதியியல் ரீதியான நன்மைகளை வழங்கமுடியும். இந்நிலையில் மாசுபடலை மேற்கொண்டவர்கள் பொறுப்பினை உணர்ந்து, தாமாகவே முன்வந்து சரியான செயற்பாடுகளை மேற்கொள்வர்.



33776

... சல திணைக்களத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண் : QD/57/News/93

"ஜனநாயகம், எமது நாடுகளில், இந்தக் கட்டத்தில் அரசினைப் பலவீனப்படுத்தும் ஒரு விடயமாக இருக்க முடியாது."

அலெஜன்டாரோ பென்டானா

மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பிரிவு வெளியீடு

பிரதி விலை : ரூ. 10/-
வருட சந்தா : ரூ. 120/-

உரிய முறையில் "பொருளியல் நோக்கின்" பெயரைக் குறிப்பிட்டு, அதில் இடம்பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

யுனைற்ரெட் மேர்ச்சன்ஸ் லிமிற்ரெட், கொழும்பு 13.